# தமிழ் மணி

வாரப்பதிப்பு

மணி 14 ] சென்னை ஞாயிற்றுக்கிழமை (14-8-1949) [ ஓசை 41


★

## சுதந்திர ஆண்டு இரண்டு

இந்தியா சுதந்திர மடைந்து இரண்டு ஆண்டுகளாகின்றன. நாம் பூர்ண சுதந்திரமடைந்து விட்டோமா? இல்லை; மாகாத்மா காந்தி சொன்ன சுயராஜ்யத்தைப் பெற்று விட்டோமா? இல்லை; நமது சுதந்திரம் எப்படி இருக்கிறது? அன்று அந்நியர் வகுத்த வழிகளில் தான் இன்னமும் போய்க்கொண்டிருக்கிறோம். குடியிருக்கப் போதிய இடம், கட்டப் போதிய துணி, உண்ணப் போதிய உணவு இல்லாமல் பல கோடி கணக்கான மக்கள் இன்னமும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கஷ்டங்கள் நீங்கி, மக்கள் நிம்மதியாக வாழ்க்கை நடத்தப் போதிய வசதிகள் கிடைத்தாலொழிய, சுதந்திரம், சுயேட்சை, சுயராஜ்யம் என்பதெல்லாம் வீண். வரும் வருடத்திலாவது மக்கள் இன்புற்று வாழ்வதற்கான வழியில் சுதந்திர சர்க்கார் வழி வகுக்க மென்று நம்புவோமாக.

★






மதுரை பாண்டிய மன்னர் அரண்மனையிலேயே அடைபட்டிருந்த இளம் மங்கை, கனகராணியின் யௌவன உள்ளம் குமுறியது. சுதந்திரத்தைத் தேடித் துடித்தது வீரச் செயல்கள் புரிய, சுதந்திரத்தைநாடி ஓடியது. பருவத்துக்கு ஏற்ற பக்குவமடைந்திருந்த அவள் உள்ளத்தில் அவளையும் அறியாமலே பலபல சிந்தனைகள் தோன்றின. அவள் சிந்தனைகளை அடக்கிக் கட்டுப்படுத்த முயன்றும், அவள் வீரஉணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பாண்டிய, சேர, சோழ பழம் பெரும் வீரர்கள், வீரப் பெண்மணிகள் கதையைக் கேட்டுக் கேட்டு, இயற்கையிலேயே அவள் உள்ளமும் அத்தகைய வீரசிகாமணிகளில் ஒருவளாக விளங்க எண்ணினள். இயற்கை உணர்ச்சி அவளைத் தூண்டிவிட்டது. என்றாலும், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் ஏங்கியிருந்தாள். எவ்வளவு காலத்துக்குத்தான் அந்த அரண்மனையிலே, அரச வம்சத்தினர் கண்மணியாக, சித்திரப் பொம்மையாக கனகா இருந்துகொண்டிருப்பாள்? எப்படியும் அவள் எதிர்காலத்தை நிர்ணயிக்க உறுதிகொண்டாள். அதற்கான சந்தர்ப்பத்தைத் தேடிக்கொள்ளுவதென்று தீர்மானித்தாள். பாண்டிய அரச வம்சத்தினர் எல்லோரையும் அவள் உள்ளன்புடன் நேசித்தாள். எல்லோரிடமும் அபார அன்பு கொண்டிருந்தாள. என்றாலும், பாண்டிய-சேரநாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அவளுக்கு உண்டென்பதை உணர்ந்தாள். அந்த இரு தேசங்களின் எதிர்காலம் பெருமையுடன் விளங்கவேண்டும்; அத்தகைய பெருமைக்கு அவளும் காரணமாக இருக்கவேண்டும் என்ற ஆவல் அவள் இளம் உள்ளத்திலே வேரூன்றியது. அந்த ஆவல் வரவர ஆழமாகப் பாய்ந்தோடியது. அதற்கேற்ற சமயசந்தர்ப்பங்களை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பாண்டிய-சேர நாடுகளின் தோல்வியும், சீரழிவும் அவள் கேட்டறிந்த கதைகள் அதன் பின் அவள் தந்தை குணசீலன், மாமன் குலவரதன், இளவரசன் குலசேகர பாண்டியன், கற்பூரன், பூபதி, இளவரசி குமாரி, புஷ்பவதி, குறிப்பாக அழகேஸ்வரி முதலியோரின் சேவையாலும், தியாகத்தாலும், அரும்பெரும் வீரச்செயல்களாலும் பாண்டிய-சேர நாடுகள் தலைநிமிர்ந்து நிற்கின்றன என்ற உண்மையையும் கனகா நன்கறிந்திருந்தாள். அவர்கள் சேவையோ அபாரம்; பொறுப்பும் அதிகம். அவர்கள் பொறுப்பிலும் கனகா பங்கெடுத்துக்கொள்ளத் தீர்மானித்தாள். அவர்களுக்கும் நடுத்தர வயதாகிவிட்டது. பாண்டிய மன்னர் மகாராணி, சேரமன்னர், தளகர்த்தர் வீரசிம்மன், விக்ரவர்மன் எல்லோரும் தொண்டு கிழவர்களாகி விட்டார்கள், பாண்டிய-சேர நாடுகளுக்கு மும் அதிகத் தொண்டும், சேவையும் செய்யக்கூ ய இளைஞர் யாருமில்லை. இளமங்கை கனகராணி ஒருவளே. ஆனல்; அவள் நடமையை, பொறுப்பை நன்குகேட்டு உணர்ந்திருந்தாள். உணர்ந்ததோடு மட்டுமல்ல; இரவுடகலாக அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள் பொறுப்பை நிறைவேற்றுவதோடு அவள் மனம் திருப்தியடைய வில்லை. பொறுப்பைச் சரிவர, பெருமையுடன் நிறைவேற்றியே தீருவதென்ற உறுதி கொண்டாள். சபதமும் செய்தாள். இந்த எண்ணமே அவள் சிந்தனையைச் சதா கலக்கிக் கொண்டிருந்தது. அவள் உள்ளத்தில் எழுந்த இந்த உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியாதவளாய், படுக்கையறையிலிருந்து வெளியேறினாள். அந்தப் புரத்தைக் கடந்து, அரண்மனை நந்தவனத்துக்குச் சென்றாள். பூர்ண நிலவொளியிலே மரஞ்செடி கொடிகளின் இயற்கை வனப்பை நுகர்ந்து இன்புற்றாள். இயற்கையில்மனதைப் பறிகொடுத்தாள். ஆகாயத்திலே சஞ்சரிக்கும் பூர்ண சந்திரனையும், அதை வட்ட மிடும் வெண்ணிற மேகங்களையும், நட்சத்திரங்களையும் ஏறெடுத்துப் பார்த்துப் புன்னகை செய்தாள். வசந்த மண்டபத்தினுள்ளே சென்றாள். அங்கிருந்து, பழைய மண்டபத்துக்குச் சென்றாள். எங்கும் ஒரே நிசப்தம். அந்த அழகிய நந்தவனத்திலே ஒரு வன தேவதை போல் சுதந்திரமாகச் சுற்றி வந்தாள். அடர்ந்த மரஞ்செடி, கொடிகளினூடே அச்சமின்றிச்சென்றாள். பழைய மண்டபத்தினருகில் வந்ததும், யாரோ பேசிக்கொண்டிருந்த சப்தம் கேட்டுத் திகைத்துப்போனாள்! முகமூடியை நன்றாக இழுத்துப் போட்டுக்கொண்டு, சப்தம் வந்த திசையை நோக்கி அரவஞ் செய்யாமல் நடந்தாள். மரங்கள் அடர்ந்த இருளிலே பதுங்கிப்பதுங்கிச் சென்றாள். இருள் நிறைந்திருந்த ஒரு பெரிய மரத்தின் கீழ் இருவர் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு, கனகாவும் அருகிலிருந்த மற்றொரு பெரிய மரத்தின் கீழ் பதுங்கி யிருந்து கொண்டு உற்றுக் கேட்டாள். பேசிக் கொண்டிருந்த இருவரும் இளைஞர். அவர்கள் பேசிக் கொண்டிருந்தது தெளிவாகக் கேட்ட போதிலும, அவர்கள் பேசிக்கொண்டிருந்ததின் மர்மம் விளங்கவில்லை. ஒன்று மட்டும் கனகாவுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அவர்கள் சோழநாட்டைச் சார்ந்த பாண்டிய நாட்டின் எதிரிகள்; பாண்டிய-சேரநாடுகளைப் பழிக்குப் பழி வாங்க கங்கணம் கட்டியிருந்தார்களென்பது தெரிந்து விட்டது. அந்த இரு இளைஞர்களும் யார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை; அவர்கள் இருவரையும் கனகா தனிமையாக எதிர்த்திருப்பாள். ஆனல், அவளிடம்

ஆயுதங்கள் இல்லை. மேலும், அவர்கள் இன்ன செய்த சதி என்ன, அவர்கள் திட்டமென்ன வென்பதை அறிய கனகா பொறுமையுடன் காத்திருந்தாள். அதற்குள் ஏதோ அரவங் கேட்டு அந்த இருவரும் சட்டென அந்த மரத்தடியிலிருந்து மாயமாக மறைந்து விட்டனர்! கனகா சிறிது ஏமாற்றமடைந்தாள்! என்றாலும், அவள் மனம் தளரவில்லை; அங்கு கேட்ட அரவம் என்னவென்பதைக் கவனித்தாள். மீண்டும் அந்த அரவங் கேட்கவில்லை. எனவே, மறைந்து போன அந்த இருவரும் மீண்டும் அதே இடத்துக்குத் திரும்பிவரலாமென எதிர்பார்த்தாள். மறைந்திருந்தபடியே கூர்ந்து கவனித்தாள். யாரையும் காணவில்லை; சிறிது நேரம் காத்திருந்தாள். யாரும் திரும்பிவரவில்லை. மரத்தடியிலிருந்து பேசிக்கொண்டிருந்த இருவரும் எப்படி மாயமாக மறைந்துவிட்டார்கள்; அங்கு ஏதேனும் ரகசிய வழிகள் இருக்கின்றனவா; அப்படியானல், அந்த ரகசிய வழிகள் எதிரிகளுக்கு எப்படித் தெரிந்திருந்தன. என்பதைப் பற்றியே கனகா யோசித்துக்கொண்டிருந்தாள். அவளே நேரில் சென்று அந்த ரகசிய வழிகளைக் கண்டுபிடிக்க எண்ணினாள். ஆனல், அதற்கு அது சமயமல்லவென்று எண்ணி, மெதுவாக மறைந்திருந்த இடத்திலிருந்து வெளியில் வந்தாள். முன்போலவே மரஞ் செடி கொடிகளின் இருளில் மறைந்து, மறைந்து பழைய மண்டபத்துக்கு வந்தாள். அவள உள்ளத்திலே ஒரு ஆனந்தம்; ஒருவித உணர்ச்சி. அவள் உள்ளம் எதை நாடிக் குமுறிக்கொண்டிருந்ததோ, அதற்கு விதை போட்டாகிவிட்டது; இனிமேல் அவள் வீரத்தையும், சாதுர்யத்தையும் காட்டச் சந்தர்ப்பம் வரலாம் என்று மனதிருப்தியடைந்தாள். இந்தத் திருப்தியுடனும், முகமலர்ச்சியுடனும் உள்ளம் துடிக்க அரண்மனையை நோக்கி நடந்தாள். மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். அரவஞ் செய்யாமல் அவள் அறையை நோக்கி நடந்தாள். அவள் அறைக் கதவைத் திறக்கப்போகும் சமயத்தில், "கனகா......கண்ணே எங்கு சென்றிருந்தாய்?" என்று கேட்கும் சப்தம் கேட்டுத் திகைத்து நின்றாள்! மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். அவளைநோக்கி அழகேஸ்வரி புன்னகையுடன் வருவதைக் கண்டு, பேசாமல் நின்றாள்.

கனகா...கனகா...இந்த நள்ளிரவில் எங்குசென்றிருந்தாய் கண்ணே?...நான் உன் அறைக்கு வந்தேன்...உன்னைக் காணவில்லை...அண்ணி புஷ்பா அறைக்குப் போயிருக்கலாமென்று எண்ணி...உன் அறையிலேயே காத்திருந்தேன்...உன்னைக் காணவில்லை...கடைசியாய் அண்ணி புஷ்பா அறைக்கு...

அத்தையம்மா...நான் உங்களிடமே வர நினைத்தேன்...தூக்கம்வரவில்லை...உங்களுக்குத் தொந்திரவு கொடுக்கக் கூடாது என்று எண்ணி நந்தவனத்துக்கு...

நந்தவனத்துக்கா?...கனகா...கண்மணி...நந்தவனத்துக்குத் தனிமையாகவா போயிருந்தாய்?...

ஆம்...அத்தையம்மா......தனிமையாகத்தான் போயிருந்தேன்...ஏன்?...எனக்கு என்னபயம்?...அத்தையம்மா நந்தவனம் முன்போல்...உங்கள்காலத்தில் இருந்ததுபோலவா இருக்கிறது?...

கண்மணி...அது உண்மைதான்...என்றாலும், நீ ஒரு இளம் பெண்...தனிமையாகப் போகலாமா?......என்னைக் கூப்பிட்டிருந்தால்...

அத்தையம்மா......உங்களுக்கு ஏன் சிரமம் கொடுப்பது என்று எண்ணினேன...இருக்கட்டும்; அத்தையம்மா நீங்கள் எத்தனை முறை...எந்தெந்த வேஷங்களில் நந்தவனம் சென்றிருக்கிறீர்கள்?...தனிமையாகத்தானே சென்றீர்கள்?......அப்பொழுதெல்லாம் நந்தவனத்துக்குப் போவதென்றால் அபாயம்! இப்பொழுதோ அப்படியொன்றுமில்லை!

கண்மணி.:....அதெல்லாம் பழம் கதை!...அந்தக் காலம் வேறு...இந்தக் காலம் வேறு...அந்தக் காலம் ஆபத்தையும்...அபாயத்தையும் தேடியே நாங்கள் சென்றோம்......ஆபத்து என்றால்...எனக்கோ......இளவரசிக்கோ...அண்ணி புஷ்பவதிக்கோ உதவிக்கு வர...உங்கள் மாமா...அண்ணு கற்பூரன் முதலியோர் கழுகுகள்போல் சுற்றிக்கொண்டிருந்தார்கள்...இன்று...இந்தக் காலத்திலே உனக்கு ஆபத்துக்கு உதவ யார் கண்ணே இருக்கிறார்கள்?...

அத்தையம்மா...ஆபத்து இருந்தால் தானே?...அப்படியே ஆபத்து வந்தால்...நீங்கள் இல்லையா?...மாமா...சித்தப்பா...முதலியோர் இல்லையா?...

மெய்தான் கண்ணே...என்றாலும்...எங்களுக்கு இருக்கிற வேலைகள் போதாதா?...உன்னையுமல்லவோ கண்காணித்துக்கொண்டு இருக்கவேண்டும்?...

அத்தையம்மா...உங்களை யார் கண்காணித்து வந்தது?...நீங்கள் எப்படி ஆபத்தைத் தேடிச்சென்று சமாளித்து வெற்றி பெற்றீர்கள்?...அந்த உரிமை எனக்கு இல்லையா அத்தையம்மா?...நானும் என்னாலான கடமையைச் செய்யவேண்டாமா?...

(8-பக்கம் பார்க்க)

மனோரதம்

# 200 கோடி டாலர் அரோகரா!

பணம் பாதாளம்வரையில் பாயும்; ஈட்டி எட்டியவரையில் தான் பாயும் என்று பணத்தின் பெருமையைக் குறித்து பழமொழியொன்று வழங்கப்படுகிறது. ஆனல், அந்தப் பழமொழியைக்கூட பொய்த்துப் போகும்படிச் செய்துவிட்டனர் சீன கம்னிஸ்டுகள். பாதாளம் வரையில் பாயும் வல்லமை பொருந்திய பணம் சீனமக்களின் உள்ளத்திலே பாய முடியாமற்போயிற்று! பணத்தின் உதவியை மாத்திரம் கொண்டு எந்தக் காரியத்தையும் சாதித்து விடலாம் என்ற பைத்தியக்கார எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது சீன. உலகிலேயே பணக்கார நாடு என்று சொல்லப்படும் அமெரிக்காவே இதை உணர ஆரம்பித்துவிட்டது. பணம் பாதாளம் வரையில் பாயும் என்ற நம்பிக்கையை அமெரிக்கா இழந்துவிட்டது. அது எட்டிய வரையில் தான் பாயும் என்பதையும், பணம் என்னும் ஆயுதத்தால் தாக்கப்பட முடியாத பொருள் வேறென்று இருக்கிறது என்பதையும் இப்பொழுதுதான் உணர ஆரம்பித்திருக்கிறது அமெரிக்கா.

இந்த உண்மையை அமெரிக்க வெளி விவகார மந்திரி தோழர். டீன்ஆக்கீஸன் அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார். அவர் சமீபத்தில், ஜனதிபதி ட்ரூமனிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சீனவை கம்யூனிசப் படையெடுப்பிலிருந்து காப்பாற்ற 200 கோடி டாலர்களை அள்ளி அள்ளி கொடுத்தோமே தவிர, அதனல் கண்ட பலன் ஒன்றுமில்லை என்று முகாரி பாடுகிருர் இதுதான் அந்த அறிக்கையின் சாரம். அந்த அறிக்கை 1054 ப்க்கங்களைக் கொண்டது என்று சொல்லப்படுகிறது. இந்த 1054 பக்கங்களும் 200 கோடி டாலர் எந்தவிதத்தில் நாசமாயிற்று என்பதை விளக்கிக் கூறுகிறது. முடிவாக தோழர். டீன் ஆக்கீஸன் சாற்றும் குற்றம் என்னவெனில், சியாங்கே ஷேக்கின் சர்க்கார் திறமையற்றது; அதனலேயே கோமின்டாங் கட்சியிடம் மக்களுக்கு வெறுப்பும், கம்யூனிசத்தின் மீது காதலும் வளர்லாயிற்று என்பதாகும். அமெரிக்கா, சீன உள்நாட்டுப் படைகளைக் கோமின்டாங் கட்சி வசம் திருப்பப் பார்த்தது; அதற்காகவே அவ்வப்போது கோடிக்கணக்கான டாலர்களைத் தந்து உதவிற்று. ஆனல், அந்த டாலர்களால் மக்கள் உள்ளத்தைத் துளைக்க முடியவில்லை. தற்காலீகமாக ஒரு சாரரின் வயிற்றுப் பிழைப்புக்குத்தான் அந்த டாலர்கள் உதவி புரிந்தனவேயன்றி கம்யூனிசத்தைநாடிச் செல்லும் சீன மக்களின் மனதைத் துளைக்க அந்த டாலர்களுக்குச் சக்தியில்லாமற் போயிற்று. இதற்குக் காரணம், அமெரிக்க டாலர்கள் நல்ல எண்ணத்தோடு சீனவுக்குள் நுழையாதது தான்.

பொதுவாக உதவி என்பது மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டுமே தவிர, வாழ்க்கைத்துன்பங்களை மறைக்கக் கூடியதாக இருத்தல் கூடாது. இது புண்ணை மூடிவைப்பது பாலவே யாகும். புண்ணை மூடி வைப்பதால் புண்ணில் புரையோடுமே தவிர, புண் ஆருது. அமெரிக்கா, சீனவுக்குக் கொடுத்த டாலர்கள் அத்தனையும் சீனவின் பொருளாதார சீர்கேட்டை போக்கும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்டதல்ல. அந்தச் சீர்கேட்டின் விளைவாகத் தலைதூக்கும் கம்யூனிஸத்தை மட்டந் தட்ட போர்க் கருவிகள் வாங்குவதற்காக அளிக்கப்பட்டதாகும். ஆகவே, எந்த நோக்கத்தோடு உதவி அளிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிற்று. அதாவது, அடக்கு முறைக்குப் பயன்பட்டது. சர்க்காரின் அடக்கு முறையால் மக்களின் ஆத்திரம் அதிகரித்தது ஆத்திரங்கொண்ட மக்கள் சர்க்காருக்கு எதிராக கம்யூனிஸ்டு கட்சியை ஆதரிக்க ஆரம்பித்தனர். நாளடைவில், சர்க்கார், மக்களுக்குடைய நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தது. ஆனல், இப்படிப்பட்ட நிலைமை சீன சர்க்காரின் கையாலாகாத்தனம் என்று சித்தரித்துக் காட்டுகிறது அமெரிக்கா. தேசீய கட்சிரின் தோல்விக்கு முக்கியமாக மூன்று காரணங்களை குறிப்பிடுகிருர் தோழர். டீன்ஆக்கீஸன். அதாவது:—

1. தலைவர்களுக்கு நெருக்கடியை சமாளிக்கும் திறமையில்லை. துருப்புகள் போராடும் குணத்தை இழந்து விட்டன. சர்க்கார் பொதுஜன ஆதரவை இழந்து விட்டது.

2. கம்யூனிஸ்டுள் கடும் கட்டுப்பாட்டினலும், மூர்க்கத்தினலும் மக்களின் விடுதலைக்காகப் போராடுபவர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டனர்.

3. தேசீய கட்சி தானகவே சிதைந்து விட்டது. அதைத் தோற்கடிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை.

என்று குறிப்பிட்டிருக்கிருர். தலைவர்களுக்கு நெருக்கடியைச் சமாளிக்கும் திறமையில்லை என்பதுகூட ஆச்சரியமல்ல; துருப்புகள் போராடும் குணத்தை இழந்து விட்டன என்று சொல்லப்படுவதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்! ஒரு நாட்டு துருப்புகளே அந்நாட்டுக்காகப் போராடும் குணத்தை இழந்து விடுவதென்றல், அது எதைக் காட்டுகிறது? ராணுவத்துக்கே ஆட்சியாளர் மீது நம்பிக்கை இல்லை; அந்த ஆட்சியின் கீழிருக்க அவர்கள் விரும்பவில்லை என்பது தானே பொருள்? இங்ஙனம் துருப்புகளே நம்பிக்கையை இழந்து விட்டபிறகும், சர்க்கார் என்பதாக ஒன்று இருக்கிறது என்று எப்படிச் சொல்லமுடியும்? பொதுஜன ஆதரவை இழந்து விட்டால் அது எப்படி சர்க்காராகும்? ஏதோ சில சுயநலக்காரர்களின் எதேச்சாதிகாரம்தான் அங்கு நடை பெறுகிறது என்று தானே சொல்ல வேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையிலே அமெரிக்கா 200 கோடி டாலர் கொடுத்துதான் என்ன பிரயோஜனம்? எனவே தான் அந்த 200 கோடியும் விழலுக்கிறைத்த நீராயிற்று என்று வேதனைப் படுகிருர் தோழர் டீன்ஆக்கீஸன்.

அமெரிக்கா சீனவுக்கு வெறும் டாலரைக் கொடுத்துதவிற்றே தவிர, அந்த டாலரால் சீன மக்கள் வாழவேண்டும் என்ற எண்ணம் அதற்குக் கொஞ்சங்கூட கிடையாது. 200 கோடி டாலர் என்றல் அற்ப சொற்பமான தொகையல்ல. அந்தத் தொகை முழுவதும் சீனவின் பொருளாதார அபிவிருத்திக்கென செலவிடப்பட்டிருந்தால் இன்றைய தினம் ஏற்பட்டிருப்பது போன்ற சீர்கேடான நிலை ஏற்பட்டிருக்காது. கம்யூனிசமும் தலையெடுத்திருக்க வழியிருந்திருக்காது.

ஆனல், இப்படி சீனசர்க்காரும், அமெரிக்காவும் கூடிக்கொண்டு கம்யூனிஸ்டுகளுக்கெதிராக யுத்த



## சுதந்திர அஞ்சலி

[ரம்போலா மாஸ்கரேனஸ் M. A.]

பன்னெடுங்கால் கீர்த்தி உயர் பரதநாடு!
பாரில் ஒரு சுடர்மணியாய்த் திகழ்ந்த நாடு!
நன்னயமார் மதிமன்னர் ஞாலம் போற்ற
நலமெல்லாம் போருந்துமுறை ஆண்ட நாடு!
பின்னருற்ற சீரழிவால் பிறர்கைக்காகி
பிரித்தாண்ட சூட்சியினல் பெரிதும் நைந்து!
இன்னலுற்ற இழி நிலமை எய்திற்றம்ம;
இதுகண்டார், துடித்தெழுந்தார் இணையில் வீரர்!

சுதந்திரம் எம் பிறப்புரிமை என்ற வாக்கைச்
சூளுரையாய் முழக்கினர் நம் லோக மான்யர்;
இதம் தருமவ் வீரவுரை இதயங்கோண்டு
லஜபதிராய், தேசபந்து, பப்தீஸ ஜோசப்,
சிதம்பரனர் உள்ளிட்ட சான்ருேர் தங்கள்
திகழ்ஆவி உடல் போருளைத் தந்துகாத்தார்;
பதமறிந்து சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தார்;
பழியறியா வழியினிலே பெம்மான் காந்தி!

இந்துக்கள் மகமதியர் என்றபேதம்
இந்நாட்டில் இனியொழிக; இந்தியத்தாயின்
சோந்தத்தில் உரிமையினில் உயர்வுகாண்போம்
சுகம்பெறுதற் குரியவழி, சுகிர்தவேத
வந்தனைக்கு வேண்டுவன வாகாய்நாட்டி
வாழ்ந்திடுவோம்; வளஞ்செழிக்க; வற்ருஇன்பம்
தந்திடுநன் முறையினிலே எங்கள்நாடு
தழைத்தோங்க இறைவனருள் போழிகமன்னே!

## மனோரதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ளவாடங்களுக்கென அத்தொகையில் பெரும் பகுதியை செலவிட்ட காரணத்தால் கம்யூனிசம் வளர ஆரம்பித்தது. பார்த்தீர்களா பணத்தின் பக்குவத்தை! பணம் பத்துவிதம் செய்யும் என்பார்களே, அதிலே ஒரு விதம் தான் சீனாவின் இன்றைய நிலை போலும்! பணக்கார ஏதேச்சாதிகார ஆட்சியை நிலைநிறுத்துவதற்கென அமெரிக்கா அள்ளிக் கொடுத்த 200 கோடி டாலர் பணக்கார தன்மையையே சீனாவிலிருந்து விரட்டிவிட்டு, தொழிலாளர் ஆட்சியை நிலைபெறச் செய்ய ஏதுவாயிற்று!

மேலும், அமெரிக்கா சீனாவுக்கு அளித்த உதவி ஜனநாயகம் நிலைபெற வேண்டும் என்ற எண்ணத்தோடு அளிக்கப்பட்டதுமல்ல. சீன சர்க்காரின் ஏதேச்சாதிகாரத்துக்கு ஆதரவு கொடுத்து சர்க்காரைத் தனது கைப்பொம்மையாக ஆட்டி வைத்துக்கொண்டும், அதன் மூலம் கம்யூனிஸ்டுகளை மட்டந்தட்டிவிடலாமென்றும் மனப்பால் குடித்தது அமெரிக்கா. ஆனால், சீன சர்க்காரின் ஏதேச்சாதிகாரம் சீன மக்களிடையே வெறுப்பை வளர்த்துவிட்டது.

இங்ஙனம் பல வழிகளிலும் மக்களின் ஆதரவை இழந்துவிட்ட சீன சர்க்கார், கம்யூனிஸ்டுகளைப் பார்த்து, அவர்களெல்லாம் ரஷியாவின் கையாட்கள் என்று பழிப்பதிலோ, குற்றஞ்சாட்டுவதிலோ ஏதேனும் அர்த்தமுண்டா? கோமின்டாங் கட்சியார் இங்ஙனம் அமெரிக்காவின் கையாட்களாக இருந்துகொண்டு நாட்டையே கெடுப்பது மல்லாமல், கம்யூனிஸ்டுகள் மீதும் குற்றஞ் சாட்டிக்கொண்டேயிருந்தால், நிலைமை மேலும், மேலும் மோசமாகுமேயன்றி சாதகமான நிலைமை ஏற்படாது.

எனவே, தோழர் சியாங்கேஷேக் இனியேனும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுவதாக இருந்தால், உடனே, சர்வ கட்சிகளையும்கொண்ட ஒரு கூட்டு சர்க்கார் ஏற்படுத்த முன்வரவேண்டும் இதுகாறும் இதனைச் செய்திருந்தால் சீனா இவ்வளவு தூரம்சீரழிந்திருக்காது. போனது போகட்டும்; இனியேனும் கம்யூனிஸ்டுகளுடன் ஒரு சமரசத்துக்கு வந்து, ஆவன செய்வது தேசியசர்க்கார் கடன். இல்லையேல் கூடிய விரைவில் சீனா முழுவதையும் கம்யூனிசம் விழுங்கி விட்டாலும், அதுகண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அமெரிக்காவும் அதைக் கண்டு அலறப் போகிறது என்பது திண்ணம்.

---

# காதல் யாத்திரை!

[சூர்ணி]

‘எங்கெங்கும் காணினும் காதலடா’ என்ற எண்ணம் என்னை சுழன்று கொண்டிருந்தது.

புரட்சிப் புலவர்களிலிருந்து விறட்சிப் புலவர் வரைக்கும் காதலைப் பற்றி, கம்பனையே தூக்கி அடிக்கும் அளவுக்கு, வர்ணித்து இருக்கிறார்கள். காதல் மகத்துவம் இப்படி இருக்கிறது!

கவிஞர்களிடத்திலும், புலவர்களிடத்திலும் மட்டிலுமா இருக்கிறது காதல்! காலேஜிலே காதல், (இங்கு தான் காதலே உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள் காதல் நிபுணர்கள்!) கடைத்தெருவிலே காதல்; நாட்டிலே காதல்; ஏட்டிலே காதல், கதைகளிலே காதல் கதையில்லாத காதல் இல்லை! காதல் இல்லாத கதையும் இல்லை! இப்படி இருக்கிறது காதலின் பெருமை கதைகளிலேயே! இங்கு மட்டுமா காதல்! அங்கும், ஏன் எங்கும் காதல் தான். முப்புறம் எரித்த முனி புங்கவருக்கும் காதல், தலைமேலேயே! இந்திரன் காதல், சந்திரன் காதல், கண்ணன் காதல்; ராவணன் காதல்; வேலன் காதல், ராமன் காதல்! இவை சேர்ந்து இராமாயணக் காதல்; இராமாயணக் காதலிலிருந்து கம்பருக்குகாதல்; கம்பர் காதலிலிருந்து அவரது சிஷ்ய கோடிகளான வம்பர் அன் கம்பெனியின் காதல்! இப்படி உலகமே காதலில் இருக்கும்போது, நான் மட்டும் காதல் இல்லாமல் இருக்கிறேனே என்ற கவலையே பெரிய கவலையாப்போச்சு எனக்கு.

ஒரு முடிவுக்கும் வந்து விட்டேன், காதல்—அல்லது, சாதல்! இவை இரண்டில் ஒன்றை ஒருகை பார்த்து விடுவதே சரி என்று புறப்பட்டு விட்டேன் காதலைத்தேடி.

காதலைக் கண்டு பிடிக்க, பஸ்ஸில் போவதா, ரயிலில் போவதா, டிராமில் போவதா, அல்லது, விமானத்தில் போவதா, கப்பலில் போவதா, அல்லது கால் நடையாகவே போய்க் கண்டு பிடித்து விடலாமா? என்ற பிரச்னை எழுந்து விட்டது. இப்போது அதாவது காதல் பிரச்னை.

முதலில் டிராமில் போய்ப் பார்ப்போம் என்று, எங்கு, எப்படியோ போகிற டிராமில் “முக்காலணா டிக்கட் கொடப்பா,” என்று கேட்டு வாங்கிக் கொண்டு காதலைக் கண்டு பிடிக்க ஆயத்தமானேன். ஜன நெருக்கடியில் என் காதல், கசங்கிப்போய் விட்டது; பேசாமல் இறங்கிவிட்டேன்!

சரி என்று காதல் கணக்கில் முக்காலணவை எழுதி விட்டு, பஸ்ஸில் ஏறினேன், “எவ்வளவு அப்பா டிக்கட் என்றேன். நீங்கள் எங்குபோகனும் என்று கேட்டார்; நான், பஸ் எங்கப்பா போகுது என்றேன், திண்டிவனம் போகுது என்றார். சரி ஒரு டிக்கட் கொடப்பா, எங்கு போனால் என்ன, நமக்கு வேண்டியது காதல் தானே என்றுமனதில் நினைத்துக்கொண்டு,ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டேன். வண்டியும் புறப்பட்டது. கிழவிகளைத் தவிர, வேறு எந்த நாரீமணியும் என் காதல் பஸ்ஸை நாடவில்லை; சலிப்புற்று செங்கல்பட்டிலேயே இறங்கிவிட்டேன்.

சரி, இது பெரிய ஜங்ஷனுச்சே, இப்படியே ரயில் ஏறி, காதலை கண்டு பிடித்து விடலாம் என்ற முஸ்தீப் போடு, இப்போ எந்த ரயில் வந்திருக்குது என்றேன் ‘திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்’ என்றார் ஒருவர். டிக்கட்டும் வாங்கியாச்சு; ரயிலிலும் ஏறியாச்சு; எக்ஸ்பிரஸும் புறப்பட்டது. கண்ணைக் கொண்டு காதலை கடாவினேன். இப்பேர்பட்ட கும்பலில், காதலை கண்டு பிடிப்பது கஷ்டம் என்று, விழுப்புரம் ஜங்ஷனில் இறங்கி, இரண்டாம் வகுப்புக்கு மாற்றிக் கொண்டேன். “கண்டு விட்டேன் காதலை! காதலுக்கேற்ற கன்னி; கன்னிக்கேற்ற காதல்! காதலிக்கேற்ற காதலன்; நவ நாகரீகமாக உடை அணிந்துள்ள ஓர் அதிரூப நாரீமணி எதிர்சீட்டில் உட்கார்ந்திருந்தாள்.

அவளைப் பார்த்தேனோ, இல்லையோ, என் எண்ணமெல்லாம் எமலோகம் வரைக்கும் கூடப்போய்பார்த்து விட்டு வந்து விட்டது!

‘இந்தக் காதல் நாரீமணி என்னைக் காதலித்து விட்டாள் என்று வைத்துக்கொள்வோம். அடடா! நான் எப்படி காதல் செய்வேன் தெரியுமா காதலியிடம்! என் காதலியும் என்னை கலியாணம் செய்துகொள்ளு’ எனபாள். நானும், ‘கண்ணே, மணியே, கற்கண்டே, காதலியே. நம்முடைய காதலுக்கு தடையாக, ஜாதியும், பணமும் குறுக்கே நிற்கின்றதே. உன் பெற்றோர் சம்மதிப்பார்களா? அப்படி உன்பெற்றோர் சம்மதித்தாலும், உன் உற்றார் சம்மதிப்பார்களா? அப்படியும் உன் உற்றார் சம்மதித்தாலும், இந்த பாழாய்ப் போன, உளுத்துப்போன சமுதாயம் சம்மதிக்குமா? கண்ணே, அழாதே, என்பேன். அவளும், நம்மை எந்த சக்தியும் எதிர்க்க முடியாது. அப்பாவாயிருந்தாலும், கொஞ்சம் கெஞ்சுவேன், “அப்பா, நான் அவரையே தான் மணக்கப் போகிறேன்; அப்படி இல்லையென்றால் உயிரை விட்டு விடுவேன்” என்பாள். நானும், வீணையின் நாதத்தை வெட்டிப் பிரிக்கும் வீணர்கள் உள்ள இந்த லோகத்திலே இருப்பதை விட இருவருமே செத்து,எமலோக, சொர்க்கலோகத்திலே சுகமாக, கஷ்டமில்லாமல், காதலை, திருமணத்தை முடித்துக் கொள்ளலாம்” என்பேன். இப்படி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி என் நெஞ்சமும் புண்ணானது. ஆனால், அந்த நாரீமணியோ, என்னை திருப்பிக் கூட பார்க்கவில்லை. ‘ஏனோபாராமுகம் ஏனம்மா, என்று எனக்குள்ளேயே பாடிக்கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

எப்படி அவளிடம் பேசுவது; என்ன என்று பேசுவது; எந்த வார்த்தையைக் கொண்டு பேசுவது; எந்த எழுத்தைக் கொண்டு முதலில் ஆரம்பிப்பது? அவள் திரும்பிக் கூடபார்க்க வில்லையே! என் நெஞ்சம் உணர்ந்து விட்டதே; பேசக்கூட வாய்வர வில்லையே என்று எண்ணிக் கொண்டு, மெதுவாக ‘தம்’ பிடித்து ஏதாவது கேட்டு பேச்சை ஆரம்பித்து, வந்தகாரியத்தை பூர்த்தி செய்துகொண்டு போகனும்’ என்று, “அம்மா, எந்த ஊர் போகிறீர்கள்” என்று கேட்டுவிட்டேன். அதற்குள் என் தொண்டையும் வரண்டுவிட்டது! ரயிலின் தொண்டயும் வரண்டுவிட்டது போலும், உடனே நின்றது! “நான் இங்குதான் இறங்கவேண்டும்” என்று சொல்லி விட்டு என்னை ஏறெடுத்துக்கூடபார்க்காமல், மதுரை ஸ்டேஷனில் இறங்கிச் சென்று விட்டாள்! அடராமச்சந்திரா! கைக்கெட்டியது, வாய்க்கு எட்டவில்லையே என்று ஏங்கி தூங்கிவிட்டேன்.

கண் விழித்துப் பார்த்தேன். திருவனந்தபுரத்தில் இருப்பதாக உணர்ந்தேன். சரி, விமானம் ஏறியாவது காதலை கண்டு பிடித்து விடவேண்டும் என்ற முடிவோடு, விமானம் ஏறினேன்.

அந்த விமானத்தில் இருந்த வர்களெல்லாம் வெள்ளையர்கள்தான். அதில் காரிகைகளுகம் நாலைந்துபேர் இருந்தனர். அவர்கள் பேசுவதும், பழகும் தோரணையும்பார்த்தால், காதலுக்கும் அவர்களுக்கும் வெகுதூரம்போல் தெரிந்தது. நம் பெண்மணிகளைப்போல், நாணிக் கோணிணல்தானே காதல் பிறக்கும். அவர்கள் அப்படியில்லை; அதற்குமாறாக, என்னைக் கேலி செய்வதுபோல் என்னைப்பார்த்து பார்த்து சிரித்துக் கொண்டிருந்தனர். இது என்னடா! பெரிய வம்பா போச்சு! நாம் காதலைகண்டுபிடிக்கம்போக, அவர்களே காதலை முடித்து விடுவார்கள் போலிருக்கிறதே! இவர்களிடம் நம் காதல் செல்லாது என்று, பம்பாயில் இறங்கி விட்டேன். சரி, கப்பல் ஏறிப்பார்த்து விடுவோம், என்று கப்பல் ஏறினேன். இடுக்கண்வாராமல் எப்படி காதல் கிடைத்துவிடும்! இந்தக் கப்பல் கவிழ்ந்தாலாவது, காதல் கிடைத்து விடும். அப்பொழுது நான் நாரீமணி ஒருவரை தூக்குவேன். அவளும், “ஆபத்தில் கை கொடுத்த ஆபத் பாந்தவா நான் உன்னை காதலிக்கிறேன்”என்பாள்: இப்படி எண்ணி, ஏங்கித்தவித்துக்கொண்டிருந்தேன். கப்பலிலும் காதல் கிடைக்காமல் போகவே, சென்னையில் இறங்கி விட்டேன். பிறகு ஒரு பெரிய யோசனைப்பட்டது என் காதல் மண்டையில். ‘காதலெல்லாம் கடலோரத்தில் தானே கைகூடுகிறது” என்று கடலோர பீச்சுக்குப் போனேன்; எவ்வளவோ பேர், ஆணும் பெண்ணுமாகத் தான் வந்தும் போய்க்கொண்டும், காற்று வாங்கிக்கொண்டும் இருந்தார்கள்.

“கடலை,சுண்டல் விற்பவர்கள் தவிர, வேறு யாரும் என்னை கவனிக்கவே இல்லை. கடலோரத்தில், யாரோ ஓர் யுவதி, என்பரிதாபத்தைப் போக்க வருபவள் போல் என்னை நோக்கி வந்துக் கொண்டிருந்தாள் நம்மைத்தான் காதல் செய்ய வருகிறாள் என்று எண்ணிக்கொண்டு, மடிந்து இருந்தகாலரை தூக்கிவிட்டுக் கொண்டு, நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

“ரொம்பநாளாக எங்கப்பா காணோம்” என்று நண்பர் ஒருவர் என்னை விசாரிக்க வந்து விட்டார்.

“காதல் பூஜையில் கரடி” என்று எண்ணிக்கொண்டு, அவரை வரவேற்றேன். அதற்குள் வந்த காதலும் போய்விட்டது. காதலால் களைப்புண்ட நான் வீடுபோய்ச் சேர்ந்தேன்.

வீடுபோய்ச் சேர்ந்தேனோ இல்லையோ, கல்யாணப் பேச்சை எடுத்து, முடித்தும் விட்டார்கள் என் பெரியோர்கள். இப்பொழுது என் மனைவி தான் காதலி; என் காதல் தான் என் மனைவி.

ஆனால், அன்புதான் இல்லை எங்களிடத்தில்! பால்காரனுக்கு பதில் சொல்லி, ரேஷன் அரிசிக் கடைக்காரருக்கு கூபனில் கோடுகிழிக்க உத்திரவு கொடுத்து, பலசரக்குகடைக்காரருக்கு பல சாக்குச் சொல்லி கடன் வாங்கி இப்படி சோற்றுக்கே போராட்டமாயிருந்தால் அன்பு எங்கே இருக்கும்.

ஆனால், காதலுக்குமட்டும் குறைச்சலில்லை.

இப்பொழுதுதான் தெரிகிறது காதல் என்பதெல்லாம், இல்லாத ஒன்றை நினைத்து அழுவது என்பது! காதல்——காமவெறி என்று சொல்லி, விடலாம்: அன்பு? பொருளாதாரத்தில் புதைந்துபோய் இருக்கிறது. இது நான்பட்ட அனுபவம்’ என்று மனம் சொல்லிக்கொண்டது.

# சுதந்திரம் நிரந்தரமாக!

[மன்னை. வை. கணபதி. மாணவர், குடந்தை கல்லூரி]

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற திருக்குறளின் அருங்குறளுக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த மோகனப் புன்னகை தவழ் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி வாழ்ந்த காலத்தில் வாழுபவர்கள் நாம். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு மேல் அந்நியர் ஆதிக்கத்தில் சிக்கி விடுதலை என்பதே வீண் கனவு என்ற எண்ணத்தில் வாழ்ந்த நமக்கு—நம் நாட்டு மக்களுக்கு சுதந்திரப் பேரொளியைக் காட்டியவர் நம் காந்தியடிகள் அவர்களே ஆவார். அவரால் நம் நாடு விடுதலையடைந்தது 1947 - ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பதினைந்தாம் நாள். அதனால் அவரை நாம் பாராட்டுகிறோம்—போற்றுகிறோம்—ஏன், வணங்குகிறோம். நாம்மட்டுமல்ல, உலகமே கொண்டாடுகிறது அண்ணல் காந்தியடிகளை. அம்மட்டோ! ஐக்கிய நாட்டு சபையின் கொடிகள் அனைத்தும்கூட அண்ணல் காந்திக்கு மரியாதை செலுத்தினவென்றால், அவர் பெற்ற புகழ் உலகப் புகழே அன்றோ!

எனினும், நமக்கு விடுதலைவாங்கித் தந்தவர் மேலும் மேலும், அதை வளர்க்க, வளம்படுத்த நம்மிடையே இல்லாது செய்யப்பட்டார், மனித உருவத்தோடு இன்றும் இருக்கும் சில கயவர்களினால். என்றாலும், காந்தியடிகள் அவர்களாலேயே என் வார்சு என்று காட்டப்பட்ட பெற்றி வாய்ந்த, மதிப்பில் மாணிக்கமாம் பண்டித ஜவர்லால் அவர்களே நம் நாட்டின் பிரதம மந்திரியாய் இருந்துவருவது நம் அனைவருக்கும் ஒரு மகிழ்வைத் தருகிறது, அவர் முன்ஒருகால் சொன்னபடி சமதர்மக் குடியரசை நிறுவுவார் என்று எதிர்பார்ப்பதினால்.

"சுதந்திரம் அடைந்தது உண்மைதான்; ஆனால், நாம் அடைந்திருப்பது முழுச் சுதந்திரமா?" என்று கேட்டார் அண்ணல் காந்தி. இதிலிருந்து பெறப்படுவது யாதெனின், சுதந்திரம் பெற்றதோடு நம் கடமைகள் நின்றுவிடவில்லை; பெற்ற சுதந்திரத்தை நிரந்தரமாக்கவேண்டிய வழிவகைகள் செய்வதில்தான் நம கடமைகள் இருக்கின்றன என்பதாகும். எனவே, செய்யவேண்டிய நம் கடமைகள் யாவை? என்பதைக்குறித்து ஒரு சிறிது ஆராய்வோம்—ஆராய வேண்டியதும் இன்றியமையாததாகும்.

நாம் இன்று பெற்றிருக்கும் சுதந்திரம், அரசியல் சுதந்திரமேயாகும். இச்சுதந்திரத்தைப்பேணி வளர்ப்பதில்தான் பொருளாதாரச் சுதந்திரத்தையும், சமூகச் சுதந்திரத்தையும் நம்மால் அடைய முடியும். முதற்கண் பொருளாதார ஏற்றததாழ்வுகளை முடிந்தவரையில் கல்லி எறிய வேண்டும். உழைப்பே செல்வம் என்ற உறுதி மொழியை நாட்டுமக்கள் அனைவரும் உணரச் செய்ய வேண்டும். "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்ற தமிழ் மறையின் உட்கருத்தை உணர்தல் நலம்பயக்கும். அதுவன்றி, "வீணில் உண்டு களித்திருப்போரை, நிந்தனை செய்தல் வேண்டும்."—அவசியம் நிந்தனை செய்தல் வேண்டும், நாட்டு மக்களின் நலத்தை நாடின். மேலும், உண்மை உழைப்புக்கு உரிய ஊதியம் உண்டு என்ற கொள்கையை நாட்டு மக்கள் உணர, செயலில் அக்கொள்கை காட்டப்படுதல் நலம். இல்லையேல் எங்கும் பரவி வரும் கம்யூனிஸத்திற்கு நம் நாடு இலக்காகிவிடும். எனவே, அந்நிலை வாராதவாறு, வெள்ளம்வருமுன் அணைகோலுவதுபோல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்க ஏற்ற நடவடிக்கைகளை காலத்தில் செய்தல் பயனுடைத்தாகும். அல்லாமல், கம்யூனிஸத்தினால் வரும் கெடுதிகளை மட்டும் பேசி, எச்சரிக்கை செய்தாலும் அது பயனில்லா சொல்லாகவே முடியும். எனவே, கம்யூனிசம்பரவ ஏதுவாகும் சூழ்நிலையை மாற்றியமைத்து, தக்கது செய்தல் அறிஞர் விரும்பும் முறையுமாகும்—அப்படியே செய்வார்கள், ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் நம நல்லறிஞர்கள் என்று நம்புகிறோம். இவையனைத்தும் உடனே செய்யக்கூடியது அல்ல என்றாலும், செய்ய வேண்டும் என்ற எண்ணங்கொண்டு முயலுதல் நாம் செல்ல நினைக்கும் நேரிய பாதையில் நம்மைக் கொண்டு செல்லும்என்பது மட்டும் திண்ணமாகும்—முயற்சி திருவினையாக்கும் என்பது தமிழ் மறையாதலால்.

இவையனைத்தையும்விட உடனடியாகச் செய்யப்படவேண்டியவை பல உண்டு எனினும், முதற்கண் வைத்து எண்ணத்தக்கது நம் நாட்டின் சமூகநிலையேயாகும். வேறெந்த நாட்டிலுமில்லா த

தீண்டாமை இந்த நாட்டிலிருந்தது—இன்றும் இருக்கிறது. அண்ணல் காந்தியடிகளின் பெரு முயற்சியினால் தீண்டப் படாதோர் சமூகம் ஓரளவு முன்னுக்கு வந்திருக்கிறது என்றுகூறலாம். தீண்டாமை ஒரு சாபக்கேடு—அதை அடியோடு ஒழித்தல் முதற்கடமையாகும் என்று கூறியவர் காந்தியேயாகும். அப்படிக் கூறி வருபவர்களில் தலையாயவர்கள் தமிழ் நாட்டிலும் உண்டு. (Untouchability is an anathema and if must be stamped out) அவர்களின் பெரு முயற்சியினால், தீண்டப்படாதோர் என்றுசொல்லப்பட்டோர் கோயிலில் நுழைய உரிமையும், மற்ற பொது இடங்களில் செல்ல அனுமதியும் பெற்றிருக்கின்றனர்.

தீண்டப்படாதோர் எப்படி சமூகத்தில் நடத்தப்பட்டார்களோ அந்த முறையில் நம் நாட்டின் பெரும்பாலானோர் நடத்தப்படுகின்றனர் என்றால், சுதந்திரம் பெற்றும் பயன் என்ன என்றுதான் கேட்கத் தோன்றுகிறது, சிறிதாவது சிந்தித்துப் பார்ப்போருக்கு. இந்த முறையில் ஜாதி வேறுபாடு நம் நாட்டில் பண்டு தொட்டு இருந்து வந்ததா, அன்றி புதிதாகப் புகுத்தப்பட்டதா என்று நோக்குமிடத்து, பிற்காலத்தில் புகுத்தப்பட்டதுதான் என்ற முடிவுக்கு வரலாற்று அறிவுபெற்றோர் வந்தே தீருவர். "நாட்டில் நாலு சாதியை நாட்டினீர்" என்கிறார் கபிலர். "பிறப்பொக்கும், எவ்வுயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்கிறார் தமிழ் மறை கண்ட திருவள்ளுவர், "வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால் சூழ்கின்ற பேதமும் அத்தொகையிருக்கும்" என்று முரசு கொட்டுகிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். இந்த நாலு சாதி முறையினால் ஏற்பட்ட பூசல்கள் கணக்கில் அடங்கா! இந்த பெருங் கொடுமையை, மனிதனை மனிதன் பிரித்துவைக்கும் கொடுமையில் கொடுமையை வேரோடு களைதல் இந்த இருபதாம் நூற்றுண்டில், அதிலும் சுயராஜ்யம் பெற்ற நம் நாட்டில் எவ்வளவு தூரம் அவசியமும், அவசரமும் ஆனதன்மையுடைத்து என்பதை எண்ணிப் பார்ப்போருக்கு விளங்காமற் போகாது. இற்றை நாளில் ஜாதிக் கொடுமையை கண்டிக்காத எழுத்தாளரேகிடையாது என்று உறுதியாய்க் கூறலாம். காரணம் பல உள; ஒரு சில காண்போம்.

"ஜாதிக்குத் தகுந்த ஆசாரம் வேண்டும்" என்று, உயர் குடிப் பிறப்பினர் என்று எண்ணி இருமாந்திருக்கும் ஒரு வகுப்பினர் கூறி, நாட்டு மக்களை, உய்ய வழியின்றி விதி என்று கூறி, சதி செய்துவந்தனர். ஒரு சிலரின் தளரா முயற்சியினால் அச்சதி தரைமட்டமாக்கப்பட்டு வருகிறது. என்றாலும், அறியாமை இருளில் சிக்கி அறிவுஒளி பெறுத மக்கள் நம் நாட்டில் எண்ணிறந்தோர் இருப்பதினால் "அவன் விட்ட வழி", "எல்லாம் விதிப்படி நடக்கும்," "மரம் வைத்தவன் தண்ணீர் ஊத்தமாட்டானா?" என்ற வெத்து வேதாந்தம் வெற்றிபெற்று வருகிறது—அதனால் அனைவரும் விதியை நம்பி செயல் முறையை நாடாது சோம்பேறிகளாக்கப்பட்டோம். கல்வி கற்பதே உயர் குடிப்பிறப்பினர் உரிமை என்று நம்பி, நாம் நாளெல்லாம்உடல் வாட உழைத்தோம்; நாம் உடல் உருக்குலைய உழைத்துக்கொண்டேயிருக்கிறோம்! ஆனால், அந்த அவர்கள் சிறப்பான கல்விகற்று வாழ்வின் முக்கிய துறைகளிலெல்லாம் அவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுதுதான் நாம் கண்விழிக்கிறோம்; நம் உரிமையைக் கேட்கிறோம். நம் அரசாங்கமும் ஒரு சில உரிமைகள், பிற் பட்டோர் என்ற காரணத்திற்காக ஒரு சில தனிச்சலுகைகள் தர இசைந்துள்ளனர். அதுவேகூட கூடாது என்கிறது, ஏகபோக உரிமை பெற்று வந்த உயர்குடி வகுப்பினர் (என்று தம்மை தவறாக எண்ணுவோர்) என்றாலும், காங்கிரஸ் பொதுச்செயலாளரே கூட அந்த முறை—பிற்பட்ட வகுப்பினர்க்கு தனிச்சலுகை தரும்


## உயர்தரக் கல்வியும், உத்தியோகமும்

எந்தச் சிறுமிக்கும், எந்தச் சிறுவனுக்கும், எவ்வயதினருக்கும், தத்தம் இல்லத்திலிருந்தே, பிறருதவியின்றி, ஆங்கிலம் கற்கலாம். ஒரே வருடத்தில் நான்காம் பார ஆங்கில் அறிவு பெறலாம். தொடர்ந்து கற்றால், மதராஸ் மெட்ரிக்குலேஷன், அல்லது, கேம்பிரிட்ஜ் ஸீனியர் தேறலாம். பரீட்சை தேறினல் இண்டர்மீடியற்றில் சேரலாம். உத்தியோகம் கிடைப்பதற்கு இந்தப் பரீட்சைத் தகுதி போதுமானது. நடுவில் நிறுத்தியவர்களும் கற்கலாம். எந்த வகுப்புவரைக் கற்றுள்ளீர் என்ற விவரம் காட்டி 4 அணு ஸ்டாம்புடன் எழுதவும்.

மானேஜர், **கேம்பிரிட்ஜ் காலேஜ்,** கைதமுக்கு, திருவனந்தபுரம்.

## சுதந்திரம் நிரந்தரமாக!

(முன்பக்கத் தொடர்ச்சி)

முறை—சரியானது, காலத்தில் செய்யப்படுவது என்று கூறியுள்ளார். அவரை நாம், உண்மையை உணர்ந்ததற்காகப் பாராட்டுகிறோம்; நாடும் பாராட்டுகிறது.

நாட்டில் நடப்பது என்ன? அரசியலார் மக்களுக்குச் செய்ய விரும்புவது யாது? உலக அதிசயம் என்று கூறுகிறார்களே அது என்ன? அணுக்குண்டின் சக்தியைக்கொண்டு பாலைவனத்தையும், பூஞ்சோலையாக மாற்றலாமே அது எப்படி? என்று எண்ணுவதே கிடையாது நம் மக்கள். எப்படி எண்ணமுடியும், நூற்றுக்கு தொண்ணூறு பேர் தற்குறிகளாக இருக்கும்போது. அவர்கள் எண்ணுகிறார்கள், எதைப் பற்றி என்றால், புண்ணியம் சம்பாதிக்க இராமேஸ்வரம் செல்வதைப் பற்றி; இராகு காலம் பார்த்து வேலை ஆரம்பிப்பதைப் பற்றி; செய்த பாவத்தைத் தீர்க்க வேதாரண்யம் செல்வதைப்பற்றி! ஆனால், இவைகளினால் ஏதாவது பயனடைந்தார்களா என்றால் அது சிந்திக்கவேண்டிய விஷயம். எனவே, அறியாமை இருளில் மூழ்கியிருப்போர் அறிவொளி பெறுமாறு செய்யவேண்டுவது நம் கடமை; அரசினரின் கடமையுமாகும்.

அரசியல் அறிஞர் ப்ளேடோ கூறுகிறார்:- "அறியாமையுடன் இருப்பதைவிட—மனிதனாகவாழ்வதைவிட பிறவாது இருப்பதே நலம்" என்று.' (it is better to be unborn than to be ignorance) இந்த பிற்போக்கான நிலையைமாற்ற முதியோர் கல்விக்கு மத்திய அரசாங்கத்தினர் 18லக்ஷ ரூபாய் ஒதுக்கியுள்ளனர் என்பதையும், சென்னை சர்க்கார் 1½ லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் அறிய மகிழ்கிறோம். ஆனால், நடைமுறையில்கொண்ட திட்டம் நிறைவேற ஆவன செய்தல்தான் முக்கியமாகும். முதியோர் கல்வி அறிவு பெற்றுவிட்டால், உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றுவிட்டால், நாட்டின் அரசுமுறையை புரிந்துகொண்டால், சமூகத்தில் தன்னுடைய நிலையை உணர்ந்துவிட்டால், தன் பண்டைய பெருநிலையை—உலகம் புகழ வாழ்ந்த நிலையைத் தெரிந்துவிட்டால் நாம் பெற்ற சுதந்திரம் நிரந்தரமாகிவிடும் என்றே கருதுகிறோம். காரணம், அறிவு நிலை பெற்றுவிட்டால் சமூகத்தைத் திருத்தியமைக்க, உயர் நிலைக்கு தன்னுடன் சமூகத்தையும் கொண்டு செல்ல உடன்படுதல் எளிது. அதனால் சமூகம் ஒப்பற்ற சமுதாயமாக மாறுகிறது. புத்துயிருடன், புத்தொளியும் பெறுகிறது. அரசாங்கம் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்படுகிறது என்ற எண்ணம் தோன்ற, தானே அரசாங்கமாக மாறி, அதாவது, எண்ணி அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முற்படுகிறான். அப்பொழுது அரசாங்கம் பலப்படுகிறது; செய்ய வேண்டியவைகளை செவ்வனே செய்கிறது. அதன்மூலம் எண்ண—எழுத முழு உரிமையும் மக்களுக்கு வழங்க இயலும். மக்களும் உண்ண—உடுக்க—உறங்க வேண்டிய வாழ்க்கை நலங்களைப் பெற்று நாகரீகத்துடன உயரிய முறையில் வாழ்வாங்கு வாழ்வார்கள்.

காந்தி அண்ணல் அவர்கள் கூறியபடி நம்பிக்கையும் தொழிற்பட முயன்றால் வெற்றி நிச்சயம். அதுவன்றி, நம்பிக்கையின்றி (தான் வேண்டும்கொள்கையில்) தொழிற்பட முனைதல் செயற்கை முறையில் செய்யப்பட்ட பூவினை (காகிதப் பூவினை) ஒக்கும். அதாவது, மலருக்கு இருக்கவேண்டிய மணம் இருக்காது. (Work with-out faith is like an artificial flower that has no fragrance எனவே, எதிர்காலத்தில் நம்பிக்கைக்கொண்டு, நாட்டிற்கு நாம் செய்யவேண்டிய, நாடு நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் கடமைகளை நாம் முழுமனதுடன் உண்மையாகச் செய்வோம். அப்படிச் செய்தால்தான், நாம் விரும்பும் சமதர்மக் குடியரசை (Socialist Republic) நம்நாட்டில்அமைத்து பெற்ற சுதந்திரத்தை நிரந்திரமாக்க முடியும்—காந்தி அண்ணவின் முயற்சிக்கு உயர்ச்சி தந்தவர்களாவோம்.

வாழிய என்நாடு
பொன்னாடாக!

---

## குடிகாரர் திண்டாட்டம்!



குடி கொடியது என்பதை எல்லா தேசத்தினருந் தான் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்தில்கூட பெரும் குடிகாரர்களைத் தண்டித்து வந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில், பொல்லாத குடிகாரர்களைப் படத்தில் காட்டியிருப்பதுபோல் பெரும் பீப்பாய்களில் துவாரஞ் செய்து விலங்குகளைப் பூட்டி, தெருக்களில் நடமாடும் படி விட்டுவிட்டார்கள். இதனால், பெரும் குடிகாரர்கள் குடிக்க முடியாமல் வெட்கிப்போய் குடியையே நிறுத்திவிட நேர்ந்ததாம்! நமது மாகாணத்திலே மதுவிலக்குச் சட்டம் அமுலிலிருந்து வருகிறது. இந்தச் சட்டத்தையும் மீறிக் குடிக்கிறவர்கள் உண்டு; திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவர்களும் உண்டு. அவர்களையெல்லாம் கண்டுபிடித்து, அவர்களுக்கும் இந்தமாதிரி தண்டனை விதித்தால் என்ன?


**மாதவிடாய்!** நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்ரிஜிஸ்டர்ட்) எக்காரணத்தினாலும், எத்தனைமாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும், அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். ஆயிரக்கணக்கான மக்களின் நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகள் வாங்கி ஏமாறாதீர்கள்.
விலை ரூ. 7-0-0 சாதாரண கேஸுகளுக்கு Ordinary ($. 5-00
விலை ரூ. 9-0-0 நாள்பட்ட கேஸுகளுக்கு Special ($. 6-50) த.சி. தனி

**கர்ப்பத்தடை!** நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) 12 நாட்கள் சாப்பிட்டால் ஆறு (6) வருஷத்துக்கு சாஸ்வதமாக கர்ப்பத்தை தடுக்கும் மாதவிடாய் தவறாது (ஸ்பெக்ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும்.
ஸ்பெக் பில்ஸ் விலை ரூ. 10-0-0 permanent ($. 7-00)
ஸ்பெக் ஜெல்லி விலை ரூ. 5-8-0 temporary ($ 4-00) த. சி. தனி

**யானைக்கால்!** நிகரற்ற மருந்து (எலப்டோ பில்ஸ்) ஆரம்ப, அல்லது, கடுமையான யானைக்கால் பிலேரியா வியாதிகளுக்கு நிச்சயமான நிவாரணி. உத்திரவாதமுள்ளது. ஆபத்தில்லாதது.
விலை ரூ. 9-8-0 ($. 7-50) த. சி. தனி

**SEENU & Co., Post Box 1638, (k) Madras-1.**
**Agent: A. L. SWAMY, 134 Serangoon Road, Singapore.**
Wanted Agents in CEYLON.

**தாளகபஸ்பம்**
(T. B.) அநேக கேஸ்கள் சுகமாகிவிட்டன. 7 வித காசம், க்ஷயம், ஈளை, இருமல், கோழை, கபக்கட்டு, இளைப்பு, இறைப்பு, அஸ்தி சுரம், எலும்புருக்கி எல்லாம் தீருகிறது. 50 வேளை அனுபானம தாளிசபத்திரி சூரணத்துடன் ரூ. 10-0-0.
வைத்தியபதி,
R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை
பெரிய கடை வீதி, பழனி (S.I.)

**மதனமஞ்சரி**
மாத்திரைகள்
தாதுக் கோளாறு மலச்சிக்கல், ஸ்வப்பன ஸ்கலிதம் இவைகளைப் போக்கடித்து, ரத்தமும் தாதுவும் அதிகப்படுத்துகிறது.
டப்பா விலை ரூபா 1/4.
காமஸ்தம்பம்
காம சக்தியை அதிகப்படுத்தி சுக போகத்தில் திருப்தியைத்தரும்.
டப்பி விலை ரூபா 2/8.
மதன மஞ்சரி பார்மசி,
184 சைனாபஜார்ரோட் மதராஸ்.
சேலம் ஏஜண்ட்: மாடர்ன் ஸடோர்ஸ
1வது அக்ரஹாரம்




**ஏழே நாட்களில் நீரழிவு குணமாகும்**
எவ்வளவு நாட்பட்ட, அல்லது, கொடிய நீர் ரோகமானாலும் சரி, வீனஸ் சாம் அதனை அடியோடு குணப்படுத்தி விடுகிறது. வீனஸ் சாம்ஸ் சமீபத்தில் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடிக்கப்பட்ட மருந்து. இந்த நோயின் முக்கிய அறிகுறிகள் அளவுக்கு மீறிய தாகம், பசி, நீரில் அதிகப்படியான சர்க்கரை, நமச்சல் முதலியன. இவை இந்நோய் கடுமையாக இருக்கும்போது காணப்படும் அறிகுறிகள். இதனால் பிளவை (Carbuncle) கட்டி, கேட்டராக்ட் முதலிய நோய்களும் உண்டாகின்றன. வீனஸ் சாம்பை உபயோகித்ததின் மூலம் ஆயிரக்கணக்கானவர் மரணத்தினின்று மீட்கப்பட்டிருக்கின்றனர். இம் மருந்தை உபயோகித்த மறுதினமே நீரிலுள்ள சர்க்கரை நீக்கப்படுகிறது. அடுத்த இரண்டு, மூன்று நாட்களில் அரைவாசி நோய் குணமடைந்துவிடுவதை உணர்வீர்கள். பத்தியம் எதுவும் கிடையாது. வேண்டுபவர்களுக்கு விபரங்களடங்கிய சிறுபுத்தகம் இனமாக அனுப்பப்படும். 50 மாத்திரைகளடங்கிய புட்டி 1க்கு ரூ. 6-12-0. தபாற்செலவு தனி. எல்லா பெரிய மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்; அல்லது, கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதி V. P. P. யில் பெற்றுக் கொள்ளலாம்.
Venus Research Labaratory
Post Box. 587 Calcutta (T.M)

சங்கநாதம்

# கல்வி வளர..?

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந் நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தேயிருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு கற்றவர்கள் தொகை அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந் நாட்டு அரசியல், பொருளாதாரம் முதலியன சிறப்புறும். ஆகவே, கல்விதான் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் என்பதை நாம் உணர வேண்டும். அரசியலாரும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து மற்ற திட்டங்களைவிட, கல்வித்திட்டத்திலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆனால், நமது சுதந்திர ஆட்சியிலே இக் கல்வித் திட்டம்தான் மிகவும் பிற் போக்கான நிலைமையில் இருக்கிறது. நூற்றுக்குப் பத்துப்பேர்கற்றவர்களாக இருப்பது கடினமாக இருக்கிறது இந் நாட்டில். இந்த நிலைமை மாற வேண்டும். ஆம்; நிலைமை மாற வேண்டும் என்பதை எல்லோரும் உணர்கின்றனர், ஆட்சியாளர் உட்பட. ஆனால், மாற்றம் காண்பது எப்படி என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை. ஆரம்பக் கல்வி வளர வேண்டும் என்று பேசாத பேச்சாளர்களில்லை. எழுதாத பத்திரிகைகளில்லை. ஆனால், கல்வியை வளர்க்கக் கையில பணமில்லையே என்று கையை விரிக்கின்றனர் ஆட்சியாளர். ஆட்சியாளரில் ஒரு சாரார் கல்வி வளர்ச்சிக்கென ஏட்டளவில் எழிலான திட்டங்கள் பலதீட்டிப்பார்த்து மகிழுகின்றனர். தமது திட்டங்கள் நிறைவேறக் கூடியவைதானா; நடைமுறைக்கு ஏற்றவைதானா என்பதுபற்றியெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. சமீபத்தில் சென்னை சர்க்கார் அடிப்படைக் கட்டாயக் கல்வித் திட்டமொன்றைத் தீட்டினர். திட்டமென்றால் அற்ப சொற்பமான திட்டமல்ல! மாகாணம் முழுவதும் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்த 44 கோடி ரூபாய் செலவுசெயய திட்டமிட்டிருக்கிறார்களாம். ஆம்; கொஞ்சநஞ்சமல்ல; நாற்பத்தி நான்கு கோடி! சர்க்காரின் பரந்த மனப்பான்மையை வரவேற்கிறோம். ஆனால், அதே சமயத்தில் இந்த 44 கோடி நடைமுறைக்கு ஏற்குமா என்பதை நினைக்கும்போதுதான் வருந்தவேண்டியதாக இருக்கிறது. பணம் இல்லாகாரணத்தால் பல திட்டங்கள் முடங்கிக் கிடக்கும்போது, கல்விக்கென மாத்திரம் 44 கோடியை எங்கிருந்து திரட்டப் போகிறார்களோ இந்த ஆட்சியாளர். வரி போட்டு பணம் திரட்டலாமென்றால் அதற்கு இடமில்லை. ஜனவரி, பிப்ரவரிகளைத் தவிர மற்ற வரிகளையெல்லாம் போட்டுத் தீர்த்துவிட்டனர் புண்ணியமூர்த்திகள்! வரிபோடத்தான் வழியில்லையென்றால், வருவாய் தேட வேறு வழி என்ன வகுத்திருக்கிறார்களோ தெரியவில்லை. கடன் வாங்கப் போகிறார்களா? அதுவும் ஏன், எப்படி என்பது புரியவில்லை.

இப்படிப்பட்ட வேளையில்தான் கவர்னர்-ஜெனரல் கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் முறையிலே ஒரு புதிய திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். பம்பாய் பாரதீய வித்தியா பவனத்தில் பேசிய அவர், சிறுவர்கள் வாரத்தில் மூன்று நாள் படித்தால் போதுமென்றும், மற்ற நாட்களில் அவரவர் குலத் தொழிலைக் கற்றுக்கொள்ளுவதே நலமென்றும், வருணாச்சிரம கல்வி முறையைப் பிரசாரம் செய்திருக்கிறார். அத்துடன் தற்போதைய கல்லூரிகளையும், சர்வகலாசாலைகளையும் குறைகூறுகிறார். தற்போதைய முறை இளைஞர்களுக்கு ஒரு மயக்க மருந்து என்றமுறையிலே வியாக்கியானம் செய்கிறார். ரொம்ப சரி; ஆச்சாரியார் திட்டத்தை யார்தான் மறுக்கக் கூடும்! தாராளமாக அதையே கடைப்பிடிப்போம். ஆனால், ஆச்சாரியார் சொல்லுவது போல் அவரவர் குடும்பத் தொழிலை அவரவர் செய்வது என்பது இக்காலத்தில் நடை முறைக்கு ஒவ்வுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். முதலில் இன்றைய நிலைமையில் குலம் என்பதெல்லாம் அந்தக் குல இலட்சணப்படி இருக்கின்றனவா? குலத் தொழிலை செய்வோர் நூற்றுக்கு எத்தனைபேர் இருக்க முடியும்? அப்படியே செய்பவர்கள் இருந்தாலும், அதிலும் பிராமணர் எனப்படுவோர் தமது குலத்தொழிலை செய்கின்றனரா? ஆச்சாரியார் திட்டப்படி வருணாச்சிரம கல்வி பயனளிக்கும் முறையிலே வேலைசெய்திருந்தால், இதே ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாக இருந்திருக்க முடியுமா? ஜாதித் துவேஷ மனப்பான்மையோடு நாம் இங்ஙனம் கூறுவதாக தயவு செய்து யாரும் கருதிவிடக் கூடாது. உண்மையிலேயே சொல்லுகிறோம், வருணாச்சிரம முறைப்படி உத்தியோகம் பார்ப்பதென்றால் ஆச்சாரியாருடைய அறிவும், ஆற்றலும் இந்நாட்டு அரசியலுக்குப் பயன் பட்டிருக்க முடியுமா? இதுபோலவே ஒரு சர். சி. வி. ராமனை நாம் அடைந்திருக்க முடியுமா? ஒரு சர். ஆர். கே. ஷண்முகத்தையோ ஒரு சர். ஏ. ராமசாமியையோ கண்டிருக்க முடியுமா? குலத் தொழில் பயில்வதை சரியென்றால் குருக்கள்மார் குருக்களாகவும், வாணிபர், உழவர் போன்றோர் அந்தந்தத் துறையிலேயே இயங்கிக் கொண்டுதான் இருக்க முடியும்.

ஒரு குறிப்பிட்ட குலம், குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்ற கட்டாய நிலை ஒரு காலத்தில் ஏற்ற முறையாக இருந்திருக்கலாம். ஆனால், இன்றைய நிலைக்கும், இயற்கைத் தன்மைக்கும் அது ஏற்ற முறையாகாது. மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடியேதொழில்கள் மாறும். தொழில் முறை எல்லோருக்கும் பொது. எனவே, எந்தத்தொழிலையும் எந்தக் குலத்துக்கும் ஏகபோக உரிமையாக்குதல் தவறு: வாய்ப்பு, வசதி, தக்க சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்தே மனிதனுக்கு அறிவும், ஆற்றலும் வளருகிறது. அறிவும், ஆற்றலும் பெற்றயாரும் எத்தொழிலையும் செய்யலாம். இதனை இன்னும் நாம் நடைமுறையில் காணலாம். உழவனின் மகன் ஓவியனாகவும், ஓவியனின் மகன் விஞ்ஞானியாகவும், விஞ்ஞானியின் மகன் வீணனாகவும், இருப்பது சகஜம். எனவே, பரம்பரையையும், பகுத்தறிவையும் முடிபோடாமல், கல்வி எல்லோருக்கும் பொதுவுடைமைச் சொந்தாகும்படி செய்ய வேண்டும்.

ஈண்டு கல்வி என்று நாம் குறிப்பிடுவது வெறும் ஏட்டுக் கல்வியை மட்டுமல்ல. தொழிற் கல்வியையும் உள்ளடக்கியே கூறுகிறோம். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்குக் கல்வி கற்க வசதியோ, நேரமோ இல்லாதிருக்கலாம். இதனால் சிறு வயதில் அவர்களுக்குப் போதிய கட்டாய ஆரம்பக் கல்வி அளிப்பது எவ்விதத்திலும் தடைபடக் கூடாது. சிறு வயதிலேயே குலத் தொழில் கற்பது நலம் என்ற காரணத்தால் அவ்வழியிலேயே செல்ல சிறுவர்களுக்கு இடமளித்தால், அவர்களுடைய அறிவு அந்த குறிப்பிட்ட தொழில் அறிவைத் தான் வளர்க்க இயலுமே தவிர அவர்களிடம் வேற்று வித ஆற்றல்கள் பொதிந்துகிடந்தால் அது வெளித்தோன்ற முடியாமற் போகும்.

எனவே, மேலே கூறியதுபோல் கல்வியை வளர்க்க காசில்லையே என்ற கவலையோ, கோடிக்கணக்கில் செலவு செய்யக் கூடிய திட்டங்களையோ பண்டைக் கால வருணாச் சிரம கல்வி முறைகளைப் பற்றியோ இச் சமயத்தில் திட்டம் போட்டுக் கொண்டிருப்பது பயன் தரக் கூடியதென்று நாம் நம்பவில்லை. அப்படியாயின் கல்வியை வளர்க்க வேறு வழியென்ன என்று கேட்கப் படலாம்.

கல்வி வளர்ச்சியென்பது கண்ணும் பூச்சி விளையாட்டல்ல; அரசியல் ஏட்டிலே திட்டம் தீட்டிப் பார்த்து மகிழும் காரியமல்ல. இது ஆட்சி முறையையே அடிப்படையாகக் கொண்டதொரு மாபெரும் திட்டமாகும். கல்வி வளர வேண்டுமானால், ஆட்சி முறையே அடியோடு மாற வேண்டும். பொருளாதார சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமதர்ம ஆட்சி ஏற்பட்டாலொழிய கல்வியைப்பற்றிப் பேசப்படுவதெல்லாம் வெறும் கனவாகவே முடியும். பொருளாதார சமத்துவம் ஏற்பட வேண்டுமானால், தொழில்களை தேசியமயமாக்காத வரையில் அரசாங்கம் போதிய வருவாயை எதிர்பார்க்க முடியாது. வரிகள் மூலமே வருவாயைப்பெருக்கலாம் என நினைப்பது தவறு. இந்த வரி போடும் முறையால் பொது மக்களுக்கும் கஷ்டம்; அரசியலாருக்கும் கஷ்டம். "ஐயோ வரியா?" என்று வரியைக் கண்ட மக்கள் வரிப் புலியைக் கண்டது போல் அலறுகின்றனர். "வரி போடாமல் வருவாய்க்கு வேறு வழியில்லையே; நாங்கள்தான் என்னசெய்வோம்" என்று, வழிதெரியாமல் தவிக்கும் குருடனைப்போல் வேதனைப் படுகின்றனர் சர்க்கார். இத்தகைய தொல்லைகள் தொலைய வேண்டுமானால், தொழில்கள் தேசிய மயமாவதைத்தவிர வேறு வழியில்லை. இதற்கு வேறு வழியில்லையென்றால் போதிய வருவாய்க்குவழியிராது; வருவாய்க்கு வழியில்லாவிட்டால், கல்விக்கு வழியில்லாவிட்டால் அறிவிக்கு வழியில்லாவிட்டால், ஆக்கவேலைகளுக்கு வழியில்லை. ஆக்க வேலைகளுக்கு வழியில்லையென்றால், அழிவு வேலைகளுக்கு வழிதிறந்து விடப் பட்டதாகும். எனவே, கல்விக்கு அடிப்படை ஆட்சி முறையில் சீர்திருத்தம் என்பதை உணர்ந்து ஆவனசெய்ய அரசியலாரும், தலைவர்களும் முன் வருவார்களாக.


## உயர்தர கைகெடியாரங்கள்



சுவிஸர்லாந்தில் செய்யப் பட்டவை; சரியான மணி காட்டக் கூடியவை; கெட்டியான மெஷினரிகள்; ஒவவொன்றும் 3 வருஷ உத்தரவாத முள்ளவை. 4 ஜூவல், குரோமியம் கேஸ், வட்ட வடிவம் ரூ 10-8-0 சென்டர் செகண்ட் ரூ 13 பெண்களுக்குரிய அளவு 17.. கோல்டு பிளேட்டுடன் ரூ 19. நீண்ட சதுரம், வளைந்த வடிவம் பிரகாசமான குரோமியம் கேசுடன் 5 ஜூவல் ரூ 25. ரோல்டு கோல்டு ரூ 33. 7 ஜூவல் குரோமியம் ரூ30. ரோல்டு கோல்டு (10 வரு- உத்தரவாதம்) ரூ38. 15ஜூவல் ரூ 55. குரோமியம் தட்டை வடிவம் ரூ 28. அலாரம் டைம்பீஸ் ரூ 12. உயர்ந்த ரகம் ரூ 14. தபால் செலவு தனி. ஏககாலத்தில் இரண்டு வாட்சுக்கு ஆர்டர் செய்வோருக்கு ஒரு பவுண்டன் பேனாவும், தபால் செலவும் இனாம்.

யு. எஸ். ஏ. பவுண்டன் பேனாக்கள் பல நிறங்களில், பல ரகங்களில், கோல்டு நிப்பு ரூ 3-8-0 உயர்ந்த ரகம் ரூ 4-8-0 14 கேரட் கோல்டு நிப்பு ரூ. 6-8-0 உயர்ந்தரகம் ரூ. 7. முழு கோல்டு நிப்பு ரூ. 10. உயர்ந்த ரகம் ரூ.12. எக்ஸ்ட்ராகோல்டுநிப் ஒன்றுக்கு அணா 8. உயர்ந்த ரகம் ரூ 1-4 0 கோல்டு நிப் ரூ 4. 4-8-0 கடிதங்கள் இங்கிலீஷில் எழுத வேண்டும்.

CALCUTTA WATCH Co [684
Post Box No. 12203. Calcutta. 5.

# கனகராணி

## அல்லது

## மாயவீரன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்ணே...கனகா...வா உன் அறைக்குப் போகலாம்...இந்நேரத்தில் நாம் இங்கு நின்று பேசிக்கொண்டிருப்பது சரியல்ல...

"அத்தையம்மா மெய்தான்...... நானும் என்னை மறந்து பேசி விட்டேன்...மன்னித்துக் கொள்ளுங்கள்... வாருங்கள் போகலாம்...நானும் உங்களிடம் எவ்வளவோ கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது" என்று சொல்லி, கனகா, அழகேஸ்வரியை உள்ளே அழைத்துச் சென்றாள். அழகேஸ்வரியை ஒரு சோபாவில் உட்காரச் செய்து, கனகா அருகில்உட்கார்ந்தாள். நெடுநேரமாகியும் கனகாவுக்குச் சோர்வு என்பதே தெரியவில்லை. அவள் உள்ளத்திலே ஒருவித தெம்பு! பிடிக்க முடியாத ஒரு பெரிய கோட்டையை வளைத்து முற்றுகை போட்டுக் கொண்டது போன்ற ஒருவித வீர உணர்ச்சி. அந்த உணர்ச்சியின்வேகத்திலே அவள் சிந்தனையில் பலவித கேள்விகள் அலைகள் போல் மோதிக்கொண்டிருந்தன. அவள் அருகில் உட்கார்ந்திருந்த அழகேஸ்வரி, கனகாவைக் கூர்ந்து கவனித்தாள். அழகிய சிவந்த அவள் அதரங்களிலே ஒரு குறுநகை; கனகாவுக்கு அது ஒரு புது உணர்ச்சி. அழகேஸ்வரியோ இதுபோன்ற எத்தனையோ சம்பவங்களைக்கண்டவள். எத்தனையோ அபாயகரமான ஆபத்துக்களைத் தேடிச் சென்றவள். எத்தனையோ ஆபத்துக்களில் சிக்கி வெற்றியுடன் வெளிவந்தவள். எத்தனையோ கொடிய சதிகாரர்களின் சூழ்ச்சிகளை, வீரத்துடன் எதிர்த்து நின்று முறியடித்தவள். ஒரு சிறந்த வீரனும், அவள் வீரத்தின் முன் தலை காட்ட முடியாது. வீராதி வீரர்களை யெல்லாம் ஆபத்திலிருந்துகாப்பாற்றியவள் அவள். ஏன்? இன்று பாண்டிய-சேர நாடுகள் ஒன்று பட்டு தலை நிமிர்ந்து நிற்பதற்கு அந்த ஒரு அநாதைப் பெண் மதுரம்-அழகேஸ்வரியல்லவா காரணம்? அவள் வீரச் செயல்களைப் பற்றி ஒரு பெரிய கதையே எழுதி வைக்கலாம். ஆனால், இன்று, அவள் இடத்தில் கனகராணி காட்சியளிக்கிறாள்! அவளிடமிருந்த அதே உள்ளத்துடிப்பு, வீரம், சாதுர்யம், துணிகரம் எல்லாம் உருவாக விளங்குகிறாள் கனகராணி! அவளுடைய புதிய உணர்ச்சி, கனகாவின் உள்ளத்திலே என்றுமில்லாத ஒரு தெம்பை உண்டு பண்ணியிருப்பதை உணர்ந்தாள் அழகேஸ்வரி. கனகாவின் உணர்ச்சியிலே அவளும் பங்கு கொண்டாள்; ஆனந்தம் கொண்டாள். அந்த ஆனந்தமே, அழகேஸ்வரியின் அழகியஅதரங்களிலே சிறுகுறு நகை மூலம்வெளிவந்தது. கனகாவைச்சிறிது நேரம் உற்றுக் கவனித்த பின் நிமிர்ந்துஉட்கார்ந்தாள். அருகிலிருந்த கனகாவை, மார்புடன் அரவணைத்துக் கொண்டாள். கனகாவின் அழகிய நெற்றியிலே சுருண்டு விழுந்த மயிரைக் கோதிவிட்டு, துளிர்த்து வந்த வியர்வையை மெதுவாக அவள் முந்தானையால் துடைத்தாள்.

கண்மணி... கனகா...நெடுநேரமாகி விட்டதே...ஏன் தூங்கவில்லை?...உனக்குத் தூக்கம் வரவில்லையா?...தீவிரமாக யோசனை போட்டுக் கொண்டிருக்கிறாயே?......நந்தவனத்தின் அனுபவம் உனக்குப் புதிதாகத்தான் இருக்கும்...அங்கு அப்படி என்ன கண்டாய்?...

அத்தையம்மா...ஆம்...புதிய அனுபவந்தான்!...புதிய உணர்ச்சியடைந்தேன்...இயற்கையைக் கண்டேன்... நள்ளிரவில்...பூர்ண சந்திரன் ஒளியில் இன்பமான தென்றலிலே இயற்கையின் அழகைக் கண்டேன...இன்புற்றேன்...ஆம்...ஆம்....அத்தையம்மா... சுதந்திரத்தைக் கண்டேன்...!

கண்ணே...சுதந்திரத்தையா...? அரண்மனையில் உனக்கில்லாத சுதந்திரத்தையா...நந்தவனத்தில் கண்டாய்...

அத்தையம்மா மன்னித்துக் கொள்ளுங்கள்...அரண்மனையிலே அடைபட்டுக்கிடக்கிறேன்...என் அறை...உங்கள் அறை...இப்படியே ஒவ்வொருவர் அறைக்குப் போவதும்...பேசிக்கொண்டிருப்பதுந்தானா சுதந்திரம்...?

இல்லை...வேறு எங்கும் போகக் கூடாது என்று உனக்குத் தடை எதுவும் இல்லையே?...

அத்தையம்மா...அப்படி வாருங்கள் வழிக்கு...நான் நந்தவனத்துக்குப் போனதைப் பற்றி இப்பொழுதுதான் நீங்கள் என்ன சொன்னீர்கள்?...

கண்ணே கனகா...நான் என்ன சொனனேன்?...நீ இளம்பெண்...இந்த நள்ளிரவில் நீ தனிமையாகப் போகக் கூடாது என்று தான் சொன்னேன்... அதில் தவறு என்ன இருக்கிறது?...

தவறு ஒன்றுமில்லை அத்தை... ஆனால், என் சுதந்திரம் எங்கே?...

கனகா...அது சுதந்திரமல்ல... காலம், நேரம் சமயம்...சந்தர்ப்பம் எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும்... உன் வயது...பக்குவம்...

ஆம்...மெய்தான்...ஆனால், நான் தனிமையாகப் போவதால்...

கண்மணி...தனிமையாகப் போகலாம்...அதற்கும் சந்தர்ப்பம்...அவசியம் வேண்டாமா?...நீ இந்நேரத்தில் எதற்காக நந்தவனம் போகவேண்டும்?...அவசியம் என்ன வந்தது?... தூக்கம் வரவில்லை என்று சொல்லலாம்...இருக்கட்டும் என்னிடமோ... அண்ணி புஷ்பவதியிடமோ வரலாம்...அல்லது...எங்களை அழைத்துக் கொண்டு நந்தவனம் போகலாம்...

ஆமாம்...அத்தையம்மா...மாமா... சித்தப்பா இல்லாததால் இப்படிப் பேசுகிறீர்கள்...அவர்கள் இருந்தால் நான் என்ன செய்வது?...

உன் சேடிகள் இல்லையா?... யாரையாவது... துணைக்கு...

அத்தையம்மா...நீங்கள்துணைக்கு...

கண்ணே...நான் திரும்பவும் சொல்லுகிறேன்...அந்தக் காலம் வேறு... ஆபத்துக்களும்...சதி... சூழ்ச்சிகளும் சூழ்ந்திருந்த காலம்...எதிரிகளே...

இப்பொழுதும் அப்படி இருந்தால் நான் போகலாமா?...

கண்ணே இப்பொழுது அப்படியிருக்கக் காரணமே இல்லை...அப்படியே இருந்தாலும் துணையுடன் போவது நல்லதல்லவா?...

அத்தையம்மா.......துணையுடன் போனால்...எதிரிகளின் சதிகளை எப்படி முறியடிக்க முடியும்?...அதில் எனக்கு எவ்வளவுபங்குண்டு? நான் தனிமையாக உங்களைப்போல் துணிந்து எதிரிகளை முறியடித்தால் அது...உம்...ம்...ம்...

ஓகோ!...கண்மணி உன் வீரத்தையும்...சாதுர்யத்தையும், துணிகரத்தையும் நிரூபிக்கச் சந்தர்ப்பம் தேடுகிறாயா?...கண்ணே அப்படியானால்... அதில் உனக்குப் பூர்ண சுதந்திரம் உண்டு!...அந்த சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது..ஆனால்...உம்..ம்..ம். கண்ணே...சமய சந்தர்ப்பங்களையும்... கவனிக்க வேண்டும்...இந்தசமயத்தில் பெரியோர் ஆலோசனையும்...உதவியும் நலமாக இருக்கும்...

அத்தையம்மா...நீங்களே என் குரு, என் குலதெய்வம்! உங்களையே என் வீரத் தெய்வமாக என் உள்ளத்தில் வைத்துப் பூஜிக்கிறேன்.

கண்மணி...கனகா......இதென்ன? என்னை மனம்போனபடியெல்லாம்...

அத்தையம்மா...பாருங்கள்....நான் சொல்லுவது அவ்வளவும் உண்மை... என் மனதிலிருந்து வருபவை...என் நன்மையை...என் எதிர்காலத்தைக் கண்காணிப்பவர்கள் நீங்கள்..என் நன்மையை...உங்கள் குழந்தையின் நன்மை...

கண்ணே...அதெல்லாம் உண்மை... இருக்கட்டும்...எதற்காக இந்தப் பீடிகைகளெல்லாம்?...கண்ணே உள்ளத்தைத் திறந்து சொல்...

அத்தையம்மா உங்களிடம் எத்தனையோ கேள்விகள் கேட்க எண்ணினேன்...எத்தனையோ விஷயங்களை அறிந்துகொள்ள விரும்பினேன்...

என்ன விஷயங்கள்?...தாராளமாகக் கேள்...கண்ணே உனக்கு எல்லா விஷயங்களையும் சற்றுக்கொடுக்கத் தானே காத்திருக்கிறேன்...

அத்தையம்மா...இந்த அரண்மனையிலும்...அரண்மனை நந்தவனத்திலும், அதற்கு வெளியிலும் ரகசிய வழிகள்...அந்தரங்க அறைகள் இருக்கின்றனவா?...

"கண்மணி,...உனக்கு இதையெல்லாம் யார் சொன்னது?...ஏராளமான ரகசிய வழிகளும்...அந்தரங்க அறைகளும்...ரகசியக் கோட்டைகளும் இருக்கின்றன...இப்பொழுது நெடுநேரமாகி விட்டது...நீ விழித்திருக்கக் கூடாது..நன்றாகத்தூங்கு..நானும்தூங்கப்போகிறேன். இந்த ரகசியவழிகள்... அந்தரங்க அறைகள் யாவற்றையும் விளக்கமான ஒரு படமே போட்டு வைத்திருக்கிறேன்...அதை உன்னிடம் கொடுத்து எல்லாவற்றையும் விளக்கிக் கூறுகிறேன்...பயப்படாதே கண்ணே! இப்பொழுது நன்றாகத் தூங்கு......... யோசிக்காதே...வீணாகச்சிந்தனையைக் குழப்பாதே...வீரத்துக்கும்...தைரியத்துக்கும்.....சாந்தமும்......அமைதியுந்தான் அடிப்படை; மறந்துவிடாதே... கண்ணே...நிம்மதியாகத் தூங்கு...... நான் போய் வருகிறேன்" என்று சொல்லி, கனகராணியை உச்சி மோந்து, முத்தமிட்டு விட்டு, அழகேஸ்வரி மெதுவாக அவள் அறைக்குச் சென்றாள். நெடு நேரமாகிவிட்டதால சோர்ந்து போயிருந்த கனகா, மெய் மறந்து தூங்கிவிட்டாள். அழகேஸ்வரியும் நன்றாக நித்திரை போனாள்.

இதே சமயத்தில் நீலகிரி மலைத் தொடரிலேயுள்ள நீலகிரிக்கோட்டைக்குச் சுமார் 15 மைல் தூரத்தில் ஒரு பெரிய மலைக்குகை; அந்தக்குகை இருப்பதை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. அதற்குசெல்லும்வழிகளும் அந்தரங்கமானவை. குகையினுள்எல்லா வசதிகளுமுண்டு; குகைக்கு முன்னால் அழகிய செடிகொடிகளும், பெரிய மரங்களும், ஒரு அழகிய நந்தவனம் போன்றுகாட்சியளித்தது. பெரியமரங்களின்கீழ் கருங்கற்களாலான ஆசனங்களுண்டு. அந்த ஆசனங்களில் இரண்டொரு சந்நியாசினிகள் அடிக்கடி வந்து உட்கார்ந்து போவது வழக்கம். சில சமயங்களில் அந்த மலைச் சரிவுகளில் உலாவி வருவதுமுண்டு. அந்தச் சந்நியாசினிகளிலே ஒருவள் முதிர்ந்த வயதுடையவள்; சுமார் 60, அல்லது 65 வயதுக்கு அதிகமிருக்காது. சதா காவி ஆடைதான். நன்றாக வளர்ந்து, சுருண்டு தொங்கும் நரைத்த மயிர். பொன் போன்ற மேனி; சிவந்த அதரங்கள்; ஒளிவீசும் அழகியகண்கள். அந்தக் கண்களில்தான் என்ன வீரம்! ராஜஸ்திரிபோன்ற கம்பீரமான தோற்றம். இந்தஅம்மையார் ஏன் இந்தக்கோலம் கொண்டாள் என்பது பரம ரகசியம்! இவள் எப்பொழுது இந்தக் குகைக்கு வந்தாள்; எந்தச் சந்தர்ப்பத்தில் வந்தாள்; அந்தக் குகையில் எவ்வளவு காலம் வசித்து வந்தாள்; அந்தக்குகையிலிருந்து என்ன பணியாற்றி வருகிறாள் என்பது வெளி உலகத்துக்குத் தெரியாது. ஆனால் அந்தக் குகையை பழங்காலத்து ஆசிரமம் என்றே சொல்லலாம். அந்த அம்மணிக்குப் பணி செய்ய இரண்டொரு நடுத்தர வயதுடைய பெண்கள் உண்டு. அவர்களும் சந்நியாசினிகளே. அவர்களும் சேவைக்கே தங்களை அர்ப்பணம்செய்தவர்கள். மலைப் பிரதேசங்களிலே ஆங்காங்கு கஷ்டப் படும் ஏழை எளிய மக்களுக்கும் வழி தவறி தவிக்கும் அந்நியர்களுக்கும் அவர்களாலான சேவை செய்து வந்தார்கள். என்றாலும், அவர்கள் நோக்கம் ஒன்றே. பாண்டிய நாட்டிற்கே அவர்களை அர்ப்பணம்செய்திருந்தனர். அந்த ஆசிரமத்தின் தலைவியான வயது முதிர்ந்த அம்மை, நல்ல கல்வி ஞானமுடையவள்; சிறந்த அறிவாளி; தெய்வ பக்தி மிகுந்தவள். ஏழை எளிய மக்களுக்குத் தாய்போன்று உதவி வந்தாள். எல்லோரிடமும் அன்புடன் பழகும் உத்தமி; சதா புன்னகை பூத்த முகம்; கடுஞ் சொல் என்பதே அந்த அம்மையின் அகராதியில் கிடையாது. இந்த அம்மையார் கண்ணிமை போல் பாதுகாத்து வளர்த்து வந்தாள் ஒரு இளைஞனை. அவனுக்குச் சுமார் 19, அல்லது, 20 வயதிருக்கும்; தங்கத்தை உருக்கி வார்த்ததுபோன்ற திடகாத்திர தேகம். மலைகளிலும், காடுகளிலும், இயற்கையோடு ஒன்றுபட்டு வளர்ந்து வந்ததால், கள்ளம், கபடு, சூதுவாது அறியான். அன்பே அவன் கண்ட மதம்; எனவே, எல்லோரிடமும் அன்புடன் பழகி வந்தான். துஷ்டர்களுக்குப் பரம சத்துரு. சகல நற்குணங்களும் வாய்ந்தவன். கம்பீரமான தோற்றம்; மன்மதனையும் பழிக்கும் அழகு; அரும்பிவரும் கருத்த மீசை; அகன்று விரிந்த பிரகாசமான கண்கள்; பரந்த நெற்றி; சுருண்டு சுருண்டு கழுத்துவரையும் தொங்கும் கருத்த மயிர். சதா புன்னகை பூத்த முகம்; வீரத்தின் சின்னம். ஒரு யௌவன மனிதக் கடவுள் போல் அந்த மலைப் பிரதேசங்களிலே சஞ்சரித்து வந்தான். ஏழைகளுக்கு பரிந்து உதவுவான்; வெண்ணிறக் குதிரை மீதேறி மின்னல் போல் தோன்றி, மின்னல் போல் மறைந்துவிடுவான். வாள், வில் போரில் இணையற்ற வீரன்! பாண்டிய நாட்டின் எதிரிகளை அந்தப் பக்கத்திலே தலை காட்டவிடாமல் தட்டி மடக்கிப் பாண்டிய நாட்டிற்கு அபார சேவை செய்து வந்தான். இவன் வீரத்துக்கும், சேவைக்கும் ஊற்றாக, உறைவிடமாக விளங்கினாள், அந்த வயது முதிர்ந்த அம்மையார். அந்த இளைஞன் அந்த அம்மையாரைக் கண் கண்ட தெய்வமாகக் கொண்டாடிப் பணியாற்றி வந்தான்.

குறிப்பிட்டஅந்த நாளில், அதாவது, கனகராணி நந்தவனஞ் சென்று, அவள் அறைக்குத் திரும்பிவந்த அந்த நடுநிசியில், நீலகிரி மலை ஆசிரமத்தின் முன் தடதடவென்று ஒரு குதிரை அதிவேகமாகப்பாய்ந்து வந்து நின்றது!

"ஜே, ஜீவன்!" என்று ஒரு குரல். அவ்வளவுதான், அங்கு பாய்ந்து வந்த குதிரையும், குதிரை மீதிருந்தவனும் மறு விநாடியில் மின்னல்போல் மாயமாக மறைந்தனர்!

[தொடரும்]




## ஒண்டவந்த பிடாரி!-குறைகுடம் கூத்தாடுது! செக்குமாடு சுற்றுதே! துடுப்பு அடிப்பதேன்? குடுகுடுப்பை கொட்டுவதேன்?

## கத்தி போய் வால் வந்தது - டும் - டும் - டும்!

ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை ஒட்டியதாம்! அந்தக் கதை போல் இருக்கிறது இன்று காங்கிரசின் நிலைமை' காங்கிரஸ் ஒரு பெரிய புனிதமான ஸ்தாபனம்; மகாத்மா காந்தி பேணி வளர்த்த ஸ்தாபனம். லோகமான்ய திலகர், வீரர் லஜபதி ராய், தேச பந்து தாஸ், மோதிலால் நேரு, வீரத் தமிழர் சிதம்பரம் பிள்ளை போன்ற அரும் பெரும் தியாகிகள், உடல், பொருள், ஆவி யாவற்றையும் ஒருங்கே தத்தஞ் செய்து பாதுகாத்து வந்த ஒரு உன்னத ஸ்தாபனம். இந்திய மக்கள் எல்லோரும் அன்புடன் ஆதரித்துவந்த ஸ்தாபனம் காங்கிரஸ். பல ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான உண்மைத் தலைவர்களும் ஊழியர்களும், தொண்டர்களும் எண்ணற்ற தியாகம் செய்து, அவர்கள் தியாகத்தின் பலத்தால் ஒளி பெற்று விளங்கியது காங்கிரஸ். ஆயுள்காலமெல்லாம் காங்கிரசையே நம்பி, காங்கிரசுக்காக சர்வதியாகமும் செய்த ஊழியர்களும், தியாகிகளும் எத்தனையோ லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்; எத்தனையோ ஆயிரக் கணக்கில் உயிரைவிட்டார்கள். அடி, உதை, மிதிபட்டு இரத்தஞ் சிந்தி, சிறை சென்று சிறையிலேயே மடிந்த தியாகமூர்த்திகள் எத்தனையோ ஆயிரக் கணக்கில் உண்டு; உயிருடன் எத்தனையே ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அவர்கள் செய்த தியாகத்தைப் பற்றி மூச்சு விடவில்லை. மூச்சு விடவும் காணோம். ஏன்? அவர்களே உண்மைத் தியாகிகள்! அவர்கள் பிரதி பலன் எதிர் பார்த்து சேவை செய்யவில்லை. பிரதி பலன் எதிர் பார்த்து தியாகம் செய்யவில்லை. பிரதிபலன் எதிர்பார்த்து சுதந்திரப் போராட்டத்திலே குதித்துப் போராடவில்லை. அந்தப் போராட்டத்திலே சகிக்க முடியாத இன்னல்களுக்குட்பட்டும், தரித்திர நிலைமைக்கு வந்தும், அவர்கள் தியாகத்தின் பெருமையைப் பற்றி பேச முன் வரவில்லை. அவர்கள் தியாகத்தைக் காட்டி, சிறை சென்ற "சர்ட்டிபிக்கட்" டைக் காட்டிப் பதவிகளுக்காகப் போட்டி போடவில்லை; லைசென்ஸ், பெர்மிட்கள் வாங்கி, கள்ள மார்க்கெட்களில் கொள்ளை யடிக்கவில்லை! அவர்கள் இருக்குமிடமே தெரியவில்லை, ஏன்? காங்கிரசிலுள்ள போலித் தியாகிகளின் ஆர்ப்பாட்டத்தையும், ஆடம்பரத்தையும், பதவி வேட்டையையும், சுயநலத்தையும் கண்டு வெட்கி தலை குனிந்து, பேசாமல் ஒதுங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு காங்கிரசிலே இடமில்லை. ஆனால், காங்கிரசிலே இன்று யார் இருக்கிறார்கள்? காங்கிரஸ் இன்று யாரைப் பொம்மையாக ஆடிக் கொண்டிருக்கிறது? போலிகளின் கைப் பொம்மையாக இருந்து கொண்டிருக்கிறது! பண மூட்டைகளும், கள்ள மார்க்கெட் கொள்ளைக் காரர்களும் இன்று காங்கிரசில் வந்து புகுந்து கொண்டார்கள்! சந்தடிவாக்கிலும், சந்தர்ப்பவாக்கிலும் காங்கிரசில் வந்து புகுந்து கொண்ட போலித் தியாகிகள் தான் இன்று துள்ளிக் குதிக்கிறார்கள்! காங்கிரசிலே ஒண்ட வந்த இந்தப்பிடாரிகள், காங்கிரசிலேயிருந்து ஊழியுள்ளகாலம் சேவை செய்த அரும் பெரும் தொண்டர்களையும், தியாகிகளையும் மதிக்காமல், அவர்களை ஒதுங்கும்படி செய்து விட்டன! இந்தக் குறை குடங்களே இன்று கூத்தாடுகின்றன! தியாகத்தீயிலே குதித்து புடம் போட்டு எடுத்த சொக்கத் தங்கமென மனப்பால் குடித்துக்கொண்டு இந்த செக்கு மாடுகள் காங்கிரசை வளைய வளையச் சுற்றி வருகின்றன! சீனித் தழை தின்ற மாடு செவியறுத்தாலும் போகுமா? காங்கிரசையும், போலித் தியாகத்தையும் காட்டி, லைசென்ஸ், பெர்மிட்கள் வாங்கி, துணிக் கடை முதல் இரும்புக் கடை, சினிமாக் கொட்டகைகள்வரை நடத்தி வரும் இந்த சுய நலத் தியாகிகளே, இன்று காங்கிரசைத் தாங்கி நிற்பதாகக் கனவு காண்கிறார்கள்! இந்தருசி கண்ட பூனைகள் காங்கிரசிலிருந்து வெளியேறுமா? எப்படி வெளியேறும்? வெளியேறத்தான் மனம் வருமா? வெளி யேறினால் வயிற்றுப் பாட்டுக்கு வழி என்ன? இந்தப் போலித் தியாகிகளால், சுய நல வாதிகளால்தான் காங்கிரசுக்குக் கெட்ட பெயர்; காங்கிரசையும், காங்கிரஸ்சர்க்காரையும் மக்கள் வெறுக்கவும் எதிர்க்கவும் இந்த வேடதாரிகளே காரணம்! காங்கிரஸ் செல்வாக்கை இழக்கவும், காங்கிரசுக்கு எதிர்ப்பு ஏற்படவும் இந்தக் குண்டு பெருச்சாளிகளும், நரைப் பெருச்சாளிகளுமே காரணம்! உண்மைத் தலைவர்களும், ஊழியர்களும், தியாகிகளும் மன முடைந்து போவதற்கு இந்த மானங் கெட்ட சோணகிரிகளே காரணம்! தியாகமாம் தியாகம்! இந்தப் போலிகள் தியாகத்தையும், வாய்ச் சொல் வீரத்தையும் கண்டு மக்கள் சிரிக்கிறார்கள்; வெறுக்கிறார்கள்! பெரிய பெரிய தலைவர்கள் கண்டிக்கிறார்கள். இவர்கள் உடனே காங்கிரசிலிருந்து வெளியேற வேண்டும், வெளியேறாவிட்டால் வெருட்டியடிக்க வேண்டுமெனக் காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் ஒரு முகமாக வற்புறுத்திக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இந்த மானங்கெட்ட சோணகிரிகள் வெளியேறுகிறார்களா? இல்லை. அவர்களே மாபெரும் தியாகிகள், தியாக மணிகள் என்றெல்லாம் துடுப்பு அடித்துக்கொண்டு திரிகிறார்கள்! குடுகுடுப்பை கொட்டுகிறார்கள்! வால் போய் கத்தி வந்தது டும்-டும்-டும் என்று ஓட்டைக் கொட்டடித்து இறுமாந்திருந்த குரங்குக் கதை தான் ஞாபகத்துக்கு வருகிறது! அது மட்டுமா? இவர்கள் சுயசொருபத்தை எடுத்துக்காட்டி விட்டால் போதும், கோபம் பொத்துக்கொண்டு வந்து விடும்! அவர்கள் யாராக இருந்தாலும் சரி: கயவர்களிலும் கேடுகெட்ட கயவர்களைப் போல், அவர்களுக்கு இயற்கையான, கீழ்த்தரமான, மட்டரகமான பாஷையிலே உடைந்த ஜப்பான் கிராமபோன் பிளேட் மாதிரி, அவர்கள் தியாகத்தின் பெருமையை, வீரசூரத்தனத்தைப் பற்றி ஒரே ராமாயணம் பாட ஆரம்பித்து விடுகிறார்கள்! கும்பலோடு சேர்ந்து கோவிந்தாபோடு கிறவனைப்போல், உண்மைத் தியாகிகள், ஊழியர்களின் திருக்கூட்டத்தோடு, அவர்களையும் சம்பந்தப்படுத்தி கோவிந்தா போடுகிறார்கள்! ஆனால் உண்மைத் தியாகிகளுக்கும் ஊழியர்களுக்கும், இந்தக் கவைக்குதவாத கடைகெட்ட சுயநலதியாகக் கும்பலுக்கும் என்ன சம்பந்தம்? துளியும் சம்பந்தம் கிடையாது. இதை மக்கள் அறியாமலல்ல; அறிந்துதான் இருக்கிறார்கள். என்றாலும், இந்த சுயநல ரஜ்வி, ரஸாக்கர்களோ, வெறும் டமாரமடித்து மக்களை வஞ்சிக்கப் பார்க்கிறார்கள்! அவர்கள் வஞ்சகம் பலிக்குமா? மக்களை ஏமாற்ற இந்த நயவஞ்சகர்களால் முடியுமா? முடியாது.

### கடவுள்தான் காப்பாற்றவேண்டும்!

இந்த நய வஞ்சகர்களை, சுயநலக் கும்பலையே காங்கிரசிலிருந்து வெளியேற்ற வேண்டுமென பண்டித ஜவஹர்லால் நேரு, ராஜன் பாபு, சர்தார் பட்டேல், ஆச்சாரியா கிருபளானி போன்ற உத்தம தலைவர்கள், தியாக மூர்த்திகள் துடிதுடிக்கிறார்கள். பகிரங்கமாக இவர்களைக் கண்டித்தும் வருகிறார்கள். இவர்களை கண்டிப்பது, உண்மைத் தியாகிகளையும், ஊழியர்களையும் கண்டிப்பதாகுமா? இந்தப் போலி சுயநலமிகளை கண்டிப்பவர்களை ஐந்தாம் படையினரென்று நாக்கில் நரம்பில்லாமல் மானரோஷமின்றி எவனாவது தூற்றத் துணிவானா? அப்படித் தூற்றத் துணிகிறவர்களே காங்கிரசிலுள்ள ஐந்தாம் படையினர்! அந்த ஐந்தாம் படையினரே காங்கிரசின் பரம எதிரிகள்; காங்கிரசை குழி தோண்டிப் புதைக்கக்கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் சண்டாளர்கள் என்று மக்கள் நிச்சயமாக நம்பலாம்! இந்த சுயநல ஐந்தாம் படையினரைக் காங்கிரசிலிருந்து வெருட்டியடித்தாலொழிய, காங்கிரஸை ஒருபோதும் புனிதப் படுத்த முடியாது; காங்கிரசைக் காப்பற்றவும் முடியாது. இன்று குறைந்து வரும் செல்வாக்கையும் காங்கிரஸ் மீண்டும் பெற முடியாது என்பது நிச்சயம். காங்கிரசையும், காங்கிரஸ் தலைவர்களையும், காங்கிரசிலுள்ள உண்மைத் தியாகிகளையும், ஊழியர்களையும், இந்த சுயநல ரஜ்வி, ராஸாக்கர்கள் கும்பலின் குரங்குப் பிடியிலிருந்து இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

### பரிசுத்தப்படுத்த வேண்டும்!

சந்தர்ப்பவாக்கில் காங்கிரசில் புகுந்துகொண்டிருக்கும் இத்தகைய போலித் தியாக மூர்த்திகளின் கும்பல்களை ஒழித்துக்கட்ட இதர மாகாணங்களில் தீவிர முயற்சி எடுத்து வரும் போது, தமிழ்நாட்டில் மட்டும் காங்கிரஸ் தலைவர்கள் மூச்சுப்பேச்சில்லாமலிருப்பதேன்? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜநாடார் மட்டும் ஏன் "கப்-சிப்" பென்றுவாயை மூடிக்கொண்டிருக்கிறார். பீகாரிலே, காங்கிரஸ் தலைவர் பண்டித பிரஜாபதி மிஸ்ரா பல திட்டங்கள் போட்டு வேலை செய்து வருகிறார் தேவைக்கு மிஞ்சிய நிலங்களைப் பெற்றுக்கொண்ட காங்கிரஸ்காரார், அந்த நிலங்களை நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்துவிடும்படி உத்திரவு போட்டிருக்கிறார். காங்கிரஸ்காரர் கணக்குச் சொல்ல முடியாத படிக்குப் பாங்கிகளில் இருப்பு வைத்திருந்தால், அவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார். காங்கிரஸ்காரர் கண்ட்ராக்ட்கள் எடுக்கக் கூடாது; கண்ட்ரோல் பொருள் வர்த்தகம் செய்யக் கூடாது; நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சென்னையின், குறிப்பாகத் தமிழ்நாட்டின் நிலைமை என்ன? விசேஷ பெர்மிட், லைசென்ஸ்களெல்லாம் காங்

(12-ம் பக்கம் பார்க்க)

ATLAS
ASBESTOS CEMENT SHEETS
அஸ்பெஸ்டோஸ் சிமிமெண்ட் ஷீட்
(English Make)
SOLE AGENTS FOR
MADRAS & BOMBAY PRESIDENCIES
THE REX TRADING CO.,
32/33, Sembudoss Street, - MADRAS-I.

# தமிழ் மணி

வாரப்பதிப்பு

சென்னை, விரோதிஹு ஆடிமீ 30உ (14-8-1949)


# இன்பச் சுதந்திரம்!

**சு**தந்திரம் என்ற அந்த ஒரு வார்த்தையிலே என்ன இன்பம்! என்ன உணர்ச்சி; என்ன எழுச்சி! இருநூறு ஆண்டுகளாக அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்த 40 கோடி இந்தியருக்கு இந்த சுதந்திரத்திலே இன்பம் எற்படாமலிருக்க முடியுமா? எழுச்சியும், உணர்ச்சியும் தட்டாமல் எப்படி இருக்க முடியும்? ஆம்; எங்கும் சுதந்திரமென்பதே பேச்சு; எல்லோரும்சமமென்பது உறுதியாச்சு! இந்த சுதந்திரம் வந்து இன்றோடு இரண்டு வருடங்கள் பூர்த்தியாச்சு; நாளை, ஆகஸ்ட்மாதம் 15ந்தேதி சுதந்திர தினம்; இந்தியரின் இன்ப தினம். ஆனால், இந்திய மக்கள் எல்லோரும் இந்த சுதந்திர இன்பத்தை அனுபவிக்கிறார்களா? அதுதான் இல்லை; வெறும் பேச்சோடும், திட்டங்களோடும் சரி; உண்மையில் இந்திய மக்கள் அந்த சுதந்திர இன்பத்தை அனுபவிக்கிறார்களில்லை. இன்றைக்கும் கோடிக்கணக்கான மக்கள்உண்ண உணவும், உடுக்கத் துணியும், உறங்க இடமுமின்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு உயிர்நாடி போன்றிருக்கும் இந்த மூன்றும் இல்லாத சுதந்திரம் என்ன சுதந்திரம்? அந்த சுதந்திரத்திலே மக்கள் என்ன இன்பத்தை எழுச்சியை உணர முடியும்?

## களஞ்சியமா இது?

பரந்த இந்தியாவிலே ஏழை மக்கள் படுத்துறங்க இடமில்லை; உலகின் களஞ்சியம் என்று புகழ் பெற்ற இந்தியாவிலே, மக்களுக்குப் போதிய உணவில்லை அரை வயிற்றுக்கும் அளவு போட்டு, கட்டுப்பட்டு உணவு தானியங்களை பெறவேண்டியிருக்கிறது. ஆலைகள் நிறைந்த நாட்டிலே மக்கள் அரை நிர்வாண பக்கிரிகளாக, கந்தை அணிந்த குசேலர்களாகக் காட்சியளிக்கின்றனர்! இந்தக் குறைகள் என்று நீங்கும்? அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென, சென்ற நான்கு வருடங்களாக சர்க்கார் எத்தனையோ திட்டம் போட்டார்கள்; என்னமெல்லாமோ முயற்சித்தார்கள்! பிரசாரஞ்செய்தார்கள். எல்லாம் திட்டத்தோடும் பேச்சோடும் நின்று விட்டது. உணவு உற்பத்தி பெருகவில்லை: பஞ்சம் குறைய வில்லை. இதில் மத்தியசர்க்காரும், மாகாண, சமஸ்தான சர்க்கார்களும் தவறிவிட்டார்கள். இன்று இந்தியாவின் உணவுபற்றாக்குறை 44 லட்சம் டன். இதைஎப்படியும்1951-ம்வருடத்திற்குள் பூர்த்தியாக்கவேண்டும். இதற்கு இந்திய சர்க்காரின் உணவுக் கமிஷ்னர் ஆர். கே. படீல் நான்கு திட்டங்கள் போட்டிருக்கிறார். திட்டம் போடுவது பெரிய காரியமல்ல; அந்த திட்டத்தை மக்கள் உணர்ந்து, அவரவர் கடமையை அறியும்படி செய்வதில்தான் சர்க்கார் முதலில் வெற்றிபெற வேண்டும். அதில் சர்க்கார் எவ்வளவுதூரம் வெற்றி பெறப் போகிறார்கள் என்பதைப் பொறுத்துப் பார்ப்போம். இந்தத் திட்டம் வெற்றிபெறுமேயானால், இந்திய யூனியனிலுள்ள 30 கோடி மக்களுக்கும் வயிறார உணவு கிடைக்குமென்பது நிச்சயம்.

## 44 லட்சம் டன்னுக்கு வழி

உணவுக் கமிஷ்னர் படீல் போட்டிருக்கும் திட்டப்படி 44 லட்சம் டன் அதிக உணவு தானியங்களை எப்படி உற்பத்தி செய்யப்போகிறார்? சாகுபடியிலிருக்கும் நிலங்களில் தீவிரமாக வேளாண்மை செய்வதின் மூலம் 36 லட்சம் டன் தானியம் உற்பத்திசெய்யலாம். சாகுபடிக்கு வராமலிருக்கும் நிலங்களை டிராக்டர்களைக் கொண்டு உழுது பயிரிடுவது மூலம் 3 லட்சம் டன்; குழாய், கிணறுகள் எடுத்துச் சாகுபடி செய்வதின்மூலம் 2½லட்சம் டன், இப்பொழுது கரும்பு சாகுபடியாகும் நிலத்தில் ஒருபகுதியை உணவுத் தானியங்கள் சாகுபடி செய்யும் நிலங்களாக மாற்றுவதின் மூலம் 2¼ லட்சம் டன்னும் உற்பத்திசெய்யலாம். இதற்கான நல்ல விதைகள், எருக்கள், டிராக்டர்கள் முதலியவை கொடுத்துதவ சர்க்கார் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஆனால், இவை யாவும் விவசாயிகளுக்குக் குறைவின்றிக் கிடைக்குமேயானால், விவசாயிகளும், மக்களும் இத்திட்டத்தில் கவனம் செலுத்தி உற்சாகத்துடன் உழைப்பார்களேயானால் நான்கு வருடத்திலல்ல, ஒரே வருடத்தில் பற்றாக்குறையாக இருக்கும் 44 லட்சம் டன் அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துவிடலாம். அதில் சந்தேகம் வேண்டியதில்லை. இந்தியாவிலே சுமார் 6 கோடி ஏக்கர் நெல் சாகுபடியாகும் நிலமுண்டு. கோதுமை சாகுபடியாகும் நிலம் 2½ கோடி ஏக்கர். இவை சாகுபடியாக 20 லட்சம் டன் நெல் விதையும்9லட்சம் டன்கோதுமை விதையும் வேண்டியிருக்கிறது. இந்திய சர்க்கார், மாகாண சமஸ்தான சர்க்கார்களுக்கு 25 கோடி 10 லட்சம் ரூபாய் மான்யமாகவும், 28 கோடி 30 லட்சம் ரூபாய் கடனாகவும் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சென்னை சர்க்காருக்கு மட்டும் மான்யமாக 5 கோடி ரூபாயும், கடனாக 6 கோடி ரூபாயும்கிடைக்கும். இந்த சலுகைகளைப்பெற்று சென்னை சர்க்கார் உடனே அதிக உணவு உற்பத்தி திட்டத்தில் தீவிரமான வேலை செய்தால் என்ன? நான்கு வருடங்கள் பாழாயிற்று. சுதந்திரம் கிடைத்த இந்த மூன்றாவது வருட ஆரம்பத்திலாவது சென்னை சர்க்காரும், இதர மாகாண, சமஸ்தான சர்க்கார்களும் உணவு உற்பத்தியில் தீவிரமாகக் கவனம் செலுத்துவார்களாக. போதிய உணவு, உடை, உறங்க இடம் இவை மூன்றுமே மக்கள் இன்பத்துக்கு இன்றியமையாதவை. இவை குறையின்றிக் கிடைத்தால்தான் மக்கள் சுதந்திர இன்பத்தைப் பூர்ணமாக அனுபவிக்கமுடியும். சுதந்திரம் கிடைத்த இந்த மூன்றாவது வருடத்திலாவது மக்களுக்கு இந்த இன்பம் சம்பூர்ணமாகக் கிடைக்குமென்று நம்புவோமாக.

# சந்தடி வாக்கில்...?

**பெருச்சாளி மணியந்தான்! : : நேற்று முளைத்த பத்தாம் பசலிகள்! பஞ்சத்து ஆண்டிகளே! - கழுதைக்கும், களிமண்ணுக்குமா வோட்? ஏன் இந்த வாய்த்துடுக்கு? : அந்த நீலன் எங்கே?**

[ஊழியன்]

சந்தடி வாக்கிலும், ஏதோ ஒரு சந்தர்ப்ப வாக்கிலும் காங்கிரசுக்குள்ளே புதிதாக ஓடி வந்து நுழைந்த ஒருசில ஆகஸ்ட் மகா "தியாகிகளே" இன்று மகாப் பெரிய தியாகிகளாகவும், தியாகத்தின் அவதார புருஷர்களெனவும் அகம்பாவம் கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் மண்டையில் ஏறியிருக்கும் மமதை கொஞ்ச நஞ்சமல்ல! ஆயுள் முழுவதும் காங்கிரசிலே இருந்து, காங்கிரசுக்காகவும், தேசத்துக்காகவும் சர்வதியாகமும், சேவையும்செய்து வந்த எத்தனையோ லட்சக்கணக்கான உண்மையான தியாகிகளையும், ஊழியர்களையும் அவர்கள்அலட்சியமாகக்கருதுகிறார்கள்; அலட்சியம் செய்வதோடு மட்டுமா? அவர்களை அடியோடு ஒதுக்கி வைக்கவும் துணிந்துவிட்டார்கள்! இன்று இந்த இரண்டுங் கெட்டான் பெருச்சாளிகள் மணியந்தான்! அவர்களே காங்கிரஸ், காங்கிரசே அவர்கள் என்ற திமிரும் கொண்டிருக்கிறார்கள்! காங்கிரஸ் இன்று அவர்களையே நம்பி இருப்பதாகவும், காங்கிரஸ் தேர் அவர்களையே நம்பி ஓடிக் கொண்டிருப்பதாகவும் இறுமாப்புக் கொண்டிருக்கின்றனர்! பின்னால் வந்த கொம்பு, முன்னால் வந்த செவியை மறைத்ததாம்! நேற்று முளைத்த இத்தப் பத்தாம் பசலி "தியாகிகள்!", பஞ்சத்து ஆண்டிகள், பரம்பரையாகத் தியாகஞ் செய்த லட்சக்கணக்காண உண்மைத் தியாகிகளை ஒதுக்கித் தள்ளவும் துணிந்துவிட்டது ஆச்சரியமல்லவா? நடக்கட்டும்; இவர்கள் ஆட்டமும், பாட்டமும், ஆர்ப்பாட்டமும் எவ்வளவு காலத்துக்குத் தான் ஓடிக்கொண்டிருக்கிறதென்பதைப் பொறுத்துப் பார்ப்போம்!

## நேற்று வந்தவர்கள்!

இனிமேல் இவர்கள் தியாகம் செய்யப் போகிறார்களா? இவர்கள் தியாகத்துக்கு அவசியம் என்ன வந்தது? எனவே, காங்கிரஸ் பெயரைச்சொல்லி, தியாகத்தைக் காட்டி அகப்பட்டவரையில் சுருட்டிக் கொண்டு போகவேண்டியதுதான்? கொக்குக்கு ஒரே நோக்கு என்பார்களே! அதேபோல் இந்த மகா பெரிய தியாகிகள், சந்தடி வாக்கில் வந்தவர்களின் ஒரே குறி சுயநலந்தான்! அவர்கள் தியாகத்தின் குறிக்கோள் சுயநலம் ஒன்றே! இதைக் கண்டு பல லட்சக்கணக்கான உண்மைத் தியாகிகளும், ஊழியர்களும் சந்தடி செய்யாமல் வெட்கித் தலை குனிவதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்? அந்நியர் ஏதேச்சாதிகாரத்தையும், சுரண்டலையும், ஒழிக்க காங்கிரஸ் பாடுபட்டது. காங்கிரஸ் தலைவர்களும், ஊழியர்களும், தொண்டர்களும் மகத்தான தியாகஞ் செய்தார்கள். ஆனால், அதே ஏதேச்சாதிகாரமும், சுரண்டலுமே இன்று ஒரு சில காங்கிரஸ் தலைவர்களிடமும், தியாக மணிகளிடமும் மிளிர்ந்து கொண்டு வருகிறது. உண்மை ஊழியர்களுக்கும், தியாகிகளுக்கும், நேர்மையான தொண்டர்களுக்கும் இந்த சுதந்திரத்திலே பங்கில்லை; காங்கிரசிலும் செல்வாக்கில்லை. நேற்று வந்து நுழைந்த பணமூட்டைகளுக்கும், கள்ள மார்க்கெட் கொள்ளைக்காரர்களுக்கும், சமய சஞ்சீவிகளுக்குந்தான் பலே கொள்ளை! கொள்ளை லாபம்! எம். எல். ஏ., எம். எல். சி. களில் பெரும்பான்மையோர் அவர்களே! ஏன்? மந்திரிகளாக இருந்து இன்று அதிகாரம் செய்கிறார்களே, அவர்களில்கூட சிலர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான்! உண்மைத் தியாகிகளையும், தொண்டர்களையும் 5-ம் படையினர் என்று பழித்தவர்களே! ஊழியர்களையெல்லாம் வீணர் சோம்பேறிகள் என்று வீம்பு பேசியவர்களே! அவர்களை எள்ளி நகையாடிய "தியாக சிகாமணிகள்" தான் இன்று பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறார்கள்! காங்கிரஸ் போராட்டத்தின்போது ஓடி ஒளித்தவர்களும், மன்னிப்புக் கேட்டுக் கொண்டவர்களும், ஒரு செல்லாக்காசுகூட காங்கிரசுக்கோ, தேசத்துக்கோ தியாகஞ் செய்யாதவர்கள் தான் இன்று பெரிய மனிதர்கள்! அவர்களுக்கு தான் செல்வாக்கு! அதிக தூரம் போவானேன்? சமீபத்தில், நடந்த

## சந்தடிவாக்கில்...?

(முன் பக்கத் தொடர்ச்சி)

முனிசிபல் தேர்தலில் கூட பெரும்பாலும், இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களும், கள்ளமார்க்கெட் கொள்ளைக் காரர்களுமே காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்தலுக்கு நின்ருர்கள். அதிர்ஷ்ட வசமாக வெற்றியும் பெற்ருர்கள்! அதே போல், ஜில்லா போர்டு தேர்தல்களுக்கும் இந்த சுயநலக் கும்பலைச் சார்ந்த புண்ணிய மூர்த்திகளும், ஏழை, எளிய மக்களைச் சுரண்டும் கள்ள மார்க்கெட் காரருமே நிறைய இருக்கிருர்கள்! ஜில்லாக்கள் தோறும் ஏற்படுத்தப்பட்ட அட்ஹாக் கமிட்டியின் இந்தக் கள்ள மார்க்கெட் 'தியாக மணி'' களையும், காங்கிரசுக்குத் துரோசம் செய்து ஒடிய ''தியாக மூர்த்திகளை''யுமே பெரும்பாலும் பொறுக்கி எடுத்திருக்கிருர்கள்! போதாக் குறைக்கு இந்த அட்ஹாக் கமிட்டியினர் பொறுக்கி எடுத்த ஒரு உண்மைத் தியாகிகளைக் கூட வேண்டாமெனத் தள்ளி, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் நாடார் கூட அவருடைய அபூர்வமான திருவிளையாடல்கள் வேறு புரிந்திருக்கிருர்! இதை நான் கூறவில்லை காமராஜ் நாடாரே இதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிருர். ஜில்லா போர்டு தேர்தல் சம்பந்தமாகவே, அவர் இன்று யாத்திரை செய்கிருர் ராமநாதபுரம் சென்ருர். அங்கே காங்கிரஸ் ''அன்பர்''களைக் கண்டு பேசினுர் இந்த ''அன்பர்கள்'' யாரோ அவருக்குத்தான் தெரியும்! அந்த அன்பர்கள் கூட்டத்திலே ராமசாமி சேர்வை காமராஜநாடாருக்கு ஒருபோடு போட்டார்! நேற்று வரை லீகிலும், காக்கிரசுக்கு எதிராக இருக்கும் கட்சிகளிலும் தீவிர பங்கெடுத்துக் கொண்டவர்களையும், கதரையே அணிந்தறியாதவர்களையுமே ராமநாதபுரம் அட்ஹாக் கமிட்டியினர் ஜில்லா போர்டு தேர்தலுக்கு காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். இந்த அபேட்சகர்கள் யாரென்று கூட, சர்வசதா காலமும் காங்கிரஸிலிருந்து சேவை செய்த உண்மை ஊழியர்களுக்கு அறவே தெரியாது. இந்த கள்ளமார்க்கெட் பேர்வழிகள் அட்ஹாக் கமிட்டி மெம்பர்களைப் பல வழிகளிலும் ஏமாற்றி அபேட்சகர்களாக வந்திருக்கிருர்கள். விழிப்படைந்திருக்கும் மக்களுக்கு இது நன்குதெரியும். இந்தப் பிரகஸ்பதிகள் காங்கிரஸ் பெயரால் வெற்றிபெறலாம். ஆனல், தோல்வியடைந்தால் புனிதமான காங்கிரசின் நல்ல பெயருக்கல்லவா இழுக்கு! இந்த இழுக்குவரக் காரணமாய் இருப்பவர்கள் அட்ஹாக் கமிட்டியினர்தான்; அவர்களே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ராமசாமி சேர்வை சக்கை வாங்கிவிட்டார்.

### பிரம்மாவாலும் முடியுமா?

ஆனல், இதைக்கண்டு காமராஜ் நாடார் கலங்குவாரா? பனங்காட்டு நரியா சலசலப்புக்கு அஞ்சும்? இது போல் எத்தனையோ சலசலப்புகளைக் கண்டிருக்கிருர்; அந்தச் சலசலப்பையெல்லாம் சமாளித்திருக்கிருர்! தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லாக்களிலுமுள்ள அட்ஹாக் கமிட்டியினரின் சிபார்சுகளை அவரே பரிசீலனை செய்திருக்கிருர்; திருத்தியும், ஆமோதித்தும் முடிவுசெய்திருக்கிருர். ஆகவே, முழுப் பொறுப்பும் அவருடையதே; அட்ஹாக் கமிட்டியினருடையது அல்ல. இனிமேல் அந்த முடிவை மாற்ற முடியாது; மாற்றுவது நியாயமுமல்ல; அது சட்டவிரோதமுமாகும். ஆகவே, காங்கிரஸ் அபேட்சகர்களை எல்லோரும் முழுமனதுடன் ஆதரிக்கவேண்டுமெனக் கேட்டு, முழுப்பொறுப்பையும் அவர் தலையிலேயே போட்டுக்கொண்டார்! ரொம்ப சரி; முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட அவர், எதற்காக அட்ஹாக் கமிட்டிகளை ஏற்படுத்தவேண்டும்? அந்தக் கமிட்டிகளின் சிபார்சுகளை ஏன் அடித்துத் தள்ளவேண்டும்? ஒரேயடியாக ''ஹிட்லரைப்'' போல் எல்லா அபேட்சகர்களையும் ஒரேயடியாக அவரே நியமித்து விடலாமல்லவா? அட்ஹாக் கமிட்டிகள் ஏற்படுத்தியது மக்கள் கண்ணைத் துடைக்கவா? அவரே தமிழ் நாட்டின், ஏன், சென்னை மாகாணத்தின் சர்வாதிகாரியாக காட்சியளிக்கிருர்! அந்த சர்வாதிகாரத்தை ஏன் ஜில்லா போர்டு தேர்தல்களிலும் ஒரே வரியில் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கக் கூடாது? யார் அவரை தடுக்கப் போகிருர்கள்? பிரம்மாவாலும் முடியுமா?

### அந்தக்காலமும், இந்தக்காலமும்!

ஆம்; காங்கிரஸ் பெயரால், காமராஜ் நாடார் ஒரு கழுதையை, வெறும் கல்லை, களிமண் கட்டியை நிறுத்தினலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க வேண்டியதே! மெய்தான்; அது அந்தக் காலம்; அன்னியர் ஆட்சி இருந்த காலம்; ஆனல், இந்தக் காலமோ மக்கள் கண்திறந்த காலம்! காமராஜ்நாடார் இன்னமும் கண்ணை மூடிக்கொண்டிருக்கலாம்! ஆனல், மக்கள் கண்திறந்தே இருக்கிருர்கள். எனவே, கண்ணை மூடிக்கொண்டு அவர் கள்ளமார்க்கெட் கொள்ளைக்காரர்களையும், மண்ணுங்கட்டிகளையும், சுயநல வேட்டைக்காரர்களையும் ஆதரிக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். அந்தக் காலம் மலையேறிவிட்டது என்பதை காமராஜ் நாடார் இன்னமும் அறியாமலிருப்பதே அதிசயத்திலும் அதிசயம். அப்புறம் அதே ராமநாதபுரத்தில் நடந்த அதிசயத்தைக் கேளுங்கள்! அங்கே ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. காமராஜ்நாடார் பேசும் முன்பே கூட்டத்தில் சலசலப்பு.பலர் பலபக்கங்களிலிருந்தும் பல கேள்விகளைக் கேட்டனர்; குறுக்குக் கேள்விகளும் வந்தன. ''ஜனநாயகத்தின் பெயரால் அடக்கு முறையா'' 'காங்கிரசுக்கு வோட்டா, கள்ள மார்க்கெட் காரருக்கு வோட்டா?'' என்றெல்லாம் அதிகப் பிரசங்கித்தனமாகக் கேட்டார்களாம்! இதையெல்லாம் கேட்டுச் சகித்துக் கொண்டிருப்பவரா காமராஜ் நாடார்?

### முடியுமா?

ஆவேசமும், ஆக்ரோஷமும் பொங்கி எழுந்தது. இணையற்ற ஈடுஜோடு இல்லாத தலைவர் அல்லவா? எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்? எதிரிகளைச் சக்கை வாங்கி விட்டார்! அந்த ஆவேசத்திலே அவருடைய மூளையையும் பறிகொடுத்துவிட்டார்! கேளுங்கள்; ''ஜனநாயகத்தின் பெயரால் அடக்கு முறை என்று சொல்லுவது பேதமை; இப்பொழுது நாங்கள் நடத்துவது அப்பழுக்கற்ற ஜனநாயக ஆட்சிதான்! ஹிட்லர் ஆட்சியல்ல. அடக்கு முறை ஆட்சி என்ருல் சுவர்களில் அபத்தமாக எழுதும் விரல்களை துண்டிப்போம்! சர்க்காரை நடத்துகிறவர்களை அனுவசியமாகத் தூற்றுகிறவர்களின் நாக்குகளை அறுப்போம்! எங்களால் முடியும்?'' என்ருர் காமராஜ நாடார். முடியுமா? முடியுமா என்றுதான் நான் கேட்கிறேன். நான் மட்டுமல்ல; இரண்டுகோடித் தமிழர் அல்ல; 5 கோடி சென்னை மக்களே கேட்கிருர்கள். காமராஜ்நாடாரை மட்டுமல்ல; அவரே குறிப்பிட்ட காங்கிரஸ் மந்திரிகளைக் குறிப்பாக காமராஜ்நாடாரே தேடி எடுத்த முதன் மந்திரி ராஜாவையும், காமராஜ்நாடாருக்கு உற்ற துணையாக இருந்து சர்வத்தையும் ஆட்டி அசைத்து வைக்கும் மராமத்து மந்திரி பக்தவத்சலத்தையும், மாதவமேனனையும் கேட்கிறேன். முடியுமா? முடியுமென்ருல் இது ஜனநாயக ஆட்சியா? மக்கள சர்க்காரா? ஹிட்லர் ஆட்சியில் கூட ஜெர்மனியில் இவ்வளவு கெடுபிடி இருந்ததில்லையே? ஹிட்லர் இவ்வாறு ஜெர்மன் மக்களை அதட்டிப் பயமுறுத்தத் துணியவில்லையே! இதாலியில் முஸோலினியும் துணிந்தது கிடையாது. ஏன்? கோபல்ஸ், கோயரிங் கூட இவ்வாறு பேசியதாகக் கேள்விப்பட்டதில்லை, இவர்கள் போகட்டும்; இந்திய யூனியன் சர்க்காரை மிரட்டிக்கொண்டிருந்த ஹைதராபாத் ரஜ்வி, ரஸாக்கர் கூட இவ்வாறு அத்துமீறி மக்களை உருட்டியதில்லை! உருட்டத்தைரியமும் ஏற்படவில்லை. ஆனல்; தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர், காமராஜ்நாடாருக்கு அவ்வளவு துணிவும்,இறுமாப்பும் ஏற்பட்டுவிட்டது! இது மக்கள் சர்க்கார்; இது அப்பழுக்கற்ற ஜனநாயக சர்க்கார், இதை நாங்கள் உணருகிருேம் என்று சொல்லிக்கொண்டே விரல்களைத் துண்டிப்போம், நாக்கை அறுப்போம்: அது எங்களால் முடியும்; என்று வாய்த்துடுக்காக பேசத்துணிந்ததேன்? இதிலிருந்தே காமராஜ் நாடாரின் எதேச்சாதிகாரத்திமிர் எவ்வளவுக்கு உச்சநிலையடைந்துவிட்டது என்பதை மக்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். அவரைத் தட்டிக்கேட்க யாருமில்லை; யாரும் கிடையாது என்ற அகம்பாவந்தான் இவ்வளவுக்கும் அஸ்திவாரம்! அந்தக் கூட்டத்திலேயிருந்தவர்களுக்கு ஆண்மையில்லையா? அவர்கள் இந்த மிரட்டலைக் கேட்டு வாய்பொத்திக்கொண்டா இருந்தார்கள்? அவர்கள்நெஞ்சிலே உரமில்லையா? அவர்கள் வாய்களில் கொழுக்கட்டையையா திணித்துவைத்திருந்தது? ஆம்; இது ஜனநாயக காலம்; அதனுல்தான் மக்கள் காமராஜ் நாடார் பேசிய மமதையான பேச்சை மன்னித்துவிட்டார்கள்! ஜனநாயகமே அவரைக் காப்பாற்றியது. கம்யூனிஸ்ட்டுகளையும், சோஷ்யலிஸ்டுகளையும், திராவிடக் கழகத்தினரையும் கண்டித்துவரும் காமராஜ்நாடார் மட்டும் கம்யூனிஸ்டுகள் போக்கில் துடுக்காகப்பேசலாமா? அவருக்கு மூளை எங்கேபோயிற்று? ஆவேசத்தில் இவ்வாறு அர்த்தமின்றிப்பேச அவர் அறிவைக் கடன் கொடுத்துவிட்டாரா? பிரிட்டிஷார் காலத்திலே நீலன்என்றஒருகொடியவன் இருந்தான். அவன் பேச்சும், அட்டூழியங்களும் சொல்லுந்தரமன்று. அந்தக்கொடிய நீலன் சிலை மௌண்ட்ரோடிலிருந்தது. அந்தக் கொடியவன் சிலை இருக்கக் கூடாது என்று சத்தியாக்கிரகம் செய்து அந்தச்சிலையைத் தூக்கி எறியும்படி செய்தவர்கள் காங்கிரஸ் தொண்டர்களே!அடி உதைபட்டு சிறை சென்ற தியாகிகள் பலர். அத்தகைய தியாகிகளும், தொண்டர்களும், காமராஜ் நாடார் பேச்சைக்கேட்டு இடிந்துபோயிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனல், அந்தப் பேச்சை அவர்கள் இனிமேலும் சகித்துக்கொண்டிருக்கப் போகிருர்களா? சகித்துக்கொண்டிருக்க முடியுமா என்று அந்த உண்மை ஊழியர்களையும், தியாகிகளையும் கேட்கிறேன். அவர்களே சரியான பதில் சொல்லட்டும். இன்றேல், மக்கள், இரண்டு கோடி தமிழ் மக்கள் பதில் சொல்லுவார்கள். காங்கிரஸ் சர்க்காரிலே அடக்குமுறை ஒன்றுதான் பாக்கி; அதுவும் வரட்டும்! வரவேற்க மக்கள் தயாராக இருக்கிருர்கள்.


## அறிவிப்பு

கீழ்க் கண்டவர் 'தமிழ் மணி' ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிருர்

**பி. எஸ் பிள்ளை**

டவுன் நியூஸ் ஏஜெண்டு

ராபர்ட்ஸன் பேட்டை.

(K G F.)

### சிறந்தவடிவில் அதிர்ஷ்டமான கைக்கெடியாரங்கள்



ஸ்விஸ்ஸர்லாந்தில் செய்யப்பட்டவை. லீவர், ஜுவல்களுடன் கூடியவை. சரியான மணி காட்டக் கூடியவை. உறுதியானவை. உழைக்கக் கூடியவை. 5 வருஷ உத்தரவாதம். தபாற்செலவு அணு 12. வட்டமும் தட்டையுமானது அளவு11½''

3 ஜுவல் குரோமியம் 12/–
உயர்ந்த ரகம் 14/–
3 ,, மத்திய செகண்டுடன் 16/–
5 ,, 18/– உயர்ந்தரகம் 20/–
7 ,, 22/– ,, 24/–
7 ,,ரோல்டுகோல்டு,, 33/–
15 ,, குரோமியம் 30 –
ரோல்டுகோல்டு 40 –
நீண்டசதுரம், அல்லது,டோனேவடிவம் (படம்)
5 ஜுவல் குரோமியம் 24/–
உயர்ந்த ரகம் 27 –
5 ,, ரோல்டுகோல்டு உயர்ந்தரகம் 30–
7 ,, குரோமியம்30/ரோல்டுகோல்டு 35/
15 ,, ,, 47 – ,, 55 –
அலாரம் டைம்பீஸ் 14/– உயர்ந்த ரகம் 15/– மிக உயர்ந்த ரகம் 17/–

PARAGON WATCH COMPANY,
Post Box No. 11419 Culcotta-6 [TM]

போன் நெ. 55138

உயர்ந்த லயன், ஆப்டோன், கலர் ப்ளாக்குகளும், நல்ல சித்திரங்களும், ரப்பர் ஸ்டாம்புகளும் தயாரிப்பவர்கள்.

**நாராயணன் அன் கோ,**

பெரியமெட், : : மதருஸ் - 3.

டம்-டம் குண்டு

(முன்பக்கத்தொடர்ச்சி)

# ஜப்பான் கிராமபோன் பிளேட்! எட்டாத பழத்துக்குக் கொட்டாவி!

கிரஸ்காரர், அல்லது, அவர்கள் உறவினர் கையிலிருக்கின்றன. கண்ட்ரோல் பொருள், கள்ளமார்க்கெட் வியாபாரங்களெல்லாம்பெரும்பாலும்அவர்களிடந்தான்! கண்ட்ராக்ட் சிபார்சுகளெல்லாம் காங்கிரஸ்காரரிடமிருந்தே போகின்றன! ஒரு சில, எம். எல். ஏ., எம். எல்.சி,ஏன்,இரண்டொருமந்திரிகளுக்கு இதே தொழில்தான். அவர்கள் உறவினருக்காக சிபார்சு செய்ய அவர்கள் அஞ்சுவதே இல்லை. இது ஒருபுறமிருக்கப் பம்பாயைப் பாருங்கள். காங்கிரசுக்குப் புத்துயிர் அளித்து, புனர் நிர்மாணம் செய்யும் பெரும் முயற்சியில் இறங்கி இருக்கிறார்கள். அதற்காக பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி, அதன் கீழுள்ள இதர காங்கிரஸ் கமிட்டிகளின் நிர்வாக அங்கத்தினர்கள் எல்லோரும் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டு, மீண்டும் மறு தேர்தலுக்கு நிற்பதென முடிவு செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஸ்தாபன வேலை செய்ய தினம் 6 மணி நேரமாவது நிர்வாகிகள் செலவிட வேண்டும். இன்றேல் வெளியேறிவிட வேண்டும். இழுக்கு ஏற்பட்ட எவரும் ஸ்தாபனங்களில் பதவி வகிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். காங்கிரசை மீண்டும் புனிதப்படுத்தும் வரையில், எந்த நிர்வாகஅங்கத்தினரும்,சட்டசபை,ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களுக்கு நிற்கக் கூடாது என்றும் கண்டிப்பான உத்திரவு போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு, ஆந்திர, கேரள காங்கிரஸ் கமிட்டியினர் இவ்விஷயத்தில் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? இங்கு பதவிவேட்டையும் சுயநலமுமே மேலோங்கி நிற்கிறது. பதவிக்குப் பலத்த போட்டி! எட்டுக் குட்டிக் கரணம்எண்ணிப் போட எத்தனையோ தியாக அவதார மணிகள தவங்கிடக்கின்றன! அதெல்லாம் போகட்டும்; பம்பாயைப் பின்பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜநாடாரும், காரியக் கமிட்டி மெம்பர்கள் எல்லோரும் அவர்கள் பதவிகளை ராஜினாமா செய்து, மீண்டும் மறு தேர்தலுக்கு நிற்கத் தயாரா என்று கேட்கிறேன். இந்த ஒரு கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லட்டும் பார்க்கலாம். காங்கிரசிடமும், காந்திஜியிடமும் அவர்களுக்கு உண்மையான அபிமானமும், அன்பும் இருக்குமேயானால் அவர்கள் ஏன் ராஜினாமா செய்து காங்கிரசை புனிதப்படுத்தக் கூடாது? இந்தியா சுதந்திரமடைந்து இரண்டு வருடங்களாகின்றன. இந்த இரண்டு வருடங்களில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன காங்கிரசின் செல்வாக்கோ வரவரக் குறைந்து கொண்டு போகிறது. மக்களிடம் பழைய அன்பும், அபிமானமும் ஆதரவுமில்லை; காங்கிரசைப் புனிதப்படுத்த இந்த மூன்றாவது வருட ஆரம்பத்திலாவது தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்கள் முன் வருவார்களா? காங்கிரஸ் பதவிகளை உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டுகும்மாளம் போடும் சந்தர்ப்பவாதிகளையும், போலித்தியாக மணிகளையும் ஒழித்துக்கட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பமல்லவா? இந்த நல்ல சந்தர்ப்பத்தை உண்மைத் தியாகிகளும், ஊழியர்களும் ஏன் பயன்படுதிக் கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன். அவர்கள் ஒன்று பட்டு, ஒன்று திரண்டு காங்கிரசைப் புனிதப்படுத்தும் வேலையில் தீவிரமாக இறங்குவார்களேயாயின் அவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம். சத்தியத்துக்கு அழிவில்லை; சத்தியம் நிச்சயம் வெற்றி பெற்றே தீரும். அதற்கு நமது தாய் நாட்டின் தந்தை, சுதந்திரகர்த்தா, சத்தியசீலர் மகாத்மா காந்தியடிகளே சரியான உதாரணம். அவரைப் பின் பற்றி உண்மையான தியாகிகளும், ஊழியர்களும், தொண்டர்களும் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டால் எவ்வளவோ நலமாக இருக்கும். அவர்கள் இதுவரையில் செய்த அரும் பெரும் தியாகம் பெரியதல்ல; இதுவே தியாகத்தில் பெரிய தியாகமாகும். நமது தாய் நாட்டிற்குச் செய்யும் பெரும் சேவையாகும்.

## காங்கிரசுக்கு ஆபத்து!

காங்கிரஸ் அன்றிருந்த நிலைமை வேறு, இன்றிருக்கும் நிலைமை வேறு. அன்று காங்கிரசில் தியாக மூர்த்திகள் நிறைந்திருந்தார்கள்; இன்று போலிகளும், சுயநலமிகளும் குவிந்துவிட்டார்கள். அன்று அந்நிய சர்க்காரை காங்கிரஸ் எதிர்த்து நின்றது. அதற்காக சர்வ தியாகமும் செய்ய வேண்டி இருந்தது. மக்கள் ஆதரவும் பூர்ணமாகக் கிடைத்தது. காங்கிரஸ் மக்களிடையே நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தது. இன்று சதந்திரம் வந்துவிட்டது. சுதந்திர இந்தியாவில் நிர்வாகத்தையும், அதிகாரத்தையும் காங்கிரஸ்காரரே ஏற்றுக்கொண்டார்கள். இதனால், அதிகார வெறியும் பதவி வேட்டையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. காங்கிரசின் லட்சியமும், புனிதத் தன்மையும் சீர்குலைந்து, சீர்கேடடைந்து வருகிறது. மக்களும் வெறுப்படைந்து வருகின்றனர். இதை காங்கிரஸ் எதிரிகள் பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். இன்று காங்கிரசுக்கு நாலா பக்கமும் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட்கள், சோஷியலிஸ்ட்கள், ராஷ்ட்ரிய சேவா சங்கத்தினர், ஹிந்துமகா சபையினர், தெற்கே ஜஸ்டிஸ், திராவிட கழகத்தினர் போன்றவர்கள் காங்கிரசை எதிர்த்து அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். இது எட்டாத பழத்துக்குக் கோட்டாவி விட்டவன் கதையாகத்தான் முடியலாம். என்றாலும், இந்த எதிர்ப்பு சக்திகளை அலட்சியமாகத் தள்ளிவிட முடியாது. இப்பொழுது ஆபத்து வராவிடினும் பிற்காலத்தில் முக்கியமாகப் பாஷாவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டால் இந்த எதிர் கட்சிகளால் காங்கிரசுக்குக் கண்டிப்பாக ஆபத்து வந்தே தீரும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஜஸ்டிஸ், திராவிடக் கழகத்தின் ஆபத்து வந்தே தீரும். எனவே, தமிழ்நாட்டை பொறுத்தவரையில் காங்கிரசை நன்கு பலப்படுத்த வேண்டுவது ரொம்ப அவசியம். சமீபத்தில் திருவண்ணாமலைக்கு வந்த கவர்னர்.ஜெனரல் டாக்டர் ராஜகோபாலாச்சாரியார் எந்த நோக்கத்துடன் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை கண்டு பேசினாரோ, நாயக்கருக்கு என்ன யோசனை சொன்னாரோ சொல்லமுடியாது. திராவிடக் கழகத்துக்கு உலைவைக்கக் கூடிய யோசனை சொல்லியிருந்தால் அதனால் தீமையேயொழிய, நன்மை இல்லை! நாயக்கரும் எந்த அந்தரங்க நோக்கத்துடன் திராவிடக்கழகத்திலேயே பிளவை உண்டுபண்ணினாரோ அதுவும் சொல்ல முடியாது. ஆச்சாரியார் திராவிட கழகத்துக்கு உலை வைக்க எண்ணியிருந்தால், அது வேறு ரூபத்தில் தலைகாட்டப் போகிறது! திராவிடக் கழகம் இருதலை பாம்பு போல் படமெடுத்து ஆடலாம்! இத்துடன் ஜஸ்டிஸ் கட்சி வேறு தலைகாட்டப்போகிறது! ராமசாமி நாயக்கரும் சர். ஏ. ராமசாமி முதலியாரும் ஒரு ஐக்ய முன்னணி ஏற்படுத்திக் கொண்டு செத்துப்போன ஜஸ்டிஸ் கட்சிக்கு மீண்டும் உயிர் கொடுக்கலாம். அப்படியானால் இந்த நெருக்கடியான சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவு அதிகரிக்கலாம். அந்த ஆதரவு அதிகரிக்கவிடாமல் தடுக்க இப்பொழுதே முட்டுக்கட்டைபோடவேண்டும். தமிழர் ஆதரவையே பெரும்பாலும் காங்கிரஸ் பெறவேண்டும். அதற்கு தமிழ் நாடு காங்கிரசின் போக்கு மாற வேண்டும்; முக்கியமாகத் தலைமை மாறவேண்டும். ஒரு திறமைமிக்க நேர்மையான, மக்கள் ஆதரவைப் பெற்ற ஒரு சிறந்த ராஜதந்திரி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பதவிக்கு வரவேண்டியது மிக மிக அவசியம். தமிழ் நாடு காங்கிரசிலேயுள்ள பதவி வேட்டைக்காரரையும், சுயநலக்காரரையும், முதலில் ஒழித்துக்கட்டிக் காங்கிரசைப் புனிதப் படுத்த வேண்டும். தமிழ் நாட்டின் எதிர்காலத்தையும் தமிழரின் நன்மையையும் கருதியாவது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும், மற்றவர்களும் ராஜிநாமா செய்து, திறமையும், நேர்மையுமுள்ள அறிவாளிகளுக்கும், உண்மை தியாகிகளுக்கும இடம் கொடுத்தால் என்ன? இன்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் நாடார் சுமார் 12 வருடங்களாகத் தலைவராக இருந்து வருகிறார். இவ்வளவு காலம் தலைவர் பதவியிலிருந்ததுபோதாதா? இன்னமும் அந்தப் பதவியையாக்கட்டியழவேண்டுமா? நெருக்கடியான இந்த சமயத்தில் திறமைமிக்க உண்மையான தியாகிகளுக்கு இடம் கொடுத்தால் என்ன? ஆம்; ஆசை யாரைவிட்டது? எனவே, பதவி ஆசை யாரையும் சுலபத்தில் விட்டு ஒழியாது. ஆனால், அந்த ஆசையைப தவிமோகத்தை மக்களே ஒழித்துக் கட்ட வேண்டும். பதவிகளில் அட்டை போல் பல வருடங்கள் ஒட்டிக் கொண்டிருக்கிறவர்களை எப்படியும் ராஜிநாமா செய்யும்படி கட்டாயப் படுத்தியே தீர வேண்டும். அதற்காக உடனே தீவிரமாக வேலை செய்யும்படி தமிழ் நாட்டிலேயுள்ள எல்லாத் தியாகிகளையும், உண்மை ஊழியர்களையும் தொண்டர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். காங்கிரசை எப்படியும் புனிதப்படுத்தியே தீர வேண்டும். அதன் செல்வாக்கை மீண்டும் நிலை நாட்ட வேண்டியது ஊழியர்கள் கடமை. தியாகிகள் அவர்கள் தியாகத்தை இதற்காக அர்ப்பணம் செய்ய வேண்டும்; இரண்டு கோடித் தமிழர் நலன்களைக் கருதி, தமிழ் நாட்டின் எதிர் காலத்தை மனதில் கொண்டு எல்லோரும் இதற்காக பாடுபட வேண்டும். தீவிர முயற்சியில் ஈடுபடவேண்டும். தமிழ் நாட்டிலே இன்று தலை தூக்கி வரும் சுய நல பதவி வேட்டைக் கோஷ்டிகளையும், ரஜ்வி, ராஸாக்கர் கும்பல்களையும் கண்டிப்பாக ஒழித்துக் கட்டியே ஆகவேண்டும். இன்றேல், தமிழ் நாட்டின் எதிர் காலம் என்ன அல்லோலமாகுமோ ஆண்டவனுக்கே வெளிச்சம்!


ஸ்தாபிதம் 1941 தந்தி "உமா"

ஜெய் சுதந்திர பாரத்கி ஜெய்

### உமா கோல்டு கவரிங் ஓர்க்ஸ்

உமா மஹால், உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ் போஸ்டாபீஸ்: மசூலிப்பட்டணம்.

பாரத தேச சுதந்திர இரண்டாவது வருஷ சமயத்தில் எங்கள் வாடிக்கைக் காரர்களுக்கும், எங்கள் நன்மையை கோருகிறவர்களுக்கும் எங்கள் ஹ்ருதய பூர்வமாக அபி வந்தனம். 1941 முதல் இன்றைய வரைக்கும் எங்களால் தயார் செய்யப்பட்ட உமா தங்க கவரிங் ஆபரணங்கள் தங்க நிறம் உத்திரவாதம் இருந்து உங்களை ஆனந்தமடையச் செய்கிறது. இன்னும்கூட அதே மாதிரி உங்களை ஆனந்த மடையச் செய்யும்.




800 டிசைன் கொண்ட கேட்லாக் விண்ணப்பித்துக் கொண்டால் இலவசமாக அனுப்பப்படும். நகைகள் வி. பி. பார்ஸல் 0-15-0 அணா மாத்திரம்.

# அங்கும் இங்கும்

## அவசரம் வருகிறது!

அவசரம் வருகிறது என்ற தலைப்பைக் கண்டதும், இதென்னய்யா அதிசயம் என்று கேட்கத் தோன்றும். ஆம்; அதிசய மட்டுமல்ல; அவசரமும் கூட. காங்கிரஸ் ஆட்சியிலே சென்னை மாகாணத்திலே அதிசயமான அவசரச் சட்டங்கள் வரப்போகின்றனவாம்! ஆனால், அந்த அவசரச் சட்டங்களின் நோக்கங்கள் என்ன என்பதை மந்திரிகள் வெளியிட விரும்பவில்லையாம்! ஆகவே, அதிசயம், அவசரம் ஆகியவற்றோடு ரகசியம் என்ற வார்த்தையையும் சேர்த்துக்கொள்ளுங்கள். இந்த அவசரச் சட்டங்கள் கவர்னர் ஜனரலின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டிருக்கிறதாம். அவசரச் சட்டங்கள் முழு அவதாரம் எடுக்கும்போது கெஜட்டில் பிரசுரிக்கப்படுமாம்! பொறுத்துப் பார்ப்போம்.

## முட்டாள்கள் தேவை!

"தேவை! தேவை!! உடனே தேவை!!! திராவிடர் கழகத் தலைவரும், பெரியாருமான ஈ. வெ. ராமசாமி நாயக்கரின் திருவடிக் கீழிருந்து முழுநேரத் தொண்டாற்ற முட்டாள்கள் தேவை! விண்ணப்பம் போடுகிறவர்கள் சுயமரியாதை உணர்ச்சி அற்றவர்களாகவும், அரசியல் சமுதாயக்கொள்கைகளில் எந்தவிதக் குறிக்கோளும் இல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும். தலைவர் எதுசெய்தாலும் ஏனென்று கேட்கக்கூடாது. ஜனநாயகம், அமைப்புமுறை என்றெல்லாம்பேசக் கூடாது. பகுத்தறிவு என்று சொல்லி தலைவர் செய்யும் காரியங்களை யெல்லாம் மழுப்ப, திரித்துக் கூற தெரிந்திருக்கவேண்டும். உருட்டல் மிரட்டல், கொஞ்சம் ரௌடித்தனம் முதலியன தெரிந்திருக்கவேண்டும். படிக்காதவர்களாக இருந்தால் ரொம்ப நல்லது. படித்தவர்களாக இருந்தால் தலைவர் சொல்லுகிறபடி அறிக்கைகள் எழுதி கையெழுத்துப்போட்டு பத்திரிகைகளுக்கு அனுப்பத் தயாராக இருக்கவேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேலை செய்பவர்களுக்குக் கொஞ்ச நாளைக்கு விளம்பரமும், ஆளுக்குத் தக்கபடி வேறு சில சலுகைகளும் தரப்படும். மணியம்மையை மணந்துகொண்ட காரணத்தால் பெரியார் இழந்துபோன செல்வாக்கை மீண்டும் பெற உதவி செய்பவர்களுக்கே முதலிடம் தரப்படும்"

இது போல் ஒரு விளம்பரம் விடுதலை பத்திரிகையிலோ, ஈ. வெ. ரா. வால் நடத்தப்படும் வேறு ஏதாவதொரு பத்திரிகையிலோ காணப்படுமாயின் அதைக் கண்டு தமிழர்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில், ஸ்ரீ. ஈ. வெ. ரா தன்னைப் பின்பற்ற முட்டாள்களே தேவை என்பதை சமீபத்தில் தெளிவாகத் தெரிவித்து விட்டார். இது இதற்கு முன்பெல்லாம் ஜாடைமாடையாகச் சொல்லி வந்த விஷயந்தான் என்றாலும், இப்பொழுது அதனை உறுதி செய்து விட்டார். ஆகவே, இப்பொழுது அவரைப் பின் பற்றுவோரைப் பார்த்து "முட்டாள்கள்" என்று யாராவது சொன்னாலும் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். இதனால் பெரியாருக்கும் ஒரு அலாதி புகழ் உண்டாகும்! "முட்டாள்கள் தலைவர் பெரியார் வாழ்க!" என்றாலும் அவர் கோபித்துக் கொள்ள மாட்டாரென்றும் சிலர் பேசிக்கொள்ளுகின்றனர்.

## ஈ.வெ.ரா திருவிளையாடல்கள்!

சரி; இந்த முட்டாள்தனம் எப்படியாவது இருந்து தொலையட்டும். இப்படி பிறரை முட்டாள்களாக இருக்கச்செய்து கொண்டு ஈ.வெ. ரா செய்த, செய்கிற, செய்யப் போகிற காரியம்தான் என்னவோ! பாவம்! படித்தவர்கள் சிலர் இவரது பேச்சை நம்பி உண்மையிலேயே இவர் எதையோ சாதிக்கப் போவதாகக் கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. ஒரு சில கொள்கைகளையும், அரசியல் பேச்சுகளையும் வைத்துக்கொண்டு காலங்கழிக்கும் ஒரு நவீன வியாபாரி அவர் என்பதை யாரும் உணரவில்லை. உணரும் காலம் வரும்.

இப்படிப்பட்ட பெரியார் தான் வெட்கமின்றி மற்றவர்களைக் குறை கூறுகிறார். யாரோ சிலர் இயக்கத்தின் பெயரால் லாபம் அடைந்து விட்டார்களாம்! லட்சக்கணக்கிலே இவர் அடைந்த லாபத்தைப் யார் கேட்பது? கட்சிப் பணத்துக்குக் கணக்குக் காட்டாத இந்த யோக்கியர் மற்றவர்களைக் குறை கூறுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை! காங்கிரசிலே இவர் செய்த வேலையை இதற்குள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஈ. வெ. ரா இன்று நேற்று சுரண்டல் காரர் அல்ல; பழம்பெருச்சாளி.

சரி, இவரது வாதப்படியே பார்த்தாலும் இயக்கத்தின் பேரால் லாபமடைந்தவர்களிருக்கட்டும்; நஷ்டமும், கஷ்டமும் அடைந்தவர்களும், வாழ்க்கையை பாழாக்கிக் கொண்டவர்களும் எத்தனையோபேர் இருக்கிறார்களே, அவர்களையேனும் மதித்தாரா இவர்? யாரிடமும் நம்பிக்கை இல்லை என்றல்லவா சொல்லி விட்டார்! இதையெல்லாம் நடு நிலை நின்று யாராவது எடுத்துக் காட்டினால் தனது வண்டவாளமெல்லாம் வெளியாகிவிடுகிறதே யென்று நினைத்து அவர்கள் மீது சீறுகிறார். உண்மையைக் கூறும் பத்திரிகைகளைப் பார்க்காதே யென்று தனது பக்தர்களுக்கு உபதேசம் சொல்கிறார். அடேயப்பா! இவர் செய்யும் அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமா! இவைபற்றி நமக்கென்ன என்று இருந்துவிடலாமென்றாலும் முடியவில்லையே! தமிழர்களை அவமதிக்கும் ஒரு தலைவரைப் பற்றி பேசாமலோ, கண்டிக்காமலோ இருப்பது பத்திரிகை தர்மமல்ல என்பதற்காக இவரோடு நாம் மாரடிக்க வேண்டியதாயிற்று!

ஈ. வெ. ரா. வின் தில்லுமல்லுகளுக்கு இன்னொரு உதாரணம் காட்டுகிறேன் பாருங்கள். இவரது மன்னிப்புக் கடிதம் என்ற பெயரிலே பத்திரிகைகளில் வெளியான கடிதம் பொய்க் கடிதமாம். அதை யாரோ தயாரித்து இவரை ஏமாற்றி விட்டார்களாம். இதை நிரூபிக்க அக்கடிதத்தைப் புகைப்படம் பிடித்து "விடுதலை" யில் வெளியிட்டிருக்கிறார். ரொம்ப சரி; கடிதம் பொய்க் கடிதம் என்பதற்கு அத்தாட்சி அந்தப் புகைப் படமாகவே இருக்கட்டும். ஆனால், அந்தக் கடிதம் அசல் கடிதந்தான் என்பதற்கு அத்தாட்சி என்னவோ! சரி, அது எதுவாக இருந்தாலும் அக் கடிதத்தைப் பார்த்தவுடனேயே "விடுதலை" ஆசிரியருக்கு அச்சமோ, ஐயமோ தோன்றியிருக்கவேண்டாமா? அதிலும் இப்படிப்பட்ட பொறுப்புள்ள விஷயம் பிறர்கையால் எழுதப்பட்டிருக்கும்போது அதை நம்பலாமா? ஆசிரியர் உண்மையிலேயே பகுத்தறிவுவாதியாகவும் பொறுப்புணர்ச்சி உடையவராகவும் இருந்திருந்தால் உடனே தலைவருக்கு ட்ரங் டெலிபோன் செய்து "அன்புள்ள ஐயாவே, இதென்ன அதிசயக் கடிதமாயிருக்கே! பிரசுரிக்கலாமா, வேண்டாமா?" என்றல்லவா கேட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்யாததால் அத்தகைய கடிதம் ஒன்றை ஆசிரியர் எதிர்பார்த்திருக்க வேண்டும், என்றுதானே நினைக்க வேண்டியிருக்கிறது. இதை யெல்லாம் ஈ. வெ. ரா.வின் திருவிளையாடல்கள் என்றால், அதில் குற்றமென்ன? மற்ற திருவிளையாடல்களை பிறகு கவனிப்போம்.

## சோணகிரிகளுக்கு எச்சரிக்கை!

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பது போல, தமிழ் நாட்டு ஜவிரசாக்கர் கும்பல் ஏமாந்த சோணகிரிகளைப் பிடித்து வடெழுதச் செய்து தமிழ்மணியைத் தாக்கச் செய்வதன் மூலம் தமது செல்வாக்கை நிலை நிறுத்தப் பார்த்து அதன் பயனாக தம்மைக் கெடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். சோணகிரிகள் தாராளமாகத் தாக்கட்டும்; வேண்டுமானால் ஆட்டிகூட பார்க்கட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். தமிழ்மணி தாக்கப்படுவதால் அது பிறரைத் தாக்கி வரும் வேலையை விட்டுவிடாது. மேலும், மேலும் தாக்குதல் அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை. ஆனால் தவறாமல் தமிழ்மணியைத் தாக்குவதன் மூலம் சோணகிரிகளின் ஓட்டைத் தப்பட்டைகள் விளம்பரம் பெறலாம் என்று நினைக்கும் நினைப்பு மாத்திரம் செல்லாது. விஷயம் அதற்கு மாறாகப் போய்விடுவது மட்டுமல்ல, சோணகிரிகளுக்குப் பதில் சொல்லும் வேலையை ஊழியர் உலகமே மேற்கொள்ள நேரிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


## எல்லாவற்றையும் ஜாயின்ட்செய்தலும் கட்டுகட்டுதலும்

"சேபிராயிட்" ஆயில் புரூப்ஷீட் ஜாயின்ட் செய்தல்
எங்கெங்கே எண்ணெய்க்கும், பெட்ரோலுக்கும் பாதுகாப்பு தேவையோ அங்கெல்லாம் இதனை உபயோகிக்கலாம். ஆட்டோமொபைல் தொழிலுக்கு அவசியமானது.

"நியூ பிரையின்" கார்க்குகளும், ரப்பர் ஜாயின்டுகளும்.
பெட்ரோலின் சக்தியைச் சமாளிக்கப் பயன்படும் ஒரு சிறந்த ஜாயின்ட் முறை

"கலிமிஞே" கம்பிரஸ் செய்யப்பட்ட ஆஸ்பெஸ்டோ ஜாயின்டுகள்.
ஹைபிரஷர்கள், அதிகமாக சூடேற்றப்பட்ட நீராவி, திராவகங்கள், அமோனியா, சர்க்கரைச்சாறு முதலியன.

"ட்ரை ஆங்கிள்" உலோகங்களை ஜாயின்ட் செய்யும் சிமென்ட்.
எல்லா மேல்மூடிகளையும் பத்திரமாக மூடி சீல்வைக்க உபயோகப்படும்.

"சில்வர் சீலட்" பிளாஸ்டிக் மெட்டலிக் பாக்கிங்
வெந்நீர், தண்ணீர், கடல்நீர், திராவகம், காற்றுகள் ஆகியவற்றை நீராவி மூலம் கிளான்ட் பாக்கிங் செய்ய உபயோகப்படும்.

"பாரமவுன்ட்" வயில் ரெசிஸ்டிங் காம்பவுன்ட்
சுவிட்கியர், சர்கியூட் பிரேக்கர்கள், டிரான்ஸ்பார்மர்ஸ், பிரஷிங் முதலிய எலெக்டிரிக் அமைப்புகளுக்கு உபயோகப்படும்.

"சோடியாக்" சூப்பர்கேஸ் ஹார்டனிங்காம்பவுன்ட்
இரும்பு, எஃகு, முதலியவற்றை சீக்கிரத்தில் இறுகச்செய்து அவற்றின் மேல்பரப்பை கண்ணாடிபோல் இறுகச்செய்தல்.

"இம்பர்வியஸ்" டக்டில் நூபுங்காம்பவுன்ட்
சூரிய ஒளியால் தாக்கப்படாததும், சிறந்தவாட்டர் புரூப்பும் ஆகும். பனி, தண்ணீர், திராவகம், புகை, எரிபொருள்கள், கியாசுகள் ஆகியவற்றையும் சமாளிக்க வல்லது. எல்லா சீதோஷ்ண நிலைமையையும் தாங்கிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது.

அடிவான் & கம்பெனி, லிமிடெட்.
சென்னை — பெங்களூர் — வெலிங்டன் & நியூடெல்லி.

# விவசாய மசோதா

[வெ. ஜா. சாந்தப்பன்.]

சர்க்கார் சட்டங்களை இயற்றலாம் திட்டங்களை வகுக்கலாம்; ஆனால், அதனை நிறைவேற்றினாலன்றி, பயன் ஏற்படாது. சட்டம் இயற்றினால் அது பெரும்பான்மையோருக்கு நன்மையளிப்பதாகவும், அநேகருடைய ஆதரவு பெற்றதாகவும் அமைய வேண்டுவதோடல்லாமல், சட்டம் இயற்றுபவரை மக்கள் மதிக்கவும் வேண்டும். மந்திரிகள், தங்கள் திட்டங்கள் பயனளிக்க வேண்டுமென்று கருதினால், மந்திரி சபையில் ஊழல் சம்பந்தப்பட்ட மந்திரிகளை ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டு, நிர்வாகத் திறமையும், சிறந்த அறிவும், பரந்த நோக்கமும் கொண்ட புதிய மந்திரிகளைத் (அவர்கள் சிறைச்சாலைப் பறவைகளாகவோ, சட்டசபை மெம்பர்களாகவோ இல்லாவிட்டாலுங்கூட) தேர்ந்தெடுத்து மந்திரி சபையின் நன்மதிப்பை நிலைநாட்ட வேண்டும். 'அரசன் எவ்வழியோ அவ்வழியே மக்களும்' என்பதற்கிணங்க மந்திரிகளின் ஊழலைக் காரணமாகக் கொண்டு நிர்வாகிகள் அசிரத்தையாய் நடப்பதும், பொறுப்புள்ளவர்கள் பொறுப்பற்ற முறையில் செயலாற்றுவதும் எளிதில புலனாகும்.

இன்று உணவு நெருக்கடி சென்னையில் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் பல உண்டெனினும் அவற்றை மூன்றே மூன்று தலைப்பினுட்படுத்தலாம்.

(i) விவசாயிகளின் வறுமை.

(ii) கிராம அதிகாரிகளின் கொடுமையும், இலஞ்சத் தாண்டவமும், கள்ளக் கணக்கும்.

(iii) முன்னேற்றமான விவசாய முறைகளைப் பயன்படுத்தாமை.

ஆகவே, விவசாய மசோதா பயனளிக்க வேண்டுமாயின் இதனைக் கருத்திற்கொண்டு இவ்விழிவுகள் அகற்றப்படவும், அதனால் உணவுப் பெருக்கம் உண்டாகவும் வழிகோலும்படி அதனை அமைக்க வேண்டும்.

1. விவசாயிகளின் வறுமை:-- பயிரிடும் விவசாயிகளில் பெரும்பான்மையோர் கடன் படல், மழையின்மை, விலையேற்றம், அறியாமைபோன்ற அவதிக்குள்ளாகின்றனர். ஆனால். லேவாதேவிக்காரர், கொள்ளை லாப வியாபாரிகள், தந்திரமாயத் தரகர் முதலானோர் வசம் நிலம் மண்டிக் கிடக்கிறது. அவர்கள், எவன் அதிகக் கட்டுக் குத்தகை, அல்லது, வாரம்கொடுக்கிறானோ அவனிடம் நிலத்தை ஒப்புவிக்கின்றனர். அவன் உணவு உற்பத்தி எவ்வாறாயினும் அதைக் கருதுவதில்லை. பணம் பெறும் பயிரை உருவாக்குவதில் முனைந்து உழைக்கின்றான். கட்டுக் குத்தகை நெல்-கொள்முதலில் கரைகிறது. ஆகவே, நிலக்காரர்கூட பணம் பெறவே முயன்று வருவதால் விவசாயியும் அதற்கு இயைந்து நடக்கின்றான். விவசாயிக்கும் பலவிதச் செலவுகளுக்குத் தானியத்தைவிடப் பணமே தேவைப்படுகிறது. நிற்க; அவன் தாலூகா டிமான்ஸ்டிரேட்டரை அணுகி உரம் வாங்குமுன், கி. மு, கர்ணம் முதலானோர் அவன் பணத்தைப் பறிப்பதுடன், தாலூகா விவசாய அதிகாரியின் (டிமான்ஸ்டிரேட்டரின்) சிப்பந்திகள் தட்சணையின்றேல், நாட்களைக் கடத்துகின்றனர். அதனால் அவன் சலித்து முயற்சியைக் கைவிடுகிறான்.

ஒரு சமயம் கிடைத்தாலும் உரம்போட வேண்டிய பருவங் கடந்து கிடைக்கிறது. அப்படிப் பெற்றவர்களிலும் பலர் அதைப் பணமாக்குகின்றனரேயன்றி, வயலிற் போட்டு தானியமணியாக்குவதில்லை.

ஆகையால், வறுமையால் வாடித் தவிக்கும் விவசாயிக்கு, சட்டத்தில், முன் பணம், வேண்டிய கருவி, உரம், எருது இவை கிடைக்கப் போதிய வசதி செய்யப்பட வேண்டும்.

2. அதிகாரிகளின் சிறுமை: உரம், விதை வாங்க முற்படும் விவசாயி, அல்லது, நிலச்சொந்தக்காரர் தனக்கு நிலம் இருக்கிறதென்பதைக் குறிக்க, அல்லது, சர்வே நம்பர் குறித்து வாங்க, அல்லது கிராம அதிகாரியின் கைபொப்பம்பெற முயலும்போது, சிறிது சம்பளம் பெற்று பெரிய அதிகாரம் வகிக்கும் கிராம அதிகாரிகள் அன்னாரின் பணத்தைப் பறிப்பது வழக்கமாகி விட்டது. இதோடு அமையாது; சர்க்கார் கணக்கைப் பாழாக்கியும், கொள்முதலைக் கெடுத்தும் அன்னவர் செய்யும் கொடுமையைத் தான் நாம் பொறுக்க முடியாது. ஏழை விவசாயி பத்துக்கோட்டை நெல் அறுவடை செய்தால் பாதிக்குமேல் சர்க்காரால் கொள்முதல் செய்யப்படுகிறது. சில சமயங்களில் முக்கால் பாகம் அல்லது, முழுவதுமே பிடுங்கப்படுகிறது. ஆனால், நூறு கோட்டை நெல் அறுவடை செய்யும்; அல்லது, வாரம் பெறும், அல்லது, கட்டிக் குத்தகை வாங்கும் நிலச்சுவான்தாரிடமிருந்து ஒன்றிரண்டு கோட்டை நெல், அல்லது, போதிய பணம் பெற்றுக்கொள்ளும் அதிகாரிகள், நல்ல விளைவையுங்கூட தீய்வு, அரைமேனி எனப் பலவாறு கணக்கிட்டு, பத்து, அல்லது, இருபது கோட்டை நெல் விளைச்சலாகக் காட்டி அதிகமான நபர்களுக்கு உணவளிப்பதாகக் கூட்டி, 5 கோட்டை நெல்லைக் கொள்முதல் செய்கின்றனர். மீதியான சுமார் 90 கோட்டை நெல் என்ன ஆகும்? அது தான் இரவுக்கடை (Black-Market) களில் விற்பனையாகி, இரவு வேளைகளில் அரிசியாக்கப்பட்டு, மறைவிடங்களில் விற்கப்பட்டு வருகிறது. கிராமத் திண்ணைகளில் உட்கார்ந்து

(19-ம் பக்கம்-பார்க்க)




சிறு கதை

# நச்சுப் பல்

டி. எம். பாலகிருஷ்ணன்

நான் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும் பொழுது அநேகமாக தெரு விளக்குகளெல்லாம் ஏற்றப்பட்டு விட்டன. ஏதோ ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டு எங்கள் வீட்டு மாடிப் படிகளை ஏறினேன். என் தங்கை காஞ்சனு கையிலிருந்த வெள்ளித்தட்டைக் கீழே நழுவவிட்டுத் தரையில் உதிர்ந்து கிடந்த மல்லிகைமலர்களை உட்கார்ந்து மீண்டு தட்டில் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். என் வரவை எதிர் நோக்கியவள்போல என் பக்கம் திரும்பிப் பார்க்காமலேயே 'அண்ணுவுக்கு இன்று ஆனந்தம் போலிருக்கிறது! இந்தக் 'குஷி' யெல்லாம் இன்னும் கொஞ்ச நாழிகையிலே எகிறிப் போவப் போகுது' என்று கூறிவிட்டுத் தன் பற்களைக் காட்டி நகைக்க ஆரம்பித்தாள். 'காஞ்சனு! நீபலே விஷமக்காரி! ஆமாம், உன் அண்ணுவுக்கு ஆனந்தம் என்று எப்படித் தெரியும்?' என்றேன் என் தங்கையை நோக்கி, 'நீங்கள் உஹூம்......உஹூம்......உஹூம்...... என்ற ராகத்திலே பாடிக்கொண்டு வந்த பாட்டைக் கேட்டாலே சொல்லுமே! அது என்னைக் கேட்டுத் தான் தெரிய வேண்டுமோ?' என்று என்னைக் கேலி செய்துவிட்டு மல்லிகை மலர்களை தட்டில் அள்ளிக் கொண்டு ஓடி விட்டாள்.

காலில் அணிந்திருந்த பூட்ஸை ஒரு மூலையில் எறிந்துவிட்டு, கோட்டைக் கழற்றி ஸ்டாண்ட்டில் மாட்டிவிட்டு நாற்காலியில் 'அப்பாடா' வென்று அமர்ந்தேன. காஞ்சனுவும் தேநீரைக் கொண்டுவந்து மேஜையின் மேல் வைத்துவிட்டுப் போனுள்.

'ஏம்மா காஞ்சனு! எங்கே அம்மாவைக் காணேம்; அப்பாவையும் காணேம்?' என்றேன்.

'அம்மாவுக்கும் அப்பாவுக்கும்பெரிய சண்டை அண்ணு! எல்லாம் உங்களைப் பற்றிதான் அண்ணு. நீங்களென்னமோ கேவலமாக நடந்துகொள்கிறீர்களாம். குடியைக் கெடுத்து விட்டீர்களாம்; அப்பன் பெயரைக் கெடுக்கப் பிறந்தீர்களாம்; அப்படி இப்படி என்று அவர் அலறுகிருர்; ஏதேதோ உளறுகிருர்.'

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் நடத்தையில் விபரீதம்! என்னையறியாமலே விபரீதம், என்னிடத்தில்!! பின் ஏன் எனக்கு ஆச்சரியமாக இருக்காது? எனக்கே ஒன்றும் புரியவில்லை. சிந்தித்தேன்; மீண்டும் சிந்தித்தேன். ஆனுல், என்னிடத்திலுள்ள குற்றத்தை நான் உணரவில்லை. அன்போடு என் தங்கை எனக்களித்த அந்தத் தேநீர் எங்கேயோ பறந்து போய்விட்டது. மனதிலே ஒரு போராட்டம்: நாம் என்ன அப்படித்தான் பெரிய தப்பு செய்து விட்டோம்? அப்பாவை நெருங்கிக் கேட்கலாமா, வேண்டாமா? கோபத்துடன் இருக்கிருராமே! அந்த எரிச்சலில் நம்மைக் கண்டபடி பேசித் தள்ளினுல்......நாம் என்ன செய்வது? என்று பலவாருக என் சிந்தனை வட்டமிட்டுக் கொண்டிருந்தபோதே என் தந்தையின் கர்ஜனை சப்தத்தைக் கேட்டுத் திரும்பிநோக்கினேன். அவர்தான் அங்கு நின்று கொண்டிருந்தார். காஞ்சனு அவ்விடத்தை விட்டுப்போய்விட்டாள். மீண்டும் ஒரு கர்ஜனை செய்துவிட்டு அவரே பேச்சை ஆரம்பித்தார் 'ஏண்டா பாலு! என்பெயரைக் கெடுக்க நீ ஏண்டா எனக்குப் பிள்ளையாகப் பிறந்தே! நாம் என்ன! நம் குல மென்ன!! நம்ம கோத்திரமென்ன!!! ஆயிரங் காலத்துப் பயிரை அழிக்க ஒரு பூச்சி பிறந்தாப்போலேன்னு பிறந்திருக்கிரே' என்று, ஆவேசத்தோடு பேச ஆரம்பித்தார். 'என்ன அப்பா இது! என்னென்னவெல்லமோ சொல்லிக் கொண்டு போகிறீங்க; என்ன சொல்லுகிறீங்க? எதைப்பற்றி சொல்லுகிறீங்க? என்னமோ புதிர் போடருப் போலென்னு நீங்க, பேசுகிறீங்க' என்றேன் சாவதானமாக.

'ஆமாண்டா, புதிராகத்தானிருக்கும் என் பேச்செல்லாம் உனக்கு! அயோக்கியக் கழுதை. ஒன்றுமறியாதவன் போல் பாசாங்கு செய்கிருயே! நீ கற்ற வித்தை யெல்லாம் கலா சாலையோடு நிற்கட்டும். இங்கு வேண்டாம், அந்தக் கோணல் புத்தியும் குறும்புப் பேச்சும்: உன்னுடன் வந்தாளே இன்று சாயந்திரம், ஒய்யார நடையோடு, அந்த மோகினி யாருடா எனகிறேன்?' எனறு அவர் கூறி முடிப்பதற்குள் என் தங்கையும் தாயும் அங்கு வந்தனர்.

தன் கோபாக்கினியை என் தாயின் மேல் திருப்பினுர்.

'நீ பிள்ளை வளர்த்த லட்சணம் இப்பொழுதல்லவா தெரிகிறது! கல்யாணம் இதற்குள்ளாக எதற்கு என்று நாளைத் தட்டிக் கழித்து வந்தானே, அவனுடைய சாயம் இப்பொழுதல்லவா வெளுக்கிறது! பரதேசியாகப் போகிறவனுக்குப் பணத்தை வாரிச்செலவழித்தேனே! படித்த முட்டாள் என்ருல் அது இவன் தானடி' என்று சரமாரியாகப் பொழிந்துவிட்டு எங்கேயோ தொலைந்து போனுர்.

இந்தக் களேபரத்திற்குப் பின்னர்தான் என் தந்தை என்னேடு சரிவரப் பேசுவதில்லை. என் முகத்தை நிமிர்ந்தும் நோக்குவதில்லை. பெற்ற தந்தையாச்சே என்று நானே வலிந்து சென்று பேசினுலும் பேசுவதில்லை அவர். சறுக்கினது சாக்காகப் போயிற்று என்பார்கள், அது என் தந்தை யிடத்தில் முற்றும் பொருந்தும். கடந்த நாட்களிலேயே என்னைக் கண்டாலே அவருக்குச் சற்று வெறுப்புதான். பணத்தை வாரியிறைத்து விடுகிறேனும். டஜன் கணக்கில் ஷர்ட்டுகளும், ட்ரௌஸர்களும், பூட்ஸுகளும் எதற்கு என்பார். நான் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவருக்குஎன்னமோ இடைஞ்சலாகவே இருப்பதாக எண்ணுவார்; அவரிடத்தில் நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்ச மன்று; 'தந்தை' யென்ற பீடத்தில் அவர் இருந்தாலுமிருந்தார், என்னை ஒருவாறு வாட்டி வதைத்தார்; ஆட்டிப் படைத்தார். வைதீகத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர். குல ஆசாரத்தில் தீவிர நம்பிக்கைக் கொண்டவர். என் நடையுடை பாவனையைக் கண்டாலே வெறுப்புதான் அவருக்கு. "இவன் எங்கே உருப்படப் போகிருன்" என்று தன்னைக் குறித்து எவ்வளவோ தடவைக் கூறினதுண்டு; காதாறக்கேட்டதுண்டு; ஆனுல், கேட்காதவன்போல் போவேன். என் தாய் கூட என்னை எச்சரிப்பதுண்டு, 'அவர் கண்ணெதிரில் ஏண்டாப்பா பாலு அது மாதிரி பட்டுத் தொலைகிறே! அவர்கண் பொல்லாதது; ஏதாவது நச்சரித்துக் கொண்டே இருப்பார்; அவர் நச்சுப் பல் வாக்கு பலித்துவிடும்' என்று. பெற்ற மனம் பேதலிக்கத்தானே செய்யும்! இவ்வாறு கூறுபவர்களைப் பற்றி நாம் என்னவென்று நினைப்பது? என் தந்தையே ஒரு கர் நாடகப் பேர்வழியாக இந்த காலத்தில் வாழ்ந்து வரும்போது பெற்ற வளைக் குறை கூறி பிரயோசனம் என்ன?

கதைகள் பல உண்டு; கற்பனைக் கதைகளுக்கு கால்களை முளைக்கவைத்து ஜீவகளை ததும்பும்படி செய்யும் கதாசிரியர்கள் நிரம்ப உண்டு; அதிலும் காதற் கதைகளுக்கு அவர்கள் வகுத்திடும் திட்டங்கள் அநேகம் உண்டு; முடிவில் 'நாயகியும் நாயகனும் காதற் படகை உல்லாசமாய் செலுத்தினர்' என்று முடிப்பதுண்டு. ஆனுல், அந்த வகை கூட்டத்தினரில் என் வாழ்வு பொருந்தவில்லை. ஆனுல். நான் மட்டுமல்ல; எவ்வளவோ பேர் இருக்கலாம். என் கண்ணில் புலப்பட்டிராது. நான் கண்டெடுத்த அவள் என்னை வலிய வந்து சேர்ந்த வளுமல்லள். என் எணணத்தில்உதித்தவளுமல்லள். என்வெகு நாளைய பிரயத்தனங்களுக்குப் பிறகே ஒரு வழிக்கு என்னுல் கொண்டு வரப்பட்டவள். கதைகளிலே ஏற்படுவது போல் திடீர் சந்திப்பில் மனதைப் பறிகொடுத்தவர்கள் தொகுதியில் சேர்ந்தவன் நான் அல்ல. ரயில்வே ஸ்டேஷனில்தான் அவளை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவளும் என்னை நோக்குவாள், நானும் அவளை பார்ப்பேன். ஆனுல், அநதப் பார்வை-அவள் பார்வை எனக்குப் புதிதல்ல. எங்கள் 'கமர்ஷியல் இன்ஸ்டியூட்டில்தான் அவளும் சுருக்கெழுத்து கற்று வந்தாள். என்னை அவள் அடிக்கடி சந்திப்பதினுலேயே அவளுக்கே ஒன்றும் தோன்றி யிருக்காதென்று நினைக்கின்றேன். நேராகச் சென்று வந்த என் மனம் குறுக்குப் பாதையைத் தாவிப் பிடித்தது. பல் வேறு எண்ணங்கள் என் உள்ளத்திலேகூத்தாடின. என்எதிரிலே கூத்தாடினுள் அவள், என உள்ளத்திலே கூத்தாடினுள். உள்ளத்தில் மட்டுமல்ல; நான் சென்ற விடந்தனிலே கூத்தாடினுள். நாட்கள் செல்லச் செல்ல சிறிது சிறிதாக என் இதய பீடத்தில் வாழ ஆரம்பித்தாள். அவள் என் உள்ளத்தை உறைவிடமாகக் கொண்டாளே யொழிய, அதன் உள்ளக் கருத்தின் ஒரு துளியை யாவது நான் காண இயலவில்லை. பொழுதையும் போக்கினேன்; காலத்தையும் கழித்தேன். வலிந்து சென்று நானே அவளிடம் பேசினேன். படித்தவள் என்ற அளவுக்காக அவளும் பேசினுள். அவள் பேச்சிலிருந்து ஒரு ்கை தேர்ந்த குறும்புக்காரி என்று எனக்குப பட்டது.

'நீங்கள் சகோதரிகள் ஒரு வருடனும் பிறக்கவில்லை போலிருக்கிறது!' என்ருள், குறும்பும், குத்தலும் கலந்த தொனியில்.

அவள் கூறிய அவ்வார்த்தைகள், அவளின் மேல் நான் கொண்டிருந்த எண்ணங்களைத் தவிடு பொடியாக்கின. கேவலம் ஒரு பெண்! அவளிடத்தில் எனக்கு ஏற்பட்ட அவமானம் என்னுடைய நற்பிறப்பை இழிவு படுத்திக் காட்டிற்று. டிரெயினும் வந்தது; அவளும் போய்விட்டாள். இதற்குப் பின்னர்தான் என் போக்கை நானே திருத்திக் கொண்டேன். அவள் கண்ணில் படாமலேயே இருக்க ஆரம்பித்தேன். ஆனுல், என் கட்டுப் பாட்டிற்கு என் மனம் ஒன்றிவரவில்லை. கனி கிடைக்குமென்று வெகு நாள் காத்திருந்தவன் அக்கனியும் தன் கைக்கு கிட்டாமல் போகும் போது, அவன் மனம் அல்லற்படத்தானே செய்யும்? அதிலும் பதுமைபோன்றவள் அவள். மேனியோ நல்ல சிவப்பு அவளுக்கு; அழகு எனபது அவளிடத்திலுமிருந்தது. அழகைவிட அவள் பி. ஏ. பட்டதைப் பெரி,தெனக் கருதிய நான், அப்படிப்பட்டவளின் அன்பு நம்மை அணையவில்லையே என்று எண்ணிப் பார்க்கும் போது என் உள்ளக்குமுறல்களைப்பற்றி என்னவென்று நான கூறுவது? வெகு நாளைக்குப் பின்னர் ஓர் நாள், அவளை ஸ்டேஷனில் எதிர் பாராத விதமாக சந்திக்க நேரிட்டது. அன்று ஸ்டேஷனில் கூட்டம் அவ்வளவாக இல்லை. அவள் இருக்குமிடத்தை நிமிர்ந்து பார்க்காமலேயே சற்று தூரத்தில் நான்போய் நின்றுகொணடு வண்டியை எதிர் நோக்கியும், கையிலிருந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டும் நின்றிருந்தேன். வளையல்கள் 'கல கல' வென நகைத்துக்கொள்ளும் ஓசை கேட்டது. திரும்பி நோக்கினேன். அவள்தான் அங்கு! அருகில் புன்னகையோடு நின்று கொண்டிருந்தாள்.

'என் அறியாத் தன்மையால் நான் ஏதோ உங்கள் மனதைப் புண் படுத்தி விட்டேன். மன்னிக்கவும்!' எனறு தொடங்கி பேச்சை ஆரம்பித்தாள். நான் குறுக்கிட்டு 'அன்று நீ கூறிய வார்த்தைகள் என் மனதைப் புண் படுத்தினதாக நான் கருதாத போது, நீ அதைப் பற்றி கவலைப் படுவானேன். உன்னைப் பார்த்தாலே தெரிகின்றதே குறும்புத்தன முள்ளவளென்று' என்றேன் நான், சிரித்துக் கொண்டே.

எங்கள் வீட்டில் எனக்கு மணமுடிக்க ஏற்பாடு ஆரம்பித்து, ஏதேதோ நான் கைந்து கிழங்கள் வீட்டில் வந்து வம்பளந்து என் மணத்திற்கு வரையறைகள் போட ஆரம்பித்தன. கத்தரிக்காய் பேரம் போல் கலியாணத்தையும் பேசி வந்தனர். முடிவில் ஒரு பட்டிக் காட்டுப் பாவையை என் காலில் கட்டிப்


## ஸார் ஒரு வார்த்தை

நெருக்கடி குறைய, சௌகர்யமாகப் பிரயாணம் செய்ய

* டிக்கட்டில்லாதோரை சுட்டிக் காட்டுங்கள்
* கூடவரும் சாமான்களை கார்டு வானில் போடுங்கள்
* படியில் பிரயாணம் செய்வோரை தடுங்கள்
* சாரி சாரியாக நின்று டிக்கட் வாங்குங்கள்

## செய்வனத் திருந்தச்செய்

சாமான்களை அனுப்பும்போது நாசம், நலிவு, நஷ்டம், தாமதம், தவருன விலாசதாரிடம் சேர்த்தல், இவற்றைக் குறைக்க

* சீராக கட்டுங்கள்
* தெளிவான விலாசம் ஒட்டுங்கள்
* சொந்த அறிகுறியைக் காட்டுங்கள்
* லஞ்சத்தை ஒழிக்க உதவுங்கள்

[ரயில்வே வெளியீடு]

## நச்சுப் பல்

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாட முடிவு ஏற்பட்டது. இவ்வளவு கோலா கலத்திற்குப் பின் என்னை ஒரு முடிவு கேட்க கிழத் தூது கோஷ்டிகள் கிளம்பி வந்தன. வயதில் முதிர்ந்தவர்களென்று மரியாதை காட்டலாமே யொழிய, என் வாழ்வைப் பாழ்படுத்த நான் அவர்களை அனுமதிக்கலாமா? எனக்கு ஒரு நல்ல காரியத்தைச் சாதிக்கப் போவதாக அவர்கள் எண்ணிவந்த அந்த மடக் காரியத்தை இடித்துக் காட்டித் திருப்பியனுப்பினேன். பிறகு என் தந்தையே என்னிடம் வந்து 'ஏண்டா, உன்னுடைய முடிவுதான் என்னடா? தறுதலையாகத் திரியலாமென்று உத்தேசமா? அல்லது, என் குடியைக் கெடுக்கலாமென்று எண்ணமா?' என்ருர் பரிதாபத்துடன், வேதனை நிரம்பிய குரலில்.

'அப்பா! நீங்கள் பார்த்த பெண் எனக்கு சற்றுகூட பிடிக்கவில்லை. அவள் அழகை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? அதிலும் எழுத்து வாசனை என்னவெனபதே அறியாதவள். கை பிடித்தவளென்று காலத்திற்கும் அவளோடு வாழப் போகிறவன் நான்; அது நீங்களல்ல; இது உங்களெண்ணத்திலுதித்திருக்க வேண்டும்' என்றேன். 'என்னடா, வேதாந்தம் பேசறே! நீ படித்த லட்சணத்திற்கு எம். ஏ. படித்தவள் வருவாளென்று எண்ணமா? நம்ம குடும்பத்திற்குப் படித்த தேவடியாள் கூடாதடா, அதோடு குடும்பம் நாசமாகிப் போயிடும்; உறவு உருக்குலைந்து போயிடும்' என்று ஏதேதோ பேச ஆரம்பித்தார். 'என் மனதிற்குப் பிடித்தவளை மண முடித்து வைப்பதாயிருந்தால் காரியத்திலிறங்குங்கள். இல்லையென்ருல் வேண்டாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்றேன் தைரியத்தோடு.

என் வலையில் சிக்கிய அவள்—அல்ல—அவள் வலையில் சிக்கிய நான் பதிவு மணம் செய்துகொள்ள அவளைக் கேட்டேன். அவளும் ஆமோதித்தாள். அவள் மட்டுமின்றி அவள் பெற்ருேரும் இசைந்தனர். அவர்களின் பேச்சிலிருந்தே அது ஒரு நல்ல குடும்பம் என்று எனக்குப் பட்டது. இலங்கையிலே வாழ்ந்து வந்த பணக்கார குடும்பம் அது. உடன் பிறந்தவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தினுல் அவள் தகப்பனுர் சென்னைக்கு அருகிலுள்ள பரங்கி மலைக்குவந்து விட்டார். நல்ல குணமுள்ளவர்தானவர். பெற்ருேரின் குணம் பெண்ணுக்கும் அமைந்திருந்தது. அவளும் என்னைப் பற்றி கூறியுள்ளதைக் கேட்டாலே ஒரு விசித்ரமாகத்தானிருக்கிறது! "அவர் அழகாயிருக்கிருரோ, இல்லையோ எனக்கு அதைப்பற்றி நினைக்கத் தேவையில்லை. என் மனத்திற்கு பிடித்தமானவர். வாழ்விலே என் எண்ணக்கோட்டைகளை நிஜக் கோட்டைகளாக ஆக்கித்தரும் ஆற்றல் அவருக்கு உண்டு" என்று ஏதேதோ கூறியிருக்கின்ருளாம் அவள்.

நான் அவளைப் பதிவு மணம் செய்து கொண்டேன். அவள் வெகு நாளாக உருவாக்கிக் கொண்டிருந்த எண்ணக் கோட்டைகளுள் ஒன்றுநிஜக்கோட்டையாயிற்று. ஆனுல், அக்கோட்டை எவ்வளவு பெரிய போராட்டத்தினிடையே நிஜக் கோட்டையாக நிர்மாணிக்கப் பட்டதென்பது அவளுக்குத் தெரியுமா? எங்கள் பதிவு மணத்தைப்பற்றி என் தந்தை கேள்வியுற்ருர். அலறினுர்; ஆடினுர்; எங்கள் குடும்பத்திற்கு அழிவுக் காலம் ஏற்பட்டுவிட்டதென்று துடித்தார். "இந்த ஆண்டிப்பயலுக்குப் பெண்ணை வலிந்து கொடுக்க எந்த மடையனடா முன் வந்தான்?" என்று என் மீது சீறி விழுந்தார். வீட்டில் ஒரு கணமும் இருக்கக் கூடாதென்று உத்திரவு பிறப்பித்தார். அவ்வளவு கோபத்திலும் நான் அவரைக் கேட்டேன்: "உங்களுக்கோ படித்த பெண் இந்த உலகத்தில் ஒருவளும் கிடைக்கவில்லை. நானே தேடினுலும் வேண்டாமென்று கூறினீர்கள். இந்த ஜாதி வித்தியாசமோ உங்களோடு பிறந்த ஒரு தொத்து நோய். நீங்கள் இறந்தாலொழிய அது உங்களை விட்டு நீங்காது" என்றேன் எரிச்சலோடு.

"நீ அவளோடு கொஞ்சநாள் வாழப் போகிறவன். பிறகு குட்டி போட்ட நாய் மாதிரி இங்கு வந்து அலையத் தானே போகிருய். அதையும் நான் என் கண்களாலே பார்க்கத்தானே போகிறேன். அதிகம் பேசினுயோ கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன். இல்லாவிட்டால் வேலைக்காரனை விட்டே பிடரியைப் பிடித்து தள்ளச் சொல்லுவேன். மரியாதையாக வீட்டு வாசற்படியை விட்டிறங்கி எங்கேயாவது ஒழிந்து போடா. வெளியிலே எவனுவது கேட்டால் என் பிள்ளை என்று மட்டும் சொல்லிக் கொள்ளாதேடா' என்ருர். என் கால்கள் எங்கள் வீட்டை விட்டுத் தாண்டின. திரும்பிப்பார்த்தேன்; வீட்டுக் கதவு 'படீ' ரென்று மூடப்படும் சப்தம் கேட்டது. என் நெஞ்சில் ஏதோ பாரம் அழுத்துவது போன்ற தொரு பிரமை;

என் வாழ்வில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்திய நாட்கள் பல ஓடி மறைந்தன. நீரற்ற வரண்ட என் பாலை நெஞ்சில் அவள் அன்பு நீர் பெருக்கெடுத்து ஓடிற்று. எவள் ஒரு வளின் அன்புக்காக அன்று நான் ஏங்கிக்கிடந்தேனே அவள் அன்பு இன்று கிடைத்தது. ஆனுல், அதை நான அனுபவிப்பது 'துன்பத்திலோர் இன்பம்' என்பார்களே, அந்தப் பொழுதில். அவளோடு நான் வந்து ஆறேழு மாதங்களுக்கு மேலாகிவிட்டாலும் என் தந்தை கூறிய ஒவ்வொரு வார்த்தையும் புண் பட்ட என் நெஞ்சை சின்னு பின்னப்படுத்திற்று. ஏதோ கோபத்தில் கண்டபடி பேசினுர். ஆனுல், அவர் கூறினுரே அன்று, "நீ அவளோடு கொஞ்ச நாள் வாழப்போகிறவன். பிறகு குட்டி போட்ட நாய்மாதிரி இங்குவந்து அலையத்தானே போகிருய்; அதையும் நான் என் கண்களாலே பார்க்கத்தானே போகிறேன்" என்று. அவர் வாக்கு பலித்துவிட்டால்...அவர் நச்சுப்பல் வார்த்தை வெற்றி பெற்ருல்......என் லட்சியம் என்ன ஆவது? என் கதி என்ன ஆவது? அதை நான் சிந்தித்தபோது என் உள்ளத்தை ஒரு உலுக்கு உலுக்கியது.

வெகு நாளைக்குப் பின்னர் ஓர் நாள், நான் அந்தத் தனியறையில் உட்கார்ந்து கதை யொன்றை எழுதிக் கொண்டிருந்தேன். என் கவனம் ஜன்னல் வழியே வெளியுலகைத் தாவிற்று. ஒரே கருக்கிருட்டு; வான வீதியில் சந்திரனுமில்லை. ஆனுல், நட்சத்திரக் கூட்டங்கள் மட்டும் அங்கு மிங்கும் மின்னி மின்னிப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.--சிறு மழைத் தூறலின் சாரல் என் மீது 'சுடீ' ரென்று பட்டு என் கதையின் மேல் விழுந்து சிதறியோடின. ஒரு நட்சத்திரம் மட்டும் கூட்டத்திலிருந்து பிரிந்து எங்கேயோ ஓடி மறைந்தது.

எழுந்து கண்ணுடி ஜன்னலை மூடி விட்டு வந்து உட்கார்ந்து கதையை எழுதத் தொடங்கினேன். கதவு திறக்கும் ஓசை கேட்டது. அவள்தான்—என் மனைவிதான்!- முக்காடிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள்.

"இன்னுமா உங்கள் கதை முடிந்தபாடில்லை?" என்ருள்.

மெளனத்தோடு தலையை யசைத்தேன். "மணி என்ன ஆகிறதென்று பார்த்தீர்களா?" என்ருள், என் முகத்தை ஆழ்ந்து நோக்கியவாறே.

'அதுதான் தெரிகிறதே, முட்களிரண்டும் பன்னிரண்டில் பிணைத்துக் கொண்டிருக்கிற தென்று' என்றேன் புன்னகையோடு. நான் எழுதுவதையும் அவள் தடை செய்ய வில்லை. 'இருங்கள், என்று கூறிவிட்டுப் போனவள் சற்று நாழிகைக்குள் கோப்பையில் தேநீரை ஊற்றிக் கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்தாள்.

'என் கதா நாயகிக்குக்கூட உன் குணங்கள் தான் அமைந்திருக்கின்றன; அவளும் சகல கலைகளையம் கற்றவள் தான்' என்றேன். ஓஹோ! அவள் எந்தக் கல்லூரியில் படித்தவள்? அந்தக் காலத்து இளவரசிகள்கூட கல்லூரிப் பட்டங்கள் பெற்றவர்களோ?' என்ருள் குறும்போடு. மீண்டும் அவள் ஆரம்பித்தாள்: 'ஆமாம், உங்கள் இளவரசியின்மேல் எந்த இளவரசன்காதல் கொண்டு விட்டான் என்று சொல்லுங்கள்!' என்று அவள் கூறியதுடன் நில்லாமல் 'முடிவில் காந்தர்வ மணம் புரிந்து கொண்டார்கள் என்று மட்டும் முடிப்பதற்கு மறந்து விடாதீர்கள்' எனக் கூறிப் போய் விட்டாள் என் மனைவி.

கதை வேகமாகப் போய்க் கொண்டிருந்த சமயம், என் கதாநாயகன் இளவரசியை மணம் புரியும் காலம்; கடிகார முட்களிரண்டும் ஒன்றில் ஒன்றி வாழ்ந்த நேரம்; அறையின் கதவை யரரோ 'தடதட' வென்று மீண்டும் தட்டினர். எழுந்து போய் கதவைத் திறந்தேன். எங்கள் வீட்டுத் தோட்டக்காரன் பெரியசாமி நின்றுகொண்டிருந்தான். நானே பேச்சை ஆரம்பிப்பதற்குள், அவனே கூறினுன்: 'சின்ன எசமான்! நம்ப சின்ன எசமானியம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்; பெரிய எசமான் உங்களைக் கூப்பிட்டு வரச்சொன்னுரு'.

என் கதாநாயகியின் கல்யாணம் தடைப்பட்டது. பெரிய சாமியைப் பின் தொடர்ந்தேன். என் மனைவி படுக்கையில் படுத்திருந்தாள். அவள் பெற்ருேரும் அங்கு இருந்தனர். அவளோடு நான் பேசினேன்; என்னேடு அவள் பேசவில்லை. ஏதோ சைகைக் காட்டினுள். பிறகுபுரிந்தது, தனக்கு, 'மாரடைப்பு' என கூறுகிருளென்று. சற்று நாழிகை கழித்து மெள்ள வாய்திறந்தாள். 'உங்கள் கதையை முடித்து விட்டீர்களா?' என்ருள். நான் அவளிடம் பதில் கூறிய போது அவள் கண் இமைகள் தாஞகவே மூடிக் கொண்டன.

என் தந்தையிடம் நான் ஓடினேன்; அவரும் படுத்த படுக்கையாகத் தானிருந்தார். அவர் காலில் விழுந்து கதறினேன். அப்பா! அவள் இறந்து விட்டாளென்றேன்; "போனுல் போகட்டு மேடா! அதைச் சொல்லத் தான் இங்கு வந்தாயோ, ஊதாரிப் பயலே!" என்ருர், சீற்றத்துடன். "அண்ணு! நான் மன்னியைப் பார்க்க வரட்டுமா அண்ணு", என்று கெஞ்சிய என் தங்கை காஞ்சனுவை, 'நீயும் அவனேடு ஒழிந்து போய்விடேன்' என்ருர் என் தந்தை.

நான் மட்டும் திரும்பினேன். டிரெயினும் பரங்கிமலையை நோக்கி போய்க் கொண்டிருந்தது. கம்பார்ட்மெண்டின் ஒரு மூலையில் ஏதோ இரண்டு கிழங்கள் மட்டும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தன. "அவர் நச்சுப்பல் வாக்கு பொல்லாததப்பா! என்றது ஒரு கிழம. "என்ன இருந்தாலும் அவர் இப்படி தம் பிள்ளைக்கு நச்சுப்பல் வாக்கு கொடுக்கலாமா? சிறுசுகள் அப்படி இருப்பது சகஜந்தானே. பிள்ளை தவறு செய்துவிட்டது. திருத்தவும்முடியாது; ஆனுல், அவைகள் ஒன்றி வாழ்ந்தாலே போதுமென்று இருக்கக் கூடாதா?" என்றது மற்ருெரு கிழம். அவர்கள் குறிப்பிட்டது என்னைப்பற்றி அல்ல; ஆனுல், அவர்கள் கூறியதே என் வாழ்வுப் பாதையோடு பொருந்தியே இருந்தது. ஜன்னல் கதவின் மேல் தலையை ஊன்றிக்கொண்டு வெளிப்பரப்பை நோக்கினேன். "இந்த வாழ்வுக்காகவா நீ எல்லோரையும் பகைத்துக் கொண்டாய்? உன் கோட்டையே இடிந்து தூள்தூளாகிய பொழுது உன் மனைவி கட்டிய எண்ணக்கோட்டைகளை நீ நிஜக் கேட்டையாக்குவாய் என்று உன்னை எதிர் நோக்கி இருந்தாளே உன்மனைவி, எங்கே உன் ஆற்றல் அதை நிர்மாணிக்க? உன் தந்தை இட்ட நச்சுப்பல் வாக்கு மெய்த்து விட்டதே!" என்று இயற்கை என்னை நோக்கி வழி நெடுக நகைத்துக் கொண்டே வந்தது.

———


பொடிகளில் சிறந்தது பட்டணம் பொடி!

அவைகளிற் சிறந்ததும் அனைவரும் விரும்புவதும்

அப்பாதுரைப் பொடியே!

காரம்! குணம்!



மணம்! நிறம்!

நிறைந்தது.

ஒருமுறை பரீட்சிக்க உண்மை விளங்கும்

தயாரிப்பவர்:

ஆ. அப்பாதுரை முதலியார் & சன்,

பொடி, புகையிலை வியாபாரம்

நெ. 55, ஆச்சாரப்பன்தெரு, P. B. No. 189 சென்னை-1.

# நாடு வாழ...?

[நா. ஜகந்நாதன்.]

ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதி இந்தியாவின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் பெருமைபெற்ற நாளாக விளங்குகிறது. இந்தியாவின் வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலும் அந்நாள் ஒரு பொன்னாளாகப் பொறிக்கப்படும். காரணம்? இருநூறு ஆண்டுகளாக இந்தியாவை இடர்ப்படுத்தி ஆண்டுவந்த அந்நியராட்சி ஒழிந்ததேயாம். பலப்பல தியாகிகள், கண்ணீரையும் செந்நீரையும் சிந்தி, சிறையில் வாடி, செக்கிழுத்து, களியையும் கீரைக் குழம்பையும் சாப்பிட்டு, இருட்டுக் கொட்டடிகளில் இன்னல் அநுபவித்து, வீட்டையும், வீட்டிலுள்ளவர்களையும், அவர்தம் நலன்களையும் மறந்து, நாட்டு நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பெற்றுத்தந்த சுதந்திரம், நாம் அநுபவிப்பது! இந்த விடுதலைப் போரில் கண்ணிழந்தவர்களும் காலிழந்தவர்களும், உடல் நலமிழந்தவர்களும், உடைமைகளை இழந்தவர்களும், உயிரையே இழந்தவர்களும் கணக்கு வழக்கில்லாதவர்கள். அவ்வளவு தியாகிகளின் உழைப்பு, இன்று கொண்டாடப்படும் சுதந்திரம். இந்த நாளில், எண்ணற்ற தியாகிகளுக்குத் தலை வணங்கிவிட்டு, நாம் செயலாற்றுவோம்.

இன்று சுதந்திரம் பெற்று இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், சுதந்திரம் பெற்றதன் பலன் என்ன? அந்தப் பலனை யார் அநுபவிக்கிறார்கள்? வெள்ளையராட்சி ஒழிந்து விட்டதால், கிராமத்திலே வியர்வையைச் சிந்தி வேலைசெய்யும் மக்கள் ஏதாவது பலன் பெற்றுள்ளனரா? உழைப்புக்கேற்றவாறு உணவு கிடைக்கிறதா? ஆங்கிலேய ஆட்சி விலகியதால், உழைத்து உழைத்து ஓடாகப்போகும் தொழிலாளர்களுக்கு ஏதாவது விமோசனம் பிறந்ததா? முதலாளிகளின் இரும்புப் பிடியிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்ததா? நாட்டுக் குழந்தைகளை அறிஞர்களாக்கும் திருப்பணியை மேற்கொண்டுள்ள ஆரம்ப ஆசிரியர்களின் நிலை உயர்ந்ததா?..........நாட்டைப் பிடித்து வாட்டும் உணவுப் பிரச்னை ஒழிக்கப்பட்டதா? ஆயிரக்கணக்கான அகதிகளைக் காப்பாற்றும் சிக்கல் தீர்க்கப்பட்டதா? பல ஆயிரமாயிரம் இளைஞர்களை ஆட்டிப் படைக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்ததா? எண்ணற்ற மக்களை வாட்டும் வீட்டுப் பிரச்னை ஒழிந்ததா? இன்னும் இதைப் போன்ற பல பிரச்னைகள் ஒழிக்கப்படாமல் இருக்கின்றன. சுதந்திரம் பெற்றதால் பாமர மக்களுக்கோ, தொழிலாளருக்கோ, மற்றவர்களுக்கோ ஏதேனும் பலன் ஏற்பட்டுள்ளதாகச் சொல்ல முடியுமானால், அது 'சுதந்திர நாட்டின் மக்கள்' என்ற பெருமை (?) தான். மற்றபடி எண்ணற்ற பிரச்னைகள் தோன்றியிருக்கின்றன; தீர்க்கப்படவில்லை. இனி நாட்டின் பிரச்னைகளில் அடிப்படையாகிய பொருளாதாரப் பிரச்னையைக் கவனிப்போம்.

ஒரு நாட்டின் நல்வாழ்வு அதன் பொருளாதாரத்தைப் பொறுத்துள்ளது என்பது அறிஞர்களின் முடிவு. ஒருநாட்டின் பொருளாதாரம் எப்படி மாறுதலடைகிறதோ, அதே மாதிரிதான் அந்நாட்டின் வீழ்ச்சியும், வளர்ச்சியும் மாறும். அந்த நாடு செல்வ வளம் இல்லாத நாடாகஇருக்கலாம்; ஆனால், பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருக்கமுடியும். ஒரு நாடு செல்வங் கொழிக்கும் நாடாக இருக்கலாம் (இந்தியாவைப்போல) அதே சமயத்தில் பொருளாதாரத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கலாம். ஆகவே, பொருளாதாரம்தான் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது. அதுவேபோல, அரசியல் ஒரு நாட்டின் கலங்கரை விளக்கமாக இருக்கிறது! நல்ல ஆட்சிமுறை எந்த நாட்டில் இருக்கிறதோ, அந்த நாடு பொருளாதார நிலையில் உயர்ந்திருக்கும். எந்த நாட்டில் கட்சிப்பிளவுகளும், கோஷ்டி மனப்பான்மையும், அரசியல் வேற்றுமைகளும் ஆட்சிபுரிகின்றனவோ, அந்த நாட்டில் பொருளாதாரம் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும். சுருங்கக் கூறினால் அரசியலும் (Politics) பொருளாதாரமும் (Economics) ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு இரட்டைக் கலைகளாய் (Twin Sciences) விளங்குகின்றன. 'அரசியல் மக்களைப்பற்றிய கலை; பொருளாதாரம் பொருள்களைப் பற்றிய கலை.' நூறு ஆண்டுகட்கு முன்னர் பொருளாதாரம், அரசியலில் ஒரு கிளையாகவே கருதப்பட்டு வந்தது. அதற்கேற்ப அதன் பெயரும் அரசியற் பொருளாதாரம் (Political Economy) என்றிருந்தது. முதன் முதல் கிரேக்கர்கள் பொருளாதாரத்தை அரசியலில் ஒரு பாகமாகக் கருதினார்கள். ஆகவே, பொருளாதாரமும், அரசியலும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன.

பொருள் உற்பத்தி [Production) யும், உற்பத்தியானவைகளைப் பங்கிட்டுக் கொடுத்தலும் (Distribution) நாட்டில் விளங்கும் ஆட்சிமுறையால் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒருவன் தான் உற்பத்தி செய்பவைகளை எல்லாம் அரசாங்கத்திடம் அளித்து, அதற்கேற்ப பணம் பெற்றுக் கொள்ளவேண்டும்; அதனால் நல்ல லாபம் வரும்என்ற முறைஇருப்பின் உற்பத்தி செய்பவன் ஊக்கத்தோடு தன் தொழிலை நடத்துகிறான்; அதற்கேற்ப உற்பத்தி பெருகுகிறது. அவன் ஊதியமும் வளர்கிறது. இந்த முறை அமுலில் இருக்கும் நாட்டில் தனிப்பட்டவர்கள் உற்பத்தி அதிகமாகிறது. மற்றொரு நாட்டில் தனிப்பட்டவர்கள் உற்பத்தி செய்கின்றனர்; சில பங்குகளைப் பதுக்கிவைத்து, மற்றவைகளை உயர்ந்த விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் அடிக்கின்றனர்; ஒரு சிலரால் தான் பொருள்களை வாங்கமுடிகிறது; ஏழைகள் வதைகின்றனர்; அரசாங்கத்தாரால் தலையிட முடியவில்லை........ இரண்டு நாடுகளுக்கும் வித்தியாசம் அரசாங்கத் தலையீடேயாகும். அரசாங்கம் பலம் வாய்ந்ததாகவும், நம்பிக்கை பெற்றதாகவும், ஆதரவு பெற்றதாகவுமிருப்பின் உற்பத்தி செய்பவர்கள் ஊக்கத்தோடு, எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்துத் தம் தொழிலை நடத்துவர்; உற்பத்தி பெருகும்; நாடு வாழும்.

இதுகாறும் பொதுவாகப் பார்த்தோம், சில கொள்கைகளை. இனி நம் நாட்டைக் காண்போம். சுதந்திர நாட்டில் மூலை முடுக்குகளில் எல்லாப் பஞ்சம், பஞ்சம் என்ற கூக்குரல். உற்பத்திப் பெருக்க இயக்கம் (Grow More Food Campaign) ஒருபுறம் நடக்கிறது. தலைவர்களின் வேண்டுகோள்கள் ஒருபுறம்; பிற நாடுகளின் உதவி மற்றொரு புறம். இவ்வாறிருந்தும் உணவுப் பஞ்சம் ஆட்டிப் படைக்கிறது.

காரணமென்ன? அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை (Economic Policy)யில் உள்ள கோளாறுகள் தாம் காரணமாகும். அரசியலில் உள்ள குறைகளும், பொருளாதாரத்தில் உள்ள கோளாறுகளும் சேர்ந்து நம் நாட்டைப் பாழ்படுத்துகின்றன. ஆகவே, குறைகளும், கோளாறுகளும் போக்கப்பட வேண்டும்.

ஒரு நல்லநாடு பொருளாதாரத் துறையில் என்னென்ன முறைகளைக் கையாளும்; எந்தெந்த விதங்களில் உற்பத்தியைப் பெருக்கும் என்பதைக் காண்போம்: அரசாங்கம் எல்லாத் தொழில்களையும் தானே ஏற்று, வெற்றிகரமாக நடத்தும்; எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும்; உழைப்பவர்களுக்கு ஏற்ற ஊதியமும், வசிக்க வீடுகளும், இதர வசதிகளும் செய்து தரும்; அறிஞர்களின் திறமையைப் பயன்படுத்தி மேலும் உற்பத்தியைப் பெருக்க முயலும்; விஞ்ஞானத்தின் துணையை நாடும்; நாட்டில் கிடைக்கும் எல்லாச் சக்தி (Power)யையும் பயன்படுத்திக் கொள்ளும்; சில தொழில்களுக்குப் பாதுகாப்பு (Protection) அளிக்கும்......இவ்வாறு நடத்தி உற்பத்தியைப் பெருக்கும்.

ஒரு நாடு எல்லாத் தொழில்களையும் தேசீய மயமாக்கி, வெற்றிகரமாக நடத்துவது மிக இன்றியமையாதது. ஏனெனில், தனிப்பட்டவர்களிடம் தொழில்கள் சிக்கிக்கொண்டால், அவர்கள் தங்கள் விருப்பங்களுக் கேற்றவாறு தாம் தொழில்களை நடத்துவார்களே ஒழிய, நாட்டு மக்களின் நலனைக் குறிக்கோளாகக் கொள்ளமாட்டார்கள். முதலாளிகளிடம் தொழிற்சாலைகள் இருக்கும்வரை எந்த நாடும் உருப்படாது; சமமாகப் பணத்தைப் பங்கிட்டுக் கொடுக்க முடியாதபடியாகிவிடும்; சமூக நலன்களை அறவே புறக்கணிப்பர் முதலாளிகள்; ஒரு சிலரிடம் சிக்கிக் கொண்டிருப்பதால் கோடிக் கணக்கானவர்கள் வாடநேரிடும்; சமூகத்தில் புரட்சி ஏற்படுத்த உதவும். இதுதான் முதலாளித்துவ ஆட்சி என்று டாக்டர் ஈஸ்வர டோபா என்ற அறிஞர் "இந்தியாவை பற்றிய புள்ளி விவரங்கள்" (Facts About India) என்ற அருமையான நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, தனிப்பட்ட முதலாளிகளிடம் நம் நாட்டுத் தொழிற்சாலைகள் சிக்கிக்கொண்டு சிதைவதை உடனே ஒழித்தாக வேண்டும். ஆனால், முதலாளிகளுக்கு அபயம் அளிக்கப்பட்டுள்ளது; அவர்கள் எப்படித்தான் நம்மை ஆட்டிவைக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

ஆகவே, அரசாங்கத்தார் செய்ய வேண்டிய முதல் கடமை எல்லாவிதமான முக்கியமான தொழிற்சாலைகளை ஏற்று நடத்த வேண்டியதே. இன்னும் அரசாங்கத்திற்குப் பெரும் வருமானத்தைத் தரக்கூடிய சினிமா, சிற்றுண்டிச் சாலைகள், முதலானவைகளையும் ஏற்று நடத்தலாம். தேசீய மயமாக்கும்போது பல முக்கியமான பிரச்னைகளைக் கவனித்தல் வேண்டும். 'நேர்மையும் நல்லெண்ணமும் கொண்டுதான் தொழிற்சாலைகளைத் தேசீய மயமாக்க வேண்டும்' என்று அறிஞர் பெர்னார்ட் ஷா குறிப்பிட்டுள்ளார். மேலும், தேசீயமாக்கும்போது ஏற்படும் சிக்கல்களை நீக்குவதற்காக அந்தந்தத் தொழில்களில் அறிவுத்திறன் பெற்றவர்களை அதிகாரிகளாக நியமித்து, இரு கட்சிகளும் இணைந்துபோகுமாறு செய்தல் வேண்டும். தொழிற்சாலைகளைத் தேசீய மாக்குதல் முதற்படியாகக் கொள்வோம்.

இரண்டாவதாக, தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகுவதற்காக மேனாட்டு முறைகளை நம் நாட்டுக் கேற்றவாறு பயன்படுத்தி, அறிஞர்களின் துணையைக் கொண்டு, திட்டமாகவும் வெற்றிதரக் கூடிய வழியிலும் செயலாற்ற வேண்டும். பல கோடி ரூபாய் மூலதனம்போட்டு ஒரு தொழிற்சாலை மூடப்பட வேண்டிய மாதிரியில் வேலை செய்வது அறியாமையாகும். ஆகவே, திட்டம் வகுத்து, வெற்றிதரக் கூடியவாறு முயல வேண்டும்.

மூன்றாவதாக, தொழிற்சாலைகளில் உழைக்கும் மக்களுக்கு ஊக்கம் தரும் முறையில் அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். தொழிலாளர்கள் சாதாரண எளிய வாழ்வு நடத்தவும், குடும்பத்தைக் காப்பாற்றவும் கூடிய சம்பளமும், பஞ்சப்படியும் அளிக்கப்படவேண்டும். இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம், இலாபம் வரக்காரணமானவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில், அவர்களுக்கு வேண்டிய உடை, அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி முதலானவை தரப்படுதல் அவசியம். அவர்கள் வசிப்பதற்கென்று வீடுகள் கட்டித்தருதல் மிக இன்றியமையாதது. அவர்கள் வாழும் இடங்கள் சுத்தமாக இருக்க வேண்டி பிரசாரம் செய்ய வேண்டும். அத்தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு இத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும், அதிகப்படி செய்யும் வேலைக்கு அதிகப்படி




## நாடு வாழ...?

(முன் பக்கத் தொடர்ச்சி)

சம்பளம் தர வேண்டும் என்ற சட்டம், சில தொழிற்சாலைகளில் பெண்களும், சிறுவர்களும் வேலை செய்யக் கூடாது என்ற சட்டம், பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் விடுமுறையும், முழுச் சம்பளமும், இதர வசதிகளும்செய்து தரப்பட வேண்டும் என்ற சட்டம் முதலியவைகளால் தொழிலாளருக்கு நன்மை உண்டாக்கி பிற்காலத்தில் நோய் வாய்ப்பட்டாலும், தம் குடும்பத்தை அரசாங்கம் காப்பாற்றும் என்ற தைரியத்தை ஊட்டி, நாட்டின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற சகோதர மனப்பான்மையையும், நாடு வாழ வேண்டும். என்ற நல்லெண்ணத்தையும் உண்டாக்க வேண்டும். தொழிலாளிகளுக்கு இரவு பள்ளிகளும், வாசகசாலைகளும், வானொலிகளும் ஏற்படுத்த வேண்டும் சுருங்கக்கூறின் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு, நாட்டுக்கு உதவி செய்யுமாறு ஏற்பாடுகள் புரிய வேண்டும்.

அடுத்தபடியாக உயர்தரக் கல்வி, என்ஜினீரிங் கல்வி, விஞ்ஞானக் கல்வி முதலானவைகளைப் பெறுவதற்காக அறிவுக்கூர்மை வாய்ந்த மாணவர்களை அரசாங்கத்தாரே சாதி, மத பேதமில்லாமல் தேர்ந்தெடுத்துப் பிற நாடுகளுக்கு அனுப்பி, வசதிகள் செய்து, அவர்களின் அறிவாலும், மேனாட்டுப் பயணத்தால் பெற்ற அனுபவங்களாலும் நாடு பயன் பெறுமாறு செய்தல் வேண்டும். மேலும், நாட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்கக்கூடிய முறையில் அவர்கள் கல்வி பெற வேண்டும்.

உணவு உற்பத்தியிலும் அரசாங்கம் மேலே கூறியவாறு, அறிஞர்கள் உதவி, அயல்நாடுகளின் அநுபவம், விஞ்ஞானத்தின் துணை, அதிகாரிகளின் ஒத்துழைப்பு முதலானவைகளைப் பயன்படுத்தி, கூட்டுறவுப் பண்ணை முறைகளை வளர்த்து, பழையகால வழக்கங்களை ஒழித்து, புதுப்புது பயிர்களை விளைவித்து, ஏராள உற்பத்தியைப் பெருக்கவேண்டும். நம் நாட்டில் ஓர் ஏகரா நிலத்தில் சராசரி 1943-45-ல் 779 பவுண்டு நெல் விளைந்தது; இதாலியில் 3000 பவுண்டு விளைந்தது. ஏகரா சராசரி உற்பத்தியை அதிகமாக்க முயல வேண்டும். உழவர்கள் வசிக்கும் பிரதேசங்கள் சுகாதாரக் கேடாய் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். கிராமங்களில் அறியாமையைப் போக்க ஆவன செய்தல் மிக இன்றியமையாதது.

மேலும், தொழிற்சாலைகளில் அதிகமான மூலதனம் போடுமாறு அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்; வெளிநாட்டு மூலதனத்தையும் வேண்டுமானால்,விபரீதம் விளைவிக்காத முறையில், வெளிநாட்டு ஆதிக்கத்தை உண்டாக்காமல், பெற்றுக் கொண்டு பயன் பெறலாம். நாட்டில் ஆங்காங்கு கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உலோகங்களை நல்ல முறையில் ஆராய்ந்து மக்களுக்குப் பலன் படுத்தவேண்டும். நதிகளிலிருந்து கிடைக்கும் ஹைட்ரோ எலெக்ட்ரிக் சக்தி முழுவதையும் பயன்படுத்தினால் தொழிற்சாலைகளை நடத்துவது மிக எளிதாக ஆகிவிடும். மேலும், இந்தியாவின் பரப்பில் ஐந்தில் ஒரு பாகமாக விளங்கும் காடுகளை நல்ல வகைகளில் பயன் படுத்திக் கொள்ளல் அவசியமாகும். எல்லாவற்றையும் விட பெரிய பிரச்னையாக விளங்கும் ஜனத்தொகை பிரச்னையை உடனே கவனித்தல் இன்றியமையாதது. அபரிமிதமாக வளர்ந்துகொண்டுவரும் ஜனத்தொகையைப் பிறநாடுகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலமும், திருமணக் சட்டங்களை ஏற்படுத்துவதன் மூலமும் கட்டுப்படுத்தலாம், ஓரளவிற்கு. நாட்டிற்கு வேண்டிய நல்ல திட்டங்களை வகுக்க மாகாணங்களில் எல்லாம் ஆராய்ச்சிக் கழகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றின் யோசனைகளை ஏற்று நடக்க வேண்டும்.

நம் நாடு வாழ, நாட்டு மக்கள் வாட்டம் தீர, பஞ்சம் தொலைய, ஒளியிழந்த கண்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்க, நடைப்பிணங்கள் காளைகளாக வேண்டுமானால் பொருளாதாரத்துறையில் அரசாங்கம் நாட்டம் செலுத்துதல் வேண்டும். உற்பத்தி பெருகுறதற்காக எல்லாவிதமான உதவிகளும் செய்து தர வேண்டும்; ஒரு சிறந்த பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட்டு அதன்படி நாட்டை வளப்படுத்த வேண்டும். நாட்டு மக்களைப் பிடித்து வாட்டும் எல்லாப் பிணிகளுக்கும் மூல காரணமான அறியாமைப் பிணியை உடனே ஒழித்துக்கட்ட வேண்டும். அறிஞர்களின் உதவியால் நாட்டை வளப்படுத்த வேண்டும்; ஏட்டுச்சுரைக்காய்த் திட்டங்களைத் தீட்டுவதோடு நில்லாமல், அவைகளை நிறைவேற்றவும் வேண்டும். மொத்தத்தில் பொருளாதாரத் துறையில் புரட்சிகரமான திட்டம் வகுத்தால்தால் தான் புதுவாழ்வு பெற வேண்டும். அப்படிப் புரட்சிகரமான திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால் மத்திய அரசின் இரும்புப் பிடி விலகவேண்டும். மாகாணங்களுக்குத் தம் மாகாணங்களுக்கேற்றவாறு திட்டம் தீட்டும் சுதந்திரம் தரப்பட வேண்டும். மொத்தத்தில் மாகாண சுயாட்சி வேண்டும்; மத்திய அரசின் தளை நீங்க வேண்டும்; அறியாமை ஒழிய வேண்டும்; அறிவு வளர வேண்டும்; பஞ்சம் போக வேண்டும்; பகுத்தறிவு செழிக்க வேண்டும்; விஞ்ஞானம் வீறுபெற வேண்டும்; மூடநம்பிக்கைகள் முறியடிக்கப்பட வேண்டும்; உற்பத்தி பெருக இவைகளைக் கைப்பிடிக்க வேண்டும்; நம் நாடு வாழ வேண்டும்; நானிலம் நலன் பெறவேண்டும்..

பொடியென்றால் இவை வேண்டும்!

கண்ட உடன் எடுக்கச்செய்யும் நிறம்
எடுத்த உடன் போடச்செய்யும் மணம்
போட்ட உடன் மகிழச்செய்யும் குணம்
மகிழ்ந்த உடன் புகழச்செய்யும் திறம்

REGD TRADE MARK

T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151. வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

# அதிசயம்; ஆனால் உண்மை!

## சுட்டிப் பயல்!



இந்தப் பையனுடைய வயது 4 தான்; இவன் பெயர் பில்லி வால்ட்டர். இவன் சொந்த ஊர் அமெரிக்காவிலுள்ள செயிண்ட் லூயி என்னுமிடம். இந்த நாலுவயதிலே இந்தச் சுட்டிப் பயல் நல்ல காரசாரமான 15 சுருட்டுகளைத் தினந்தோறும் பிடிக்கிறான். இவ்வாறு சுருட்டுப் பிடிப்பதால், இவன் மயக்கமுற்றுவிழுவதுமில்லை; இவனுக்கு எந்த விதமான கெடுதலும் செய்வதில்லை! இவன் இவ்வாறு சுருட்டுப் பிடிப்பதற்குக் காரணம் என்னவென்பதும் தெரியவில்லை. இவன் பெற்றோரும் இவனைத் தடுத்து நிறுத்துவதுமில்லையாம்.

## ரப்பர் மனிதன்!

ஆப்ரிக்காவிலே ஏராளமாக ரப்பர் உற்பத்தியாகிறது. அங்குள்ள நீக்ரோவர்களே ரப்பர் உறபத்தி செய்வதற்கு மூல காரணம். ரப்பர் பால் எடுத்து, அந்தப்பாலை நீக்ரோவர்தேகத்திலே ஊற்றிநெடுநேரம்காயவைக்கிறார்கள். ரப்பர் பால் நன்றாகக் காய்ந்து இறுகிய பின், அந்தரப்பரை தேகத்திலிருந்து திரட்டி எடுத்துப் பந்துகளாக உருட்டி ஏற்றுமதி செய்யக்கொடுத்துதவுகிறார்கள். இந்தமாதிரி ரப்பர் உற்பத்தி செய்யும் நீக்ரோவர் ஏராளமாக இருக்கிறார்கள். நீக்ரோ குடும்பங்களிலுள்ள ஆண், பெண், குழந்தை குட்டிகள் எல்லோரும் சிற்சில சமயங்களில் ரப்பர் மனிதர்களாக மாறிவிடுகிறார்கள. ரப்பர் பால் காய்ந்து, இறுகும் வரையில், அவர்களைப் பார்த்தால் ரப்பர் மனிதர்களாகவே காட்சியளிப்பார்கள்! குழந்தை குட்டிகள் ரப்பர் பொம்மைகளைப்போல் துள்ளி ஆடுவார்களாம்!



## இவர் யார் தெரியுமா?

இவர்தான் 1389-ம் வருடம் துருக்கியை ஆண்டுவந்த முதலாவது பஜாஸெட் சுல்தான்.



இவரை டாமர்லேன் என்னும் மற்றொரு முஸ்லிம் மன்னர் போரில் ஜெயித்து, கால் கைகளுக்கு விலங்குகள் பூட்டி, இரும்பு சங்கிலியால் பிணைத்து ஒரு கொடூர மிருகத்தைப்போல் இரும்புக் கூண்டில் அடைத்து, டாமர்லேன் ராணுவத்துடன் இழுத்துக்கொண்டு போகப்பட்டாராம்!

## பலே பேர்வழி!

இவர் பெயர் வில்லியம் பெடன். அமெரிக்காவில் மினேபலிஸ் என்னுமிடத்திலுள்ளவர். 1931ம் வருடம் இவர் சைக்கிளில் மணிக்கு 81 மைல் வீதம் சென்றாராம்! சைக்கிளில் இந்த வேகத்தில் சென்றவர்கள் யாராவது உண்டா?



## விவசாய மசோதா

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

பயிர்க்கணக்குப் பதிவதும், கிராமச் சாவடிகளில் பயிர் செய்திருப்பதை (ரெவினியூஇன்ஸ்பெக்டர்)மேற்பார்வையிடுவதும் ஒழிந்தாலன்றி உண்மையான கணக்கு வெளிப்படா. 35 லட்சம் வானமாரி பார்த்த நிலங்கள் பயிரிடப் பெறாத முன் (1947-48 வருடத்தைவிட இவ்வருடம் (1948-49) விளைச்சல் குறைவு என்று கணக்குக் காட்டப்பட்டால், அக்கொடுமையை என் சொல்வது!! இம்மறைவு ஒழிவு தீர நிர்வாகம் சீர்பட வேண்டும். கிராமக் காங்கிரஸ் சபை, கிராம உணவுக் கமிட்டி, கிராம அதிகாரிகளின் உதவியுடன் பயிர்க் கணக்கைத் தயாரிக்க வழியுண்டாக்க வேண்டும். நெல் விளையும் கிராமங்களில் அல்லது, எல்லாக் கிராமங்களிலும் உணவுப்பங்கீட்டைத் தளர்த்தி விலைக் கட்டுப்பாட்டை (கோட்டை விலை இதற்கு மேல் இருக்கக் கூடாது) உறுதிப்படுத்த வேண்டும். இதனால் லட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு பிழைப்பு உண்டாகின்றது. சில ரேஷன் ஆபீஸர்களுக்காக மக்கள் அவதிப்படுவதா?

3. விவாசயப் பிற்போக்கு :—

வேதாகமத்தில் விதைக்கிறவன் உவமையை நோக்கினால் ஒரு உண்மை புலனாகின்றது. நல்ல நிலத்தில் ஒன்று முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் பயனளித்ததைப் பார்க்கிறோம். 1 மரைக்கால் விதைக்கு ஒரு கோட்டை (21 மரக்கால்) அறுவடையாவது மேனிபெனப்படுகிறது. அப்படியானால் ஒன்று முப்பதாகப் பயனளிக்க சுமார் 1½ மேனி விளைச்சல் தேவை. இது தான நமது நாட்டின அதிக விளைச்சலாக அமைகிறது. ஆனால், ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, சோவியத் ரஷியா முதலிய நாடுகளில் 3 மேனி (ஒன்றுக்கு அறுபது) 5 மேனி (ஒன்றுக்கு நூறு) விளைச்சல் அறுவடையாவதைக் கேட்கிறோம்; அதன் பயனாகவே பல கோடி ரூபாய்களை வீசி உணவுப்பொருள் கொள்முதல் செய்து வருகிறோம். அந்நிய நாட்டில் உணவுப் பொருட்களுக்காகச் செலவழித்த பணத்தை இந்நாட்டில் உணவு உற்பத்திக்காகச் (முன்னேற்றமான முறையில்) செலவு செய்தால் அது நிரந்தரப் பயனையும், நாட்டுக்கு மேன்மையையும் உண்டாக்குமல்லவா?

அதை எங்ஙனம் நிறைவேற்றுவது?

விவசாயக் கலாசாலையில் பயின்று முன்னேற்றமான முறைகளைக் கற்றுத் தேர்ந்த விவசாய டிமான்ஸ்ரேட்டர், முடிவில் ஆபீசில் அமர்ந்து, உரம் விற்கும் வியாபாரியாகவும், மனுப்பார்வையிடும் மாஜிஸ்டிரேட்டாகவும் மாறிய கொடுமை ஒழிந்து, அவர் ஓரிடத்தில் சில சிப்பந்திகளை (ஏன் பயிற்சி பெற முன் வரும் சில விவசாயிகளையே) உழைப்பாளிகளைக் கொண்டு மாதிரிப் பண்ணைகளை அமைக்கவேண்டும். ஆங்கு உரம் சேகரித்தல், நல்ல விதை தயாரித்தல், மாற்றுப்பயிர், புண்ணுக்கு உரம் உபயோகித்தல், டிராக்டர் முதலிய கருவிகளை உபயோகித்தல் முதலிய பயிற்சிகளோடு கூடிய அனுபவப் போதனை நடைபெற வேண்டும. இப்படிப்பட்ட மாதிரிப்பண்ணை ஒவ்வொரு கிராமப் பஞ்சாயததுக்கு ஒன்று வீதமாக ஏற்பட்டு ஆறு. ஏழு பண்ணைகளை மேற்பார்வையிட அல்லது. ஆலோசனை கூற ஒரு டிமான்ஸ்ரேட்டர் வீதம் நியமிக்கப்பட்டால், விவசாயம் பெரும் முன்னேற்றமடையும். இம்மாதிரிப் பண்ணைகளைப் பார்த்து மற்றவர்களும் அம்முறைகளைக் கையாள முற்படுவர்.

“சொல்லுதல் யார்க்கும்
எளியவாம்—அரியவாம
சொல்லிய வண்ணம் செயல்”

என்ற வள்ளுவர் வாக்குப்படி. சட்டமியற்றலும் பிரசங்கம் செய்தலும் பயன் பெறுவதை விட செயல் முறை சீர் உண்டாக்கும் என்பதே துணிவு.

ஆகையால், இம் மசோதாவின்படி பயிரிடப்படாத நிலங்களைக் கைப்பற்றி விவசாயிகளிடம் கொடுக்கும்போதே அவர்களுடைய எளிமையையும், வேறு கதியின்மையையும் லேவாதேவிக்காரர் பயன்படுத்திக்கொள்ள இடங்கொடாமல் சர்க்கார் அவர்களுக்குக் கூட்டுறவு முறையில் நிதி, இதர வசதிகளளித்து அறுவடையில் அதற்கு ஈடான தொகையைத் தானியமாகக் கொள்முதல் செய்வது விவசாயிகளுக்கு நன்மை யளிப்பதுடன். பொதுவுடைமை, சோஷியலிசக் கொள்கையையும் மாற்றியமைக்கும்.

நிற்க, விரிவாக நிலம் அமையும்போது (20 முதல் 100. ஏர்கர்வரை) கூட்டு முறையில் விவசாயப் பண்ணையை அமைத்துப் பொதுவுடைமையின் சிறப்பைத் தெளிவாக்குவதும் அரசாங்கத்தின் கடமையாகும். மதுவிலக்கால் வேலையில்லாது தவிக்கும் ஏராளமான மக்களை இம்மாதிரிக் கூட்டு முயற்சிகளில் பயன் படுத்தி நாட்டை வசப்படுத்துவதுடன், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்கலாம். உற்பத்தியும் அதிகமாகப் பெருகும்.

சர்க்கார் கூடிய மட்டும் இம் மசோதா ஒழுங்கான முறையில் நிறைவேற்றப்பட ஒழுங்கு செய்தால், உணவு உற்பத்தி பெருகிப் பற்றாக் குறை தீர்வதுடன், பொதுவுடமைப் பீதியும், சோஷிலிஸக் குழப்பமும் நாளடைவில் குறைந்து, மக்களின் நன்மை பெருகும்.

“உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்.

## நெருப்பும் பனியும்!

மெக்ஸிகோவில் “கொலிமா” என்னும் ஒரு பெரிய எரிமலை இருக்கிறதாம்! இந்த எரிமலை திடீரென்று புகை கக்குமாம்! ஆனால்; நெருப்பைக் கக்குவதில்லை; அதற்குப் பதிலாக பனிக்கட்டிகளைக் கக்குமாம்! இப் பனிக்கட்டிகள் உருகி, குளிர்ந்த தண்ணீராக ஓடுமாம்! இதுமட்டுமல்ல; இந்த அபூர்வமான எரிமலையைச் சுற்றியுள்ள நகரங்களில் திடீர் திடீரென்று ஒருவித கற்கள் எரிமலையிலிருந்து வந்துவிழுமாம்! அந்தக் கற்களைச்சேகரித்துவைத்து மற்ற தேசத்தினருக்கு விற்று வருகிறார்களாம்!



**N. V. S. பட்டணம் பொடி** :-: **N. V. S. பட்டணம் பொடி**

## இந்தியாவின் மிகப் பெரிய கம்பெனியின்




## இணையற்ற பட்டணம் பொடி

# N. V. S. ஒன்றே N. V. S.

அன்பர்கள் மனதை இன்புறச் செய்வது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

அறிவாளிகள் நிதமும் மறவாமல் உபயோகிப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

கனவான்கள் தினந்தோறும் களிப்படைய விரும்புவது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

தனியர் முதல் வறியர் வரை தவறாமல் ஏற்கப்படுவது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

உழைப்பாளி மக்கட்கு உறுதுணையானது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

பாட்டாளி மக்களின் மனதைப் பரவசப்படுத்துவது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

ஓவியர் தம் சிந்தனையை ஓங்கச் செய்வது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

நடிகர்களுக்கு நடிப்பில் நாட்டம் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

கவிஞர்களின் கருத்துக்கு உறுத்தாகியது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

எழுத்தாளரின் எழுத்தோட்டத்திற்கு
இன்றியமையாதது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

வர்த்தகர்கட்கு வருவாயைத் தருவது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

விற்பனையாளர்கட்கு நற்பலன் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

ஏஜண்டுகளுக்கு ஏற்றத்தை உண்டாக்கியது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

போட்டவுடன் தங்களுக்குப் புத்துணர்ச்சி கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

போட்டவர்கள் மறுபடியும் கேட்டு வாங்குவது
NVS பட்டணம் பொடி ஒனறே!

உறக்கத்தை துரத்தி ஊக்கத்தைக் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒனறே!

உணர்ச்சியைப் பெருக்கி உற்சாகத்தைக் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒனறே!

சோர்வை அகற்றிச் சோபையைக் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

மறதியை விரட்டி மனோலயத்தைக் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

குணத்தைக் கொடுத்து குதூகலிக்கச் செய்வது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

மணத்தைப் பரப்பி மகிழ்விக்கச் செய்வது
NVS பட்டணம் பொடி ஒனறே!

சோம்பலை நீக்கிச் சுருசுருப்பைக் கொடுப்பது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

பொன்னிறப் பொலிவால் பொற்பதக்கம் பலபெற்றது
NVS பட்டணம் பொடி ஒனறே!

தத்துவமுணர்ந்து தயாரிக்கும் தன்மையால்
எத்திசையும் பரவியது
NVS பட்டணம் பொடி ஒன்றே!

## N. V. சண்முகம் கம்பெனியார்

**தபால் பெட்டி 555** :: **மதராஸ்-21**

**N. V. S. பட்டணம் பொடி** :-: **N. V. S. பட்டணம் பொடி**

N. V. S. பட்டணம் பொடி :: N. V. S. பட்டணம் பொடி :: N. V. S. பட்டணம் பொடி

N. V. S. பட்டணம் பொடி :: N. V. S. பட்டணம் பொடி :: N. V. S. பட்டணம் பொடி

Edited, Printed and Published by, P. ALBIN FERNANDO at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. Madras.